கல்கி

KALKI
20.7.97
ரூ. 4.00



பூலான் தேவி
சிறப்புப் பேட்டி!



காதல் - கல்யாணம்;
சிரித்தேன் - அழுதேன்;
பார்த்த விபத்து - சிக்கிய விபத்து;
சவாலும் - சமாளித்ததும்...

— ரூபஸ்ரீ கூறுகிறார்...



ரிசர்வ் செய்து விட்டீர்களா?

- ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், சி. சுப்ர மண்யம், மன்மோகன் சிங் பேட்டிகள்.
- இரா. செழியன், சுவாமி கமலாத்மா னந்தர் கட்டுரைகள்.
- கோவை வேளாண் பல்கலைக் கழகம்; குஜராத் அமுல் நிறுவனம் - வெற்றிக் கதைகள்.
- லால்குடியில் காந்திஜி, வெள்ளையர் நீதி, கதரின் கதை - சுவையான தகவல்கள்...

— இவையெல்லாம் 'சாம்பிள்'தான்!

இன்னும் ஏராளமான விஷயங்களை எளிமையாய்த் தருகிறது :

இன்றே கல்கி விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள். வழக்கமான கல்கி அளவில் 320 பக்கங்கள். விலை ரூ. 30/-. பதிவுத் தபாலில் பெற ரூ. 13/- சேர்த்து அனுப்ப வேண்டும். கடைசி தேதி: ஆகஸ்ட் 11.

கல்கி சுதந்தரப் பொன்விழா மலர்



ஜெ. பயணம்: அனுதாபம் திரும்புமா?

கடந்த பொதுத் தேர்தலில் மாபெரும் தோல்வியைத் தழுவி ஆட்சிப் பொறுப்பை இழந்தபின் ஜெயலலிதா சென்னைக்கு வெளியே சென்று கலந்து கொண்ட முதல் நிகழ்ச்சிதான் சேலம் விசிட்.

● சென்னையிலிருந்து காரிலேயே புறப்பட்ட ஜெ. நள்ளிரவு வாக்கில் சேலம் மாவட்டத்தின் நுழைவாயிலான 'தலைவாசல்' ஊரில் நுழைந்தபோது அந்த நேரத்திலும் மக்கள் சிலர் ஜெ.வைப் பார்க்கக் காத்திருந்தது வியப்பான விஷயம்தான்!

● பழைய மாண்புமிகுகளும், முன்னாள் வாரியங்களும் எம்.பி., எம்.எல்.ஏக்களும் போட்டி போட்டுக் கொண்டு வாகனங்களில் தங்களது பெயர்கள் பொறிக்கப்பட்ட பேனர்களைக் கட்டிக் கொண்டு ஆட்களோடு வந்து விட்டனர்.

● தி.மு.க மாநாடு முடிந்து ஒரு வாரம் கூட ஆகி முடிந்திராத நிலையில் இன்னமும் பிரிக்கப்படாத வளைவுகள், பேனர்கள் மத்தியில் மிரட்சியுடன் சேலம் வாசிகள் இருக்கும்போதே அ.தி.மு.க. வினரும் மாநகரைத் தங்கள் பங்குக்கு ஜூஸ் பிழிய ஆரம்பித்து விட்டனர்!

● மாலை ராகு காலத்திற்குப் பிறகு தலைவி மேடையில் தரிசனம் தருவார் என்று செய்தி பரவியதும் கூட்டம் கூடத் தொடங்கியது. மிகக் குறைந்த போலீஸ் பாதுகாப்பு என்பதால் பழைய தடபுடல்களெல்லாம் இல்லாமல் மக்கள் ஜெ.வைப் பார்க்க முடிந்தது.

● திருமண வீட்டில் முகூர்த்த நேரத்தை நினைத்துப் பதற்றப்படும் மணமகளின் தகப்பன் போன்ற டென்ஷனில் ஒரே ஒருவர் மட்டும். அவர்தான் முன்னாள் அமைச்சர் செல்வ கணபதி. மற்ற முன்னாள்களுக்கும் அம்மா கண்ணில் பட்டு விட வேண்டும் என்ற படபடப்பு இல்லாமல் இல்லை.

● பாதுகாப்புக்கு என்று போடப்பட்டிருந்த ரெடிமேட் தொண்டர் படை எவ்வளவோ முயன்றும், அந்தக் குறுகலான தெருவில் முண்டி அடித்துக் கொண்டு முன்னேறி அலைமோதியது கூட்டம். திபு திபுவென்று கூட்டம் மேடையை நோக்கி முன்னேற, மிதிப்பட்ட பத்திரிகையாளர்கள் விட்டால் போதும் என்று பின்வாங்கினார்கள். செல்வகணபதி, கூட்டத்தைப் பார்த்து கை கால் உதறி, தலைக்கு மேலே இருகரம் கூப்பி 'உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். சற்று அமைதியாக இருங்கள்' என்று எவ்வளவோ மன்றாடியும் அமளி நின்றபாடில்லை.

● அடுத்து காலில் விழும் வைபவம் அரங்கேறியது. போனால் போகிறது என்று நெடுஞ்செழியன், சேடப்பட்டிக்கு மட்டும் விலக்கு. நடமாடும் பல்கலைக் கழகத்தின் பேச்சைக் கேட்பதிலெல்லாம் கூட்டத்துக்கு ஆர்வமில்லை.

● தலைவி உரையாற்ற - மன்னிக்கவும், படிக்கத் துவங்கினார். கூட்டம் மேடைக்குக் கீழேயே வந்துவிட ஒளி, ஒலியாளர்கள் தங்கள் பொருட்களை பாதுகாத்துக் கொள்ளப் படாத பாடுபட்டார்கள். நெருக்கடியில் 2, 3 பேருக்கு மயக்கம். "எதிர்க்கட்சிகாரர்கள் 15 - 20 பேர் மட்டும் செய்யும் சில தவறுகளால் மேடை முன்பு சிறிது கலாட்டா. நீங்கள் எல்லாம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தங்கள். அமைதியாக உட்காருங்கள்" என்று ஜெயலலிதா கூறியபோது அதற்கும் கைதட்டல், விசில் சத்தம்தான்!

● ஜெ. தாம் ஜெயிலில் பட்ட 'கஷ்டங்களை'யெல்லாம் கூட்டத்தினரிடம் சொன்னபோது, கூட்டத்தினர்

அனுதாபத்துடன் கேட்பது போல் இருந்ததில் ஜெவுக்கு ஏக திருப்தி.

● ஜெ. கூட்டத்துக்கு வந்தவர்களில் கணிசமானபேர் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்ட வாடகை ஆட்கள் என்று சொல்லப்பட்டாலும், கூடிய கூட்டம் ஜெ.வே கூட எதிர்பார்க்காத அளவுக்குக் கூடிய கூட்டம்தான்!

● தலைவி கூட்டத்தினருக்கு 'டாட்டா' காட்டிவிட்டு சீட்டில் உட்கார்ந்த வுடனேயே கூடவே தண்ணீர் சுமந்து வந்த சிறு வனிடம் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்தார். தம்ளரைக் கொடுத்துவிட்டு அவனிடம் என்ன சொன் னாரோ, அது அந்தப் 14 வயது பையனுக்குப் புரியவில்லை. அதற்காகச் சுர்ரென்று ஒருமுறைப்பு, சிறுவன் அரண்டு விட்டான்!

● புரட்சித் தலைவி இரவு தங்க லாட்ஜுக்கு மட்டும் ரூ. 34,000 வாடகை, சாப்பாட்டு பில் ரூ. ஒரு லட்சம் என்று தீவிர பக்தர் ஒருவரின் பெருமையான தகவல். நல்லவேளை உடன் பிறவா சகோதரி வராததால் இந்த மட்டில் தப்பித்தோம் என்ற நிம்மதியும் இருந்தது.

● அ.தி.மு.க. தலைவர்களில் இருந்து அடிமட்டத் தொண்டர்கள் வரை ஓர் அசாத்தியமான நம்பிக்கை: மத்தியில் ஐ.மு. அரசு ரொம்ப நாள் தாக்கு பிடிக்காது. அப்படியான அடுத்த நாளே இங்கு கருணாநிதி ஆட்சி டிஸ்மிஸ்! மறுபடியும் தேர்தல்! மீண்டும் புரட்சித் தலைவி ஆட்சி!

— ஜெகதீஸ்

படம் : ஆர். சௌந்தர்ராஜன்



"கடவுள் ராணியைக்



— ஹாங்காங் இணைப்பு பற்றி நேரடி ரிப்போர்ட்



ஹாங்காங் சீனாவுக்கு கைமாறிய நிகழ்ச்சியைக் காண, இந்தியாவில் இருந்து அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த ஐவர், ஹாங்காங் சென்றிருந்தார்கள். அந்த ஐவரில் ஒருவரும் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எல். சந்தானம், இங்கு தமது அனுபவங்களைச் சொல்கிறார்.

இரண்டாம் உலகப் போரின் போது காயம் பட்ட ராணுவ வீரர்களுக்கு சிகிச்சை அளிக்கப் போதுமான டாக்டர்கள் இல்லாமல் சீனா அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது, இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருந்த நேதாஜி, டாக்டர் கோட்னீஸ் என்பவர் தலைமையில் மருத்துவக் குழு ஒன்றை அனுப்பினார். போர் முடிந்தும் கூட கோட்னீஸ் சைனாவிலேயே தங்கி, தமது சேவையைத் தொடர்ந்தார். இப்படியாக நேதாஜிக்கும் சைனாவுக்கும் தொடர்பு இருந்தது. அதன் தொடர்ச்சியாக சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பார்வார்டு பிளாக் கட்சிக்கும் நல்லுறவு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் எங்களை அழைத்திருந்தது சீன கம்யூனிஸ்ட் கட்சி.

சென்ற மாதம் 30-ம் தேதி காலை பதினொரு மணி அளவில் பெய்ஜிங்கிலிருந்து புறப்பட்ட நாங்கள், ஹாங்காங் கௌலூன் வளைகுடாவில் உள்ள கைடாக் விமான தளத்தில் சென்று இறங்கினோம். விமான நிலையத்திற்கு வெளியே தெருக்களில் சென்ற மக்களைப் பார்த்தபோது, அவர்கள் முகத்தில் கொப்பளித்த மகிழ்ச்சியைப் புரிந்து கொள்ள முடிந்தது. நாங்கள் கிராண்ட் ராக்கன் என்னும் ஹோட்டலில் 13 வது மாடியில் தங்க வைக்கப்பட்டோம். அங்கிருந்து பார்க்கும் போது ஹாங்காங் பிரமிக்க வைத்தது. இருநூறு தீவுகளைக் கொண்டது ஹாங்காங். இருக்கும் நிலப்பரப்பைக் கொஞ்சமும் வீணாக்காமல் பரிஇல மாடிக் கட்டடங்களைக் கட்டியிருந்தார்கள். எங்களுடைய மொழி பெயர்ப்பாளர்களாக வந்த தாங் என்பவரும் யாங் என்ற பெண்மணியும், ரொம்பவும் குஷியாக இருந்ததால் அடிக்கடி மொழி பெயர்ப்பைக் கூட மறந்து மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

நிகழ்ச்சிகள் நடந்த தாமர் தளம், பிரிட்டிஷ் இளவரசர் மாளிகை வளாகத்தில் இருக்கிறது. சீனாவும், பிரிட்டனும் இணைந்து தயாரித்த அட்டவணைப்படி நிகழ்ச்சிகள் நடந்தன. எல்

காப்பாற்றுகிறார்!”



'லாம் குறித்த நேரப்படி, சரியாக நடந்தது. இரவு 11.30 மணிக்கு; 'கடவுள் ராணியைக் காப்பாற்றுகிறார்' என்ற பின்னணி இசை முழங்க யூனியன் ஜாக் கொடி கீழே இறக்கப்பட்டது. அப்போது பிரிட்டிஷின் கடைசி கவர்னராக ஹாங்காங்கில் இருந்த கிரிஸ் பேட்டன் மற்றும் இளவரசர் சார்லஸ் கண்களில் கண்ணீர் கசிந்ததைப் பார்க்க முடிந்தது.

அடுத்து சரியாக 12.20க்கு சீன தேசிய கீதம் பாடப்பட்டு, அவர்களது தேசியக் கொடி ஏற்றப்பட்டது. அதன் பிறகு Convention Centre என்ற மண்டபத்தில் பிரமாதமான விருந்து.

சீன மக்களின் மரபுகளும், மேற்கத்திய நாகரிகத்தின் நடைமுறைகளும் சரியான விகிதத்தில் கலந்து செயல்படும் பூமிதான் ஹாங்காங். ஹாங்காங் சீனாவுக்குக் கைமாறி விட்டதால், தாங்கள் விடும் ஜனநாயக மூச்சுக் காற்று அடக்கப்பட்டு விடுமோ என்று பயந்த ஹாங்காங் வாசிகளும் உண்டு. அது போன்ற சிந்தனையைக் கொண்ட மக்கள் 30ம் தேதி அன்று ஹாங்காங்கில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஆனால் போலீஸ் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் கோஷம் விழாவைக் காண வந்திருக்கும் வெளிநாட்டு வாசிகளுக்கு கேட்டுவிடப் போகிறதே என்று, போலீஸ் வேன்களில் இருந்து பீதோவனின் இசைத் தட்டுக்களை சத்தமாகப் போட்டார்கள். ஆனால் ஜனாதிபதி ஜியாங் ஜெமின் மிகத் தெளிவாகவே, "இது வரை கடைப்பிடித்து வந்த அடிப்படைச் சட்டங்கள், ஹாங்காங்கில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்!" என்று சொல்லி விட்டார்.

ஜூலை ஒன்றாம் தேதி பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மன்றத்தில் (Great hall of the people) ஒரு மாபெரும் விருந்து நடந்தது. நாங்களும் கலந்து கொண்டோம். ஹாங்காங்கில் நடந்த கோலாகலங்கள் பெய்ஜிங்கிலும் தொடர்ந்தன. அங்கு இருந்த டியானமென் சதுக்கத்தில் மூன்று லட்சம் பேர் திரண்டிருந்தார்கள். தொடர்ந்து மணிக் கணக்கில் நடைபெற்றது வாண வேடிக்கை. விருந்தில் பேசிய பிரதமர் லி பெங், "எங்களது அடுத்த குறி தைவான். அந்தப் பகுதி எங்களுடன் சேர்ந்தே ஆக வேண்டும்" என்று ஆணித்தரமாகச் சொன்னார். அன்று நடந்த விருந்தில் பெரும்பாலோர் விரும்பிச் சாப்பிட்டது என்ன தெரியுமா?

பாம்பு ஜூஸ்!

சந்திப்பு : ஸ்ரீநிவாசன்



போட்டிகளில் தடை மற்றும் 30 லட்சம் டாலர் அபராதம், இவற்றோடு டைசனின் தண்டனை முடிந்துவிடவில்லை...

ஹாலிவுட் மெழுகு மியூசியத்தில் "விளையாட்டு"ப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசனின் உருவம். இப் போது அது "ராட்சதர்கள்" என்ற பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதுவும் 'கானிபல் லெக்டார்' என்ற மிகக் கொடுமையான பாத்திரத்தின் அருகில் (ஆஸ்கார் விருது பெற்ற 'சைலன்ஸ் ஆஃப் தி லாம்ப்ஸ்' படத்தில் இந்தப் பெயர் கொண்ட - வக்கிர குணம் கொண்ட கொலைகார, முன்னாள் மனவியல் மருத்துவராக ஆன்டனி ஹாப்கின்ஸ் நடித்தது நினைவிருக்கலாம்).

தம்முடன் பந்தயத்தில் மோதிய ஹோலிபீல்டின் காதுகளை மைக் டைசன் கடித்ததைத் தொடர்ந்துதான் இந்த மாற்றம்.

இது மட்டுமல்ல, டைசன் பல விதங்களில் அமெரிக்காவில் கேலிப் பொருளாகி வருகிறார்.

ஒரு தனியார் தொலைக் காட்சி சானல் 'கடி' என்ற வார்த்தை இடம் பெற்றிருக்கும் பாடல்களாக ஒளிபரப்பி டைசனுக்கு 'கௌரவம்' சேர்த்திருக்கிறது.

தமது காதை தாற்காலிகமாகச் சரிசெய்து கொண்டிருக்கும் ஹோலிபீல்ட் முன்னரே திட்டமிட்டிருந்தபடி தென்னாப்பிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைச் சந்தித்தார். (மண்டேலாவே கூட ஒரு முன்னாள் குத்துச் சண்டை வீரர்தான்). மூன்றாவது முறையாக உலக சாம்பியனாக ஆகியிருக்கும் ஹோலிபீல்டைப் பாராட்டிய மண்டேலா மைக் டைசன் பற்றி அவரிடம் எந்தக் கருத்தும் கூறவில்லை.


ஆனால் மற்றொரு முன்னாள் பிரபலமான முகமது அலியால் அப்படி இருக்க முடியவில்லை. "நீங்களும் மைக்டைசனும் இப்போது மோதிக் கொண்டால் என்ன நடக்கும்?" என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்க, முகமது அலியால் சிரிப்பை அடக்கிக் கொள்ளவே முடியவில்லையாம். பிறகு "டைசனுக்கு இது இல்லை" என்றார். 'இது' என்றபடி அவர் சுட்டிக் காட்டியது மூளைப் பகுதியை.

டைசன் குடியிருக்கும் க்ளீவ்லாண்ட் பகுதியில் சாலையோரத்தில் இளைஞர்கள் குத்துச்சண்டை நாடகங்கள் போடுகிறார்கள். அதில் காதுக் கடி மற்றும் ஒப்புக்கு மன்னிப்புக் கோரும் காட்சிகள் தவறாமல் இடம் பெறுகின்றன.

கடந்த இரு முறைகளாக உலக சாம்பியன் பட்டத்தை இழந்தது டைசனுக்கு வீழ்ச்சி அல்ல. கற் பழிப்பும், காதுக் கடி சம்பவங்களும் தான் அவரது நிஜ வீழ்ச்சி.

— ஜி.எஸ்.எஸ்.

எல்லாமே எளிதாக, மிக வசதியாக மாறிவரும்போது, உங்கள் கியாஸ் ஸ்டவ் மட்டும் அப்படியே இருக்க வேண்டுமா?



கியாஸ் அடுப்பைப் பற்ற வைக்கப் படும் பாடு இனி மேல் உங்களுக்கு இருக்காது. ஏனெனில் உங்களுக்கு உதவ வந்துள்ளது - ஸ்பார்க்கி - இந்தியாவின் முதலாவது ஆன்-ஸ்டவ் கியாஸ் இக்னைட்டர். இதை உங்களுக்கு வழங்குவது, கேப்ஸன்ஸ் குரூப் - LPG அடிப்படையிலான சாதனங்களுக்கு முன்னோடியாக, 20 வருட அனுபவம் கொண்டவர்கள் ஆயிற்றே !

ஸ்பார்க்கி - நீண்ட காலம் உங்களுக்கு உதவும் துணை :

- பயன்படுத்துவது எளிது : ஸ்பார்க்கி பயன்படுத்துவதன் மூலம், ஒரே அசைவில் - இடது அல்லது வலது - உங்கள் கியாஸ் ஸ்டவ் பர்னரைப் பற்ற வைக்கலாம்.
- எந்த ஒரு LPG ஸ்டவ் அடுப்பிலும் பொருத்தலாம் : ஸ்பார்க்கி கியாஸ் இக்னைட்டரை, பழையதோ அல்லது புதியதோ, எந்த ஒரு கியாஸ் ஸ்டவ் அடுப்பிலும் எளிதில் பொருத்தலாம்.
- முற்றிலும் பாதுகாப்பானது : ஸ்பார்க்கி பயன்படுத்துவது பாதுகாப்பானது. ஏனென்றால் ஸ்டவ் அடுப்பின் எந்த பாகங்களிலும் எதுவும் செய்யப்படுவதில்லை.
- சிக்கனம் மற்றும் நீண்ட கால உழைப்பு : நீண்ட கால அடிப்படையில் ஸ்பார்க்கி மிகவும் சிக்கனமானது. கியாஸ் சேமிப்பும் நிச்சயம்.
- பொருத்துவது எளிது : உங்கள் ஸ்டவ் அடுப்பின் முன்பகுதியில் சிறு துளைகளைப் போட்டு, ஸ்பார்க்கி சாதனத்தை 30 நிமிடங்களில் பொருத்திவிடலாம்.

கேப்ஸன்ஸ் அறிமுகப்படுத்துகிறது



Direct marketing franchise / dealers / agents solicited.

ஸ்பார்க்கி

ஆன்-ஸ்டவ் கியாஸ் இக்னைட்டர்

SPARKY

GAS STOVE IGNITOR

KABSONS DETECT

DETECTIVE DEVICES PRIVATE LIMITED
7-1-214/1/A, Dharam Karan Road, Ameerpet,
Hyderabad - 500 016. A.P. Ph : 291713, 290487

MEMBER KABSONS GROUP

FCB•ULKA 50154

விரல் நுனியிலே வியக்க வைக்கும் வசதி

PH.NOS.OF AUTHORISED DISTRIBUTORS: MADRAS: 5352828 / 5350434 ● 4817660 ● 6384537 / 6385267. VELLORE: 24119, CHENGALPATTU: 26555, COIMBATORE: 441195, ERODE: 213642 / 223667, DHARAMPURI: 60716, VILLUPURAM : 22796, NAGERCOIL:31664.



காதல் -

'எங்க வீட்டு வேலன்' படத்தில் அறிமுகமாகி 'எல்லாமே என் ராசாதான்', 'புதையல்' படங்களின் மூலம் பிரபலமான ரூபஸ்ரீயிடம் பேசிக் கொண்டிருந்தபோது....

சவாலும் சமாளித்ததும் :

முதன் முதலில் எனக்குக் கன்னடப் படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. நான் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்து, சென்னையில் படித்து வளர்ந்த பெண் என்பதால் எனக்குக் கன்னடத்தில் ஒரு வார்த்தை கூடத் தெரியாது. அதே சமயத்தில் படவாய்ப்பை நழுவவிடவும் எனக்கு மனம் இல்லை. கதை கேட்டேன். 'பேவு பெல்லா' என்ற அந்தப் படத்தின் மொத்தக் கதையும் என்னைச் சுற்றித்தான் என்பதால், அதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு நடிக்க ஒப்புக் கொண்டேன். வசனங்களை ஆங்கிலத்தில் எழுதி வாங்கிக் கொண்டு இரவு முழுவதும் மனப்பாடம் செய்து கொண்டு ஒவ்வொரு நாளும் நடித்தேன். அந்தப் படம் வெளி வந்த பிறகு மேலும் ஆறு கன்னடப் படங்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. கன்னடம் தெரியாததையும் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு சமாளித்ததால்தானே அந்த வாய்ப்புகள்!

சிரித்தேன் - அழுதேன்!

என்.எஸ்.கே., டி.ஏ. மதுரம், தங்கவேலு நடித்த பழைய படம். தன்னைத் திருமணம் செய்து கொள்வதற்காகத் தங்கவேலுவுக்கு டி.ஏ. மதுரம் பரீட்சைகள் வைப்பார். என்.எஸ்.கே. சொல்லிக் கொடுப்பதை வைத்து தங்கவேலு எல்லா பரீட்சைகளிலும் பாஸ் பண்ணிவிடுவார். கடைசியாக ஒரு பரீட்சை. உப்புமா என்று எழுதி, அதன் கீழே 'மா மா' என்று பத்து முறை எழுதியிருக்கும். அதைப் படிக்க வேண்டும் என்பதுதான் பரீட்சை. தங்க

வேலுவோ உப்புமா என்று படித்து விட்டுப் பிறகு 'மா,மா' என்று சொல்லிக் கொண்டிருப் பார். என்.எஸ்.கேயோ 'மா, மா' என்பதை எண்ணிப் 'பத்துமா... உப்புமா பத்துமா' என்று சொல்ல வைப்பார். உடனே டி.ஏ. மதுரம் 'நீங்கள்தான் எல்லா பரீட்சையிலும் பாஸ் பண்ணினீர்கள், நீங்கள்தான் எனக்கு மாலை சூட வேண்டும்!' என்று என்.எஸ்.கேயிடம் கூறு வார். காத்திருந்த தங்கவேலு பரிதாபமாகி விடு வார். அதைப் பார்த்த போது மனம் விட்டுச் சிரித்தேன்.

பாச மலர் படம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சிவாஜியும் சாவித்திரியும் நிஜ மான அண்ணன் - தங்கையாகவே நடித்திருப் பார்கள். படத்தின் கடைசி காட்சியில் 'கை வீசம்மா கை வீசு...' என்று சிவாஜி பழைய நிகழ்ச்சிகளை நினைவூட்டுகிற வகையில் சாவித்திரியிடம் பாடுவாரே.... அதைப் பார்க் கிற போதெல்லாம் எனக்கு அழுகை ஆறாகப் பெருகிவிடும்!

கல்யாணம்...

— ரூபஸ்ரீ கூறுகிறார்

பாட்டி வைத்தியம் - நாட்டு வைத்தியம் :

எனக்கு வாய்வுப் பிடிப்பு மாதிரி ஒரு நாள் பிடித்துக் கொண்டது. பிடித்த இடத்தில் உலக் கையை வைத்து நிறுத்தினால் அது அப்படியே நின்று கொள்ளுமாம். வாய்வுப் பிடிப்பு விட்ட பிறகுதான் உலக்கை கீழே விழுமாம். இதைச் செய்யும்படி என் பாட்டி கூறியதில் எனக்கு நம்பிக்கை வரவில்லை. மறுத்துவிட்டேன். பிறகு நிறையப் பூண்டு போட்டு காரக்குழம்பு வைத் துக் கொடுத்தார்கள். சாப்பிட்டதும் சரியாகி விட்டது.

நாட்டு வைத்தியத்தில் சைடு எஃபெக்ட்டே கிடையாது என்கிறார்கள். இஞ்சி, மிளகு, ஓமம் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துச் சாறெடுத்து, அந்தச் சாறுடன் சம அளவு தேன் கலந்து சூடாக்கிச் சாப்பிட்டால் உடல் வலி, தலைவலி, காய்ச்சலெல்லாம் பறந்துவிடும் என்கிறார்கள். நிஜமா என்று இனிமேல்தான் இதை நான் ட்ரை பண்ணிப் பார்க்க வேண்டும்.

காதல் - கல்யாணம் :

நம் நாட்டில் பெரும்பாலும் திருமணத்துக் குப் பிறகுதான் காதலிக்கிறார்கள். சிலர் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்த பிறகுதான் காதலிக் கிறார்கள்! என்னைப் பொறுத்தவரை திரு மணத்துக்குப் பிறகு காதலிப்பதுதான் சிறந் தது. ஏனெனில் அதில் தோல்வி வாராது பாருங்கள்!

மாறுபட்ட வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்ந்த இருவர் ஒரே கூரையின் கீழ் சேர்ந்து வாழ்வதுதான் திருமணம். அப்போது விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை வர வேண்டும். நான் என்கிற ஈகோ வரவே கூடாது. அப்படி வந்தால் அந்தத் திருமண வாழ்க்கை தோல்வி யில்தான் முடியும்.

விபத்தில் சிக்கிய அனுபவம் - பார்த்த அனுபவம் :

மலேசியாவிலிருந்து பினாங்குக்குப் போகும் நெடுஞ்சாலையில் நான், என் அம்மா, அப்பா ஆகியோர் காரில் போய்க் கொண்டிருந்தோம். நான் எனது அம்மா மடியில் படுத்து நன்றாகத் தூங்கிக் கொண்டு சென்றேன். (கண்ணை மூடினாலே எனக்குத் தூக்கம் வந்து விடும்) திடீரென்று பார்த்தால் நான் சாலையோரத்தில் விழுந்து கிடக்கிறேன். நல்லவேளையாகப் பலத்த அடி ஏதும் ஏற்படவில்லை. விபத்துக்குக் காரணம், எங்கள் டிரைவர், முன்னால் சென்ற காரை முந்திக் கொண்டு செல்ல முயன்றபோது நடந்த விபத்துதான். வேகம் விவேகமல்ல என்பதை அன்றுதான் உணர்ந்தேன்.

கடந்த விநாயகர் சதுர்த்தியன்று ஒரு விபத்து. ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டன. நான் அருகில் சென்று பார்த்தபோது, பைக்கில் வந்தவர் அடிபட்டு இறந்து போயிருந்தார். நல்ல நாளும் அதுவுமாக அவரது வீட்டிலுள்ளவர்கள் இதைப் பார்த்து எப்படியெல்லாம் துடித்திருப்பார்கள்... இன்று நினைத்தாலும் மனதுக்குச் சங்கடமாக இருக்கிறது.

— **ஈஸ்வர்தாஸ்**

அட்டை வண்ணப்படம் : **பிரவீண் குமார்**

சரத்யாதவ்... ...லாலுவுக்கு 'சதக்' யாதவ்!



ராம் விலாஸ் பாஸ்வான் ஜனதா தளத்தில் ஒரு பெரும் செல்வாக்குள்ள தலைவராக வந்து விடக் கூடாது என்ற எண்ணத்தில், லாலு ஸ்வீகரித்துக் கொண்ட போது, சாதுப்பிள்ளையாய்த்தான் இருந்தார் சரத்யாதவ். பீகாரின் முடிசூடாமன்னனான தம்முடைய டெல்லி விவகாரங்களை, சுலப மாக முடித்துக் கொடுக்கத்தான் அவரை டெல்லிக்கு அனுப்பி வைத்தார் லாலு. ஆனால், டெல்லியில் அவர் லாலுவைக் குழிபறிக்கத் திரைமறைவு 'வேலையில் ஈடுபட்டது, தேர்தல் கமிஷன் புண்ணியத்தில் உட்கட்சித் தேர்தல் நடந்தபோது தான் வெளிச்சத்துக்கு வந்தது. இதனால் லாலுவுக்கு பலத்த ஷாக்.

இஞ்சினியரிங் பட்டதாரியான சரத் யாதவுக்கு சொந்த மாநிலம் மத்தியப் பிரதேசம்தான். 77ல் காங்கிரசுக்கு எதிரான அலை வீசியபோது ஜபல்பூரில் நின்று வெற்றி பெற்றார். அதன்பின் ம.பி.யில் தேர்தலில் நிற்கவே இல்லை. 91ல் உ.பி.யில் போட்டியிட்டு பா.ஜ.க. வேட்பாளரிடம் தோற்றபோது, லாலுதான் வலிய வந்து, உதவிக் கரம் நீட்டினார். பீகார் மாநிலத்திலுள்ள ஜனதா தளத்துக்கு அபரிமித செல்வாக்குக் கொண்ட மாதேபுரா என்ற தொகுதியின் எம்.பி.யை ராஜினாமா செய்யச் சொல்லிவிட்டு, அங்கே சரத்யாதவை நிறுத்தி, வெற்றி பெறச் செய்தார் லாலு.

எஸ்.ஆர்.பொம்மையின் பெயர், ஹவாலா புகழ் ஜெயின் டைரியில் இருந்ததைச் சுட்டிக்காட்டி, அவரைப் பதவி விலகச் செய்தபோது, சரத்யாதவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. கட்சியின் செயல் தலைவர் ஆனார்.



டெல்லியில், அமைதியாகச் செயல் பட்டு, தம்மை பலப்படுத்திக் கொண்ட சரத்யாதவ், கால்நடைத் தீவன ஊழலில் லாலு மாட்டிக் கொண்டதும், போர்க் கொடி தூக்கி, கட்சியை ஹைஜாக் செய்து விட்டார். சரத்யாதவ், லாலுவைப் பொறுத்தவரை 'சதக்' யாதவ்!

- மௌஷ்மி

மழை காரணமாக விம்பிள்டன் போட்டி தடைபட்ட போது, பழைய ஆட்டங்களைப் போட்டார்கள். 1992ம் வருட விம்பிள்டன் போட்டியில் அகாசி எட்பர்குடன் விளையாடும்போது அவரது தலையிலும், நெற்றியிலும் முத்து முத்தாக வியர்வை பொடித்து மூக்கு நுனிக்கு வந்து சொட்டிக் கொண்டிருந்தது. பந்தின் மீது வைத்த கண்ணை அகற்றாமல் தாவித் தாவிப் பறந்தார். அந்தச் சமயம் பார்வையாளர்கள் பக்கமிருந்து வீலென்று ஒரு குழந்தையின் அழுகுரல். நிசப்தத்தைப் பிளந்துக் கொண்டு எழுந்த அந்த அழுகுரல் கிட்டத்தட்ட மெஷின் போல இருந்த அகாசியை வாய் விட்டுச் சிரிக்க வைத்துவிட்டது. அந்தப் பார்வையாளர், குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியேறும் சமயம் டென்ஷனைக் குறைத்த அந்தக் குழந்தைக்கு நன்றி சொல்வதுபோல மறுபடியும் அகாசி சிரித்தார்.

● டிடி-1ல் ஒளிபரப்பான 'ஹார்லிக்ஸின் மங்கை' நாடகத்தில் மனைவி ஆனந்தி மீது சந்தேகப்படும் கணவனிடம், மனைவி தன் மகளுக்கு வேலை வாங்கிக் கொடுத்த நபரைப் பற்றிச் சொல்லும் போது, ஆனந்தியின் மகளாக நடித்தவர் பாடும் பாட்டு 'பூ பூக்கும் ஓசை' என்ற மின்சார கனவுப் பாடல். நாடகக் கதைப்படி பத்து வருடங்களுக்கு முன்னால் சிறுமியாக இருந்தவர் பாடும் பாட்டு அது. எப்படி 1987லேயே 'மின்சாரக் கனவு' பாடலைப் பாடினார் அவர்? நாடக ஆசிரியருக்குத் தான் வெளிச்சம்!

● விஜய் டீ.வி.யில் 'அதே கண்கள்' தொடர். இரண்டு வாரமாக போட்டதே 'ரிப்பீட்' ஆகிறது. அதே போல் ஆறு மாதங்களுக்கு முன்னால் ஒளிபரப்பான 'ஹலோ வி.ஐ.பி.' என்ற நிகழ்ச்சியையே இப்போது மீண்டும் ஒளிபரப்பி வருகிறது. இதையெல்லாம் எத்தனை முறை பார்ப்பது?

● சன் டீ.வியில் பெப்ஸி உங்கள் சாய்ஸின் 150-வது வார நிகழ்ச்சியின் தொடர்ச்சி. உமாவோடு, டைரக்டர் அகத்தியன் நிகழ்ச்சியில் பங்கேற்றார். போனில் பேசிய பதினெட்டு வயதுப் பெண்ணுடன் அகத்தியன் சரளமாகப் பேசினார்:

"நீங்கள் இன்னும் காதலிக்கவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"சரியான நபர் இன்னும் கிடைக்கவில்லை."

"கிடைத்தால் காதலிப்பீர்களா?"

"ம்..."

"எப்போது கிடைப்பார்?"

"நாளையே கூட கிடைக்கலாம்!"

"அப்படிக் கிடைத்தால் உமாவுக்கு போன் பண்ணிச் சொல்லுங்கள். சொல்வீர்களா?"

"சொல்கிறேன்!"

காதலர்கிடைத்ததும் போன் செய்யுங்கள்!

போகிற போக்கைப் பார்த்தால் "நாங்கள் காதலிக்க ஆரம்பித்து விட்டோம்; வந்து வாழ்த்துங்கள்!" என்று இனி பத்திரிகை அடித்து அழைப்பு அனுப்புகிற காலமும் வந்து விடுமோ!

- இரவி



“எனக்கே ஓர் இனிய ஷாக்தான்!”

ஜூலை 2, புதன்:

என் வாழ்க்கையில் மிக முக்கியமான நாள். நான் அ.தி.மு.க.வில் இணைந்தேன். கட்சி அலுவலகத்துக்குச் சென்று முறைப்படி கட்சியில் சேர்ந்தேன். பத்திரிகையாளர் சந்திப்பு. ஒரு சேர ஏகப்பட்ட நிருபர்களைச் சந்தித்த அனுபவம் கொஞ்சம் புதுசு.

நேரே எம்.ஜி.ஆர். சமாதிக்குச் சென்றேன். மத்தியான டீ.வி. நியூஸிலேயே செய்தி வெளியாகி விட்டதால் தொடர்ந்து ஏகப்பட்ட டெலிபோன்கள். திருநெல்வேலியிலிருந்து ஸ்வீட் விநியோகம் செய்து, எனது அரசியல் நுழைவைக் கொண்டாடியதாக ஒரு டெலிபோன் தகவல் வந்தது.

ஜூலை 3, வியாழன்:

தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து வந்த தொண்டர்கள், ‘முன்பு ஜெயலலிதாவைச் சந்திப்பதற்காக போயஸ்தோட்டம் வந்து இரண்டு நாள் காத்திருந்து, வெறுப்புடன் திரும்பிப் போனதைப் பற்றி பொறுமலுடன் சொல்லிவிட்டு, ‘வந்தவுடன் உங்களைச் சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி’ என்றார்கள்.

மாலையில் விஜய் டீ.வி.க்காக ரபி பெர்னார்ட் பேட்டி காண வந்தார். ஒத்திகை பார்த்துக் கொள்ள வேண்டுமா? என்று கேட்டபோது, “அவசியமில்லை. எதுவானாலும் கேளுங்கள். என் மனதில் தோன்றும் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்” என்று சொல்லிவிட்டேன்.

ஒரே ஸ்டிரெச்சாய் முழு பேட்டியும் ஒளிப்பதிவானது. “ஐ யம் வெரிமச் இம்ப்ரஸ்டு” என்றார் ரபி.

ஜூலை4, வெள்ளி:

இன்று ஏகப்பட்ட தொண்டர்கள் வெளியூர்களிலிருந்து பஸ்களில் வந்திருந்தார்கள். கட்சி அலுவலகம் போய், அங்கிருந்து அட்ரஸ் விசாரித்துக் கொண்டு



வந்ததாகச் சொன்னார்கள். 'நீங்க கட்சிக்கு வருவீங்கன்னு எதிர்பார்க்கவே இல்லை! மிக நல்ல முடிவெடுத்திருக்கீங்க. நாங்கள் எல்லாரும் உங்க பின்னாடி இருக்கோம்' என்று புத்துணர்ச்சியுடன் பேசினார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், கட்சி பிரமுகர்களும், முன்னாள் எம்.எல்.ஏ, எம்.பி.க்கள் பலரும் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். திருச்செந்தூர் முன்னாள் எம்.எல்.ஏ. கோவில் பிரசாதம் அனுப்பி வைத்திருந்தார்.

ஜூலை 5, சனி:

நான்கு வருடங்களாகத் தினமும் ஏரோபிக் எக்ஸர்ஸைஸ் (மியூசிக் போட்டுக் கொண்டு அதற்குத் தக்கபடி டான்ஸ் ஆடுவதுபோல் டீ.வி.யில் உடற்பயிற்சி செய்வார்களே, அதுதான்) பயிற்சிக்கு நுங்கம்பாக்கம் சென்று வருவது என் வழக்கம். ஆனால் கடந்த சில வாரங்களாக என்னால் போக முடியவில்லை. இன்று ஏரோபிக் பயிற்சிக்குப் போய் வந்தேன்.

அங்கேயும், இனிய அதிர்ச்சியான ரியாக்ஷன். 'பாலிடிக்ஸ'க்கு போயிட்டீங்களே! இனிமே வரமாட்டீங்கன்னு நினைச்சேன்' என்றார் ஒரு பெண்மணி.

'பாலிடிக்ஸ்ல இருந்தாலும் உடம்பை அழகா வெச்சிக்கறதுல என்ன தப்பு?' என்று கேட்டேன்.

பல ஊர்களிலிருந்தும் வந்த கட்சித் தொண்டர்கள், "நீங்கதான் இனி எம்.ஜி.ஆர். பேரைக் காப்பாத்தணும்னு உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னபோது மனம் நெகிழ்ந்தேன்.

"மீட்டிங் ஏற்பாடு செய்யப் போறோம். டேட் கொடுங்கள்" என்றார்கள். கட்சியின் மற்ற தலைவர்களையெல்லாம் கலந்தாலோசித்த பின்தான். அதனை முடிவு செய்ய முடியும். எனவே கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சமாதானப்படுத்தினேன். இவர்களின் எதிர்பார்ப்பை ஈடு செய்யும் வகையில் நான் தொண்டாற்ற வேண்டும் என்று எனக்கு நானே கூறிக் கொண்டேன்.

ஜூலை 6, ஞாயிறு:

கடுமையான ஜலதோஷம். தொண்டைக் கட்டு. பேசுவதே சிரமமாக இருந்தது. பல டெலிபோன்கால்களை நேரடியாகப் பேசாமல் தவிர்த்தேன். உடல்நிலை சரியில்லாததால், ஓரிரு நாட்களில் நானே டெலிபோன் செய்வதாகக் கூறினேன். குடும்ப டாக்டருக்குப் போன் செய்து, உடல் நலக் குறைவு பற்றிச் சொன்னேன். சில ஆண்டிபயாடிக்குகளை சாப்பிடச் சொன்னார். மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு ரெஸ்ட். இரவு விஜய் டீ.வி.யில் என் பேட்டி ஒளிபரப்பாயிற்று. வழக்கமான அரசியல்வாதிகள் பாணியில், மற்றவர்களைப் பர்சனலாகத் திட்டாமல், ரொம்ப டீசன்ட்டாய் என் அரசியல் பிரவேசத்தின் அவசியத்தை நான் விளக்கியிருந்த விதத்தில் எனக்குத் திருப்தி. இரவே, ஏகப்பட்ட பாராட்டுகள், டெலிபோன் மூலமாக.

ஜூலை 7, திங்கள்:

இன்றைக்கு உடம்பு கொஞ்சம் பரவாயில்லை. திருநாவுக்கரசு, கண்ணப்பன், முத்துசாமி, அரங்கநாயகம் முதலிய கட்சித் தலைவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். முந்தைய நாள் ஒளிபரப்பான விஜய் டீ.வி. பேட்டியை வெகுவாகப் பாராட்டினார்கள். கட்சியின் மூத்த தலைவர் எஸ்.டி.எஸ். ஊரில் இல்லாததால், அவர் சென்னை திரும்பியவுடன், கட்சி அலுவலகத்தில் கூடிப் பேசி, அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி முடிவு செய்யலாம் என்றார்கள்.

ஜூலை 8, செவ்வாய்:

உடம்பு இன்னும் தேறிவிட்டது. ஆனாலும் முற்றிலும் குணமாகவில்லை. பிற்பகலில் நல்லி கடைக்குப் போனேன். இதற்கு முன்பு எத்தனையோ தடவை அங்கே போயிருக்கிறேன் என்றாலும், இந்தத் தடவை போனபோது, பொதுமக்களின் ரியாக்ஷன் சற்றே வித்தியாசமாக இருந்தது. சிலர் நேரடியாக என்னிடம் வந்து தம் பாராட்டைத் தெரிவித்தார்கள். ஆனாலும் புடைவை செலக்ஷனில் கவனம் செலுத்த முடியவில்லை. சில பிளவுஸ் பிட்களை மட்டும் வாங்கிக்கொண்டு, வேறு ஒருநாள் வந்து புடைவைகளை வாங்கிச் செல்லுவதாகச் சொல்லிவிட்டு கடையிலிருந்து புறப்பட்டு விட்டேன்.

சந்திப்பு: **மௌலி**

வண்ணப்படம்: **உத்ரா**



காதில் விழுந்தவை...

பிளேடு மாலைக்கு பரிசு!

◆◆ தமிழக காங்கிரஸின் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவரான தங்கபாலு, மாவட்ட காங்கிரஸ் தலைவர் மற்றும் இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆகிய பொறுப்புகளுக்குத் தமது ஆட்களையே நியமித்து இருக்கிறார். தமிழக காங்கிரஸ் வட்டாரத்தில் கொஞ்சம் பரபரப்பாகப் பேசப்படுவது தென் மாவட்டத் தலைவர் ஒருவரின் நியமனம் பற்றித்தான். சம்பந்தப் பட்டவர் காங்கிரஸ் தலைவராக இருந்த சமயம், குமரியார் தொண்டர் தரிசனம் நடத்திய போது அவருக்கு மாலையில் பிளேடுகளை ஒளித்துக் கட்டி வைத்து, மாலை போட்டவராம். இவ்வொரு மாவட்டத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பவர், உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸுக்கு எதிராக வேலை செய்தவராம். "இப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டுதான் காங்கிரஸை வளர்ப்பேன் என்கிறார் தங்கபாலு!" என்கிறார்கள் குமரி மற்றும் வாழப்பாடி கோஷ்டியினர்.

'வார்டு பாய்' ஆன வக்கீல்கள்!

◆◆ சசிகலா, சாஸ்திரி பவனில் உள்ள அமலாக்கப் பிரிவு அலுவலகத்துக்குப் படுத்த படுக்கையாக வருவதை ஒரு நல்ல நாடகக் காட்சியாக அங்குள்ள ஊழியர்கள் பார்த்து ரசிக்கிறார்கள். சரியாக காலை பத்தரையிலிருந்து, பதினொரு மணிக்குள் சசிகலாவைச் சுமந்து கொண்டு வேன் வருகிறது. பின்னர் ஸ்ட்ரெச்சரில் கண்ணை மூடியபடி படுத்துக் கொண்டு மூச்சிறைப்பது போல் கிடக்கும் அவரைத் தூக்கிக் கொண்டு, நான்கு பேர் மூன்றாவது மாடியில் உள்ள அமலாக்கப் பிரிவு அலுவலகத்துக்குச் செல்கிறார்கள். அங்கு ஒரு பெண் அதிகாரி 'மேடம்... மேடம் கையெழுத்து போட முடியுமா?' என்று கேட்கிறார். சரியாகக் காது கேட்காதவர் போலத் தாமதமாக அதற்கு ரியாக்ட் செய்கிறார் சசிகலா. பின்னர் சசிகலாவுடன் வந்தவர் ஒருவர் அவரது இடது கை பெருவிரலை இங்கில் தோய்த்து கைநாட்டு வைக்கிறார். சமயத்தில் ஸ்ட்ரெச்சரைத் தூக்கிச் செல்லப் போதுமான ஆட்கள் வருவதில்லை யாதலால், வக்கீல் ஜீனசேனனின் உதவியாளர்களே கறுப்புக் கோட்டைப் போட்டுக் கொண்டு தூக்கிச் செல்கிறார்கள்!

'கவர்' ஆன பத்திரிகையாளர்கள்!

◆◆ சேலம் தி.மு.க. மாநாட்டுக்குச் சென்ற பத்திரிகையாளர்களை ஆரம்பத்தில் கட்சிக்காரர்கள் சரிவர கவனிக்கவில்லை என்றாலும் மாநாடு முடிந்ததும் ஆளுக்கு ஐநூறு ரூபாய் கவர் கொடுத்துக் 'கவர்' செய்து விட்டார்கள். அதிலும் திருப்தியடையாத குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்களுக்குச் சென்னை வந்த பிறகு ஃப்ரீப் கேஸ், மோதிரம், சஃபாரி சூட் என்று அமர்க்களமாகக் கவனித் திருக்கிறார்கள்.

கூட்டணிக்குப் போட்டி....

◆◆ சேலத்தில் அம்மாவுக்குத் திரண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொள்ளும் முயற்சியை அடி எடுத்து வைத்திருக்கிறது பா.ம.க. இதே பாதையில் பாதி தூரம் கடந்துவிட்ட ம.தி.மு.க வும் அந்தக் கட்சியை உசுப்பி விட்டிருக்கிறது. ஆனால், ம.தி.மு.க.வும், பா.ம.க.வும், அதிகாரபூர்வமாக அ.தி.மு.க.வுடன் கூட்டணியை அறிவிக்கும் பட்சத்தில், அந்தக் கட்சிகளில் பெரும் பிளவு ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக ஜெ. - வை.கோ. சந்திப்பில் அதிர்ச்சியான ம.தி.மு.க.வின் சில தலைவர்கள், 'தேர்தலை மனத்தில் வைத்துக் கொள்கையைச் சமரசம் செய்து கொள்ளக் கூடாது' என்று அடித்துச் சொல்கிறார்கள். இதற்கிடையில் திருநாவுக்கரசுவிடம் போன ராஜ்சபை உறுப்பினர்கள் மீண்டும் அம்மாவிடம் திரும்ப இருக்கிறார்களாம்.

— தில்லப்பா



பதினாறு வயதில் பதித்த சாதனை!

இந்த வருட விம்பிள்டன் வீராங்கனை மார்ட்டினா ஹிங்கிஸ், இந்த நூற்றாண்டின் இளம் விம்பிள்டன் சாம்பியனும் கூட. (இதற்கு முன்னால், 1887ல் வென்ற லோட்டி டாட்டுக்கு வயது பதினைந்துதான்!)

ஹிங்கிஸ் வயது ஸ்வீட் சிக்ஸ்டீன். 1.67 மீட்டர் உயரமும், 52 கிலோ எடையும் கொண்ட, அழகான, பதுமை போன்ற தோற்றம். இந்த வருடம் ஜனவரியில், ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றவர்.

சென்ற வருடமே, மகளிர் இரட்டையர் ஆட்டத்தில் ஹெலனா சுகோவாவுடன் ஆடி, 15 வயதிலேயே விம்பிள்டன் இரட்டையர் ஆட்டப் பட்டத்தைப் பறித்துக் கொண்டவர்.

மைதானத்தில் அதிகமாக முன்னால் வந்து ஆடாமல் 'பேஸ் லை'னில் இருந்து கொண்டே ஆட்டுவிக்கும் திறன் மார்ட்டினா ஹிங்கிஸின் ஸ்பெஷாலிடி. மார்ட்டினா நவரதிலோவா நினைவாக, அம்மா மெலானி, பெண்ணுக்கு மார்ட்டினா (ஹிங்கிஸ்) என்ற பெயரை வைத்தாராம். அம்மாவேதான் 'கோச்'சும் கூட. செக்கோஸ்லவேக்கியாவில் பிறந்தாலும், குழந்தைப் பருவத்திலேயே ஸ்விட்சர்லாந்து நாட்டில் குடியேறிவிட்டார்.

அன்று விம்பிள்டன் ஆட்டத்தைப் பார்த்தவர்கள், முதல் செட்டில் ஹிங்கிஸ் 2 - 6 என்ற கணக்கில் 22 நிமிடங்களிலேயே தோற்றுப் போன போது, மற்ற இரண்டு செட்டுகளையும் புயல் மாதிரி ஆடி, சுமார் நாலு லட்சம் டாலர் செக்கைத் தட்டிக் கொண்டு போவார் என்று எதிர்பார்த்திருக்கவே முடியாது.


"அந்தப் பதினாறு வயதுக்கே உண்டான அகம்பாவமோ, அட்டகாசமோ எதுவுமில்லாமல், பண்புடன் நடந்து கொள்ளுவது தான் ஹிங்கிஸின் பாராட்டப்பட வேண்டிய குணம். மூத்த ஆட்டக்காரர்களுக்கு அவர் காண்பிக்கும் மரியாதை அலாதியானது!" என்று புகழ்கிறார் நவோட்னா.

"நாலு வருடம் முன்பு ஸ்டெஃபி கிராஃபுடன் ஆடும்போது, அவர் ரொம்ப சீரியஸ்ஸாக இருந்தார். ஆனால் இப்போது நானும் நவோட்னாவும் ஒரே அறையில், மஸாஜ் செய்து கொண்டிருந்தபோது, ஜாலியாக அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்!" என்றார் ஹிங்கிஸ்.

"ஹிங்கிஸ், ஆட்டத்தின் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டு ஆடுவதில், மற்றவர்களைவிட பத்து மடங்கு புத்திசாலி. அப்படிப் புரிந்து கொண்டு, நொடியில், தனக்குச் சாதகமாக ஆட்டத்தையே மாற்றிவிடுவதில் கெட்டிக்காரி" என்று டென்னிஸ் விமர்சகர்கள் ஹிங்கிஸைப் புகழ்கிறார்கள். "பாஸிங் ஷாட்ஸ் ஆகட்டும், உயரே தூக்கி ஓங்கி அடிப்பதாகட்டும், கீழ்வாட்டில் அடிக்கும், 'டிராப் ஷாட்ஸ்' ஆகட்டும், பின்-கை வீச்சாகட்டும், எதிலுமே ஓர் அநாயசம். இந்த வெரைட்டிதான் அவருக்கு வெற்றியைக் கொடுத்திருக்கிறது!" என்கிறார்கள்.

"என்னால் நம்பவே முடியவில்லை... ஏதோ கனவு மாதிரி இருக்கிறது" என்று ஹிங்கிஸ் சொன்னாலும், "கடவுளே, இத்தனை பெரிய வெற்றியைப் பெற எனக்கு இன்னும் வயது ஆகவில்லையே!" என்று சந்தோஷத்தில் மிதந்தார், விம்பிள்டன் நூற்றுப் பதினோறாவது மாட்சில் வென்ற மார்ட்டினா ஹிங்கிஸ்.

— சித்தார்த்





1997 ஜூலை 20
ஈசுவர ஆடி 4
மலர் : 55
இதழ் : 51

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



குஜ்ராலின் கண் துடைப்பு; ஜெயலலிதாவின் ஜாலம்!

லல்லு பிரசாத் யாதவ் மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் கழுத்தளவுக்குச் சிக்கியிருப்பது ஒரு பொருட்டல்ல;

அவர் பேரில் குற்றப் பத்திரிகை தயாராகி வருவது ஒரு பெரிய விஷயமல்ல.

ஜனநாயக மரபுகளையும் நியாயத்தையும் அவர் தூக்கிப் போட்டு மிதிப்பது அப்படியொன்றும் கொலை பாதகம் அல்ல...

அபத்தமாகவும் ஆணவத்துடனும் அவர் மாறி மாறி டீ.வி.யிலும், பத்திரிகைகளிலும் பேட்டி அளித்து வருவதுகூட ரசனைக் குறைவான விஷயமல்ல...


லல்லு விவகாரத்தில் குஜ்ரால் காட்டி வரும் அலட்சியமும் கண்டிப்பின்மையும் மேற்கண்டவாறுதான் ஒவ்வொரு எளிய இந்தியனையும் எண்ண வைக்கும்.

பீஹார் முதல்வரை அழைத்து, பிரதமர் ராஜினாமா செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவரோ நேர்மாறாக நடந்து கொண்டிருக்கிறார்.

பீஹார் ஜனதாதளம் பிளவுபட்டதற்காக வருந்தவில்லை.

"லல்லுவின் ராஷ்ட்ரீய ஜனதாதளம், ஐக்கிய முன்னணி அரசை ஆதரிப்பதாக உறுதியளித்திருக்கிறது" என மகிழ்ந்திருக்கிறார். "ஷரத் யாதவ் தலைமையிலான ஜனதாதளமும் தொடர்ந்து ஆதரிக்கும். இருவருக்கும் இடையே மனஸ்தாபம் இருந்தாலும் என் மீது அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்களே.... அதற்கு நன்றியுடையவனாய் இருப்பேன்..." என்றெல்லாம் பேசியிருக்கிறார்!

சிந்திக்கத் தெரியாத எளிய மக்களை வழக்கம்போல் முட்டாளாக்கும் அரசியல் அராஜக தந்திரம்



இது!

பதவியில் நீடித்தால் போதும் என்ற ஒரே குறிக்கோளுடன் கையாளப்படும் சந்தர்ப்ப வாதம்.

மத்திய அரசியல்தான் இப்படியென்றால் அதனுடன் போட்டி போட்டுக் கொண்டு முந்தப் பார்க்கிறது தமிழக அரசியல்.

ஜெயலலிதாவை ஜன்ம விரோதியாக பாவித்துச் செயல்பட்டு வந்த சுப்ரமண்யம் சுவாமி, இன்று வெட்கம் - மானம் இல்லாமல் பல்டி அடித்திருக்கிறார். தாம் செய்வதில் தவறு இல்லை என்று ஜாலமாகப் பேசுகிறார். 'கருணாநிதி என்னை மதுரையில் ஏமாற்றினார். அதுக்காக அவருக்குப் பாடம் கத்துக் கொடுக்கணும்...' என்று பச்சையாகத் தமது பழிவாங்கல் நோக்கைப் பிரகடனப் படுத்துகிறார்.

சு.சுவாமியின் ஆதரவை அதே ஜாலக்கு வார்த்தைகளுடன் ஏற்றிருக்கும் ஜெயலலிதாவோ வெள்ளித்திரை திறமைகளையெல்லாம் ஒன்று திரட்டி, சேலம் பொதுக்கூட்டத்தில் அள்ளி வீசியிருக்கிறார்.

கடந்த ஆட்சியில் நடந்த 'சிறிய தவறு'களுக்காக (!) வருத்தம் தெரிவித்து; சொத்துக்கள் அத்தனையும் பொதுநலத்துக்குத்தான் எனப் பிரகடனம் செய்து; 'ஊர் ஊராகப் போய் மன்னிப்புக் கேட்போம்' என்று உறுதிமொழி தந்து, மக்களின் அனுதாபத்தை அள்ளிக் கொள்ள முயன்றிருக்கிறார்.


சேலத்தில் திரண்ட கூட்டத்தை ஓர் அளவுகோலாகக் கொள்வோமானால், இத்தகைய வெற்றுப் பேச்சுகளுக்கும் தனி நபர் ஆளுமைக்கும் நிஜம் போல் தோன்றும் போலி வாதங்களுக்கும் மக்கள் எவ்வளவு தூரம் (கிரங்கிப்) போகிறார்கள் என்பது புரியும்.

இந்த மக்களைக் கல்வியறிவூட்டித் தெளிவித்து, பண்படுத்தி வளர்த்துவது அல்லவா அரசின் பொறுப்பு? அதற்காகப் பாடுபடுபவர்கள் அல்லவா நிஜமான அரசியல்வாதிகள்?

ஆனால், இன்று நடப்பது என்ன...?

அரசியலுக்கும் கொள்கைகளுக்கும் சம்பந்தமில்லை;

அரசியல்வாதிகளுக்கும் நேர்மை, நாணயத்துக்கும் தொடர்பு இல்லை.



ஆட்சியைப் பிடிக்கவும் அதில் நிலைக்கவும் நல்ல நிர்வாகத் திறமையோ தன்னலம் கடந்த உயர் நோக்கமோ தேவையில்லை....

என்ற நம்பிக்கைகள் அரசியல் வட்டங்களில் வேரூன்ற ஆரம்பித்து விட்டன.

விண்ணளாவும் பொருளாதாரத் திட்டங்கள் தீட்டலாம்.

உலகம் வியக்கும் அயலுறவுக் கொள்கைகளை வகுக்கலாம்.

தொழில் விவசாயத் துறைகளுக்குப் புத்துயிர் தர நடவடிக்கைகள் எடுக்கலாம்.

ஆனால், இவை எதுவுமே நீடித்துப் பயன்தர வேண்டுமானால், ஆதாரமான நாணயமும் நேர்மையும் அரசியலில் தேவை. அரசியல்வாதிகள் பதவியைப் பற்றிக் கொள்வதற்காகச் சமரசம் செய்து கொண்டேயிருந்தால், ஒருவர் காலை மற்றவர் வாரிவிடக் காத்துக் கொண்டேதான் இருப்பார்கள். நிர்வாகத்தின் பக்கமும் வளர்ச்சித் திட்டங்களின் பக்கமும் செலுத்தப்படும் கவனம் குறைந்து போய் விடும்.

மோசமான அரசியல்வாதிகளை ஆதரிப்பதால் மக்கள் பெறும் முதல் தண்டனை இது.

இரண்டாவது தண்டனை...?

அரசியல்வாதிகளின் பகட்டு, ஆணவம், அராஜகப் போக்கு, பொய், பித்தலாட்டம், கொள்கைப் புறக்கணிப்பு என்று அத்தனை துர்குணங்களும் படிப்படியாக சமுதாயத்தையும் ஊடுருவிவிடும். இப்போதே அதற்கான அறிகுறிகளை நாம் நிறையப் பார்க்கிறோம்.

இந்த நிலையை மாற்றும் சக்தி அரசியல்வாதிகளிடத்தில் இருக்கிறதா? மக்களிடத்தில் இருக்கிறதா...? என்பதே கேள்வி.

அரசியல்வாதிகளிடத்தில் இருந்தாலும் அதை அவர்கள் பயன்படுத்தப் போவதில்லை என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

மக்களிடத்தில் அந்த சக்தி இல்லாமல் இல்லை. கடந்த தேர்தலின் போது அதை நாம் கண்கூடாகப் பார்த்தோம். ஆனால் எங்கே அந்த சிந்தனா சக்தியை அவர்கள் பயன்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தில், அரசியல்வாதிகள் அதை மழுங்கடிக்கவே முயற்சி செய்வார்கள். வாக்காளர்கள் இப்போது முதலே விழிப்புடன் இருக்க வேண்டும்!

இளம் பத்திரிகை-யாளர்களே வாருங்கள்!

கல்கியில் முழு நேர அல்லது பகுதி நேர நிருபர்களாகப் பணியாற்ற முப்பது வயதுக்குட்பட்ட பட்டதாரி இளைஞர்கள் (இளைஞிகளுக்கும் தடையில்லை) தேவை. (திறமையும் ஆற்றலும் மிகுதியாக இருப்பின் கல்வித் தகுதி தளர்த்தப்படும்)


செய்திகளைச் சேகரிப்பதில் ஆர்வமும் சுறுசுறுப்பும், சேகரித்த உண்மைச் செய்திகளைச் சுவைபடக் கட்டுரையாக எழுதும் ஆற்றலும் இருப்பவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம். (ஒரிஜினல் சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம்.)

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 28.7.97.

— ஆசிரியர்

கல்கி கன்ஸல்டன்ஸி:

கடன் கொடுத்தால், கொள்வாரில்லை!



சுமார் இரண்டு வருடங்களுக்கு முன், பொதுமக்கள் தங்கள் சேமிப்பை பெரும்பாலும் பங்கு மார்க்கெட்டிலும் பைனான்ஸ் கம்பெனிகளிலும் முதலீடு செய்து வந்தார்கள்; அல்லது தங்கத்தை வாங்கி லாக்கரில் வைத்துப் பூட்டினார்கள். வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை மிக சொற்பமாகவே இருந்தது.

பங்கு மார்க்கெட் படுத்தது; நிதி கம்பெனிகள் ஒவ்வொன்றாக இழுத்து மூடப்பட ஆரம்பித்தன... அவற்றில் நம்பிக்கை இழந்த மக்கள் மீண்டும் வங்கிகளில் டெபாஸிட் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

கடந்த நிதி ஆண்டில் மட்டும் சுமார் 70,000 கோடி ரூபாய் வங்கிகளில் முதலீடாகியிருக்கிறது. இன்று வங்கிகளிடம் இருக்கும் டெபாஸிட் தொகை 5,00,000 கோடியைத் தாண்டி விட்டது. இந்த நிதி ஆண்டு தொடங்கி ஜூன் '97 வரையிலான காலகட்டத்தில் மட்டும் வங்கி டெபாஸிட்களாக ரூ 25,000 கோடி வரவு ஆகியிருக்கிறது. '98 மார்ச்சுக்கு முன்னதாக 1,00,000 கோடி ரூபாய்க்கு புதிய டெபாஸிட் முதலீடாகும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், வங்கி டெபாஸிட்களின் அதிகரிப்பு வரவேற்கத்தக்கதாகவே இருக்க வேண்டும். கூடுதல் டெபாஸிட் வந்துள்ளதால், தொழில்- வர்த்தக வளர்ச்சிக்குத் தேவையான வங்கிக் கடனுதவியைப் பெறுவது அதன் மூலம் சுலபமாக்கப்படும் அல்லவா?

தொழில் வளர்ச்சிக்குத் துணை செய்வதற்காக ரிசர்வ் வங்கி வேறு வட்டி விகிதத்தைக் குறைத்திருக்கிறது. அதாவது ரிசர்வ் வங்கியிடமிருந்து மற்ற வங்கிகள் பெறும் கடனுக்கான வட்டி 10 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் டெபாஸிட்டுக்கான வட்டியும் ஒரு சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதன்மூலம் மிச்சமாகும் ஒரு சதவிகிதத்தைத் தொழில் துறை அபிவிருத்திக்கு வங்கிகள் பயன்படுத்தும் என்பது நம்பிக்கை.

ஆனால், தொழில் துறையோ வங்கிகளிடமிருந்து சுறுசுறுப்பாகக் கடன் வாங்கக் காணோம்.



வங்கிகள், வேறு வழியில்லாமல், தங்களிடம் சேர்ந்துள்ள டெபாஸிட் தொகையை அரசாங்கப் பத்திரங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் முதலீடு செய்திருக்கின்றன!

இந்தத் தேக்க நிலைமை ரிசர்வ் வங்கிக்கு மட்டுமின்றி, மற்ற வங்கிகளுக்கும் கவலை அளித்து வருகிறது. தொழில் துறையே மந்தமடைந்திருக்கிறது. போதாக் குறைக்கு, பழைய அனுபவங்களை மனத்தில் கொண்டு வங்கி உயர் அதிகாரிகள் கடன் கொடுக்கத் தயங்குகிறார்கள்.

இந்த நிலை நீடித்தால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு தொழில்துறை வளர்ச்சி மிகக் குறைவாகவே இருக்கும். போன வருடத்துக்கு முந்தைய வருடம் 11 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, போன வருடம் ஆறு சதவிகிதமாகக் குறைந்தது. இது மேலும் குறையாமல் இருக்க நிதி அமைச்சகம்தான் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மக்கள் பெரிய சேமிப்பாகக் கருதி வந்த தங்கத்தின் விலையும் வீழ்ந்திருக்கிறது! இக்கட்டுரை எழுதப்படும் நேரத்தில் ஒரு கிராம் தங்கம் விலை 422 ரூபாய்தான் - கிட்டத்தட்ட நூறு ரூபாய் குறைந்துள்ளது! அயல்நாடு வாழ் இந்தியர்கள் இந்தியாவுக்குள் தங்கம் கொண்டு வரலாம் என்று அரசு அறிவித்ததன் பலனாகவே இந்த விலை வீழ்ச்சி என்பது ஒரு கருத்து.

பவுன் விலை குறைந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு: ஐரோப்பாவிலுள்ள பல நாடுகள் இணைந்து பொருளாதார ஒருங்கிணைப்புக்கு முயன்று வருகின்றன. அந்த நாடுகளிலுள்ள வங்கிகள் இனி கையிருப்பாகப் பெரிய அளவில் தங்கம் வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்பதை உணர்ந்துள்ளன. எனவே பாதிக்குப் பாதி தங்கத்தை விற்பனைக்குக் கொண்டு வந்து விட்டன. அதனால்தான் இந்தியச் சந்தையிலும் தங்கத்துக்கான தேவை குறைந்துள்ளது. இன்னும் எவ்வளவு குறையப் போகிறதோ!

— வி. கோபாலன்

எந்தச் சிரிப்பு நல்ல சிரிப்பு?



இந்த அழகியின் காதணியை உற்று கவனியுங்கள். எதில் தயாரிக்கப்பட்டது என கண்டு பிடிக்க முடிகிறதா? அணில் வாலிலிருந்துதான்! மேனகா காந்தி கோபித்துக் கொள்ளப் போகிறார்!

வரும் நவம்பர் மாதம் சத்ய சாய் பாபாவின் பிறந்த நாளையொட்டி, புட்டபர்த்தியில் ஒரு பிரம்மாண்டமான கிரிக்கெட் போட்டி நடக்கப் போகிறதாம். அதில் மோதப் போகிற இரு அணிகளில் ஒன்றில், பதினொரு இந்திய கிரிக்கெட்டர்களும் இன்னொன்றில் பிற உலக நாடுகளைச் சேர்ந்த பதினொரு பேரும் இடம் பெறப் போகிறார்களாம். வெற்றி பெறும் அணிக்கு என்ன பரிசு தெரியுமா? ரூபாய் முப்பது லட்சம் மதிப்புள்ள தங்கக் கோப்பை.

'சைக்காலஜி டுடே' என்ற ஜெர்மன் பத்திரிகை எது மிகவும் நல்ல சிரிப்பு என்று தெரிவித்துள்ளது. அதன்படி, இரண்டில் மூன்று பங்கு மேல் வரிசைப் பற்களும், லேசாகக் கீழ்வரிசைப் பற்களும் தெரியும்படி சிரிக்கிற சிரிப்புத்தான் பெஸ்ட்டாம்!

விமானத்தில், ஒரு பெண்மணி, ஒரு இளைஞரைச் சந்தித்தபோது, "நீங்கள் ஒரு கிரிக்கெட்டர் என்று தெரிகிறது. ஆனால் பெயர் தெரியவில்லை. அதனால் என்ன பரவாயில்லை. ஆட்டோகிராப் போட்டுக் கொடுங்கள். என் மகனிடம் கொடுத்தால் சந்தோஷப் படுவான்" என்றார். சிரித்தபடி ஆட்டோகிராப் போட்டுக் கொடுத்த அவர், மோங்கியா.

கமிஷனர் விசாரணை!

வி.கே. ராமசாமி

என் மானேஜர் கிருஷ்ணமூர்த்தி ஐயருடன் கமிஷனர் ஆபீஸுக்குக் கிளம்பியபோது எனக்கு மிகவும் படபடப்பாக இருந்தது. சிறு வம்பு தும்புக்குக்கூடப் போகாத, போக விரும்பாத என்மேல் இப்படியொரு பண மோசடி வழக்கா? என்னால் நம்பவே முடியவில்லை. அப்படி யார் புகார் செய்திருப்பார்கள்?

கமிஷனர் ஆபீஸில் நான் நுழைந்தபோது மிகப் பெரிய மீசை வைத்த ஓர் அதிகாரி என்னிடம் வந்தார். அவர் அஸிஸ்டெண்ட் கமிஷனருக்கு அடுத்த நிலையில் இருந்த அதிகாரி என்று ஞாபகம்.

வந்தவர், ஏதும் விசாரிக்கும் முன்பே, தடாலென்று, "என்ன வி.கே.ஆர், நீங்க எவ்னோ பெரிய ஆள்! இப்படிப் பணம் வாங்கி மோசடி செய்வீங்களா? சே!'' என்றார்.

ஏற்கெனவே அதிர்ச்சியில் இருந்த நான், "நான் அப்படி யாரிடமும் வாங்கலீங்களே! யாரையும் ஏமாத்தற எண்ணமும் எனக்குக் கிடையாது. யார் புகார் தந்திருக்காங்க?'' என்றேன் கலங்கிய குரலில்.

"பேரு மல்லி. மைசூர்ல விநியோகஸ்தரா இருக்கறவர்'' என்றார் அந்த போலீஸ்காரர்.

நான் சற்றுக் கூர்ந்து யோசித்து, விஷயம் இன்னதாகத்தான் இருக்க வேண்டும் என்றொரு முடிவுக்கு வந்தேன்.

பொதுவாக, ஒரு தயாரிப்பாளர் படம் ஆரம்பித்து, பூஜை போட்டால், அப்படத்தை வாங்க விரும்பும் விநியோகஸ்தர்கள் கொஞ்சம் முன் பணம் தந்து, ஏரியாவை புக் பண்ணிக் கொள்வார்கள். இது அப்போதல்ல; எப்போதும் சினிமாத் துறையில் நம்பிக்கையின் அடிப்படையில் நடந்து வருகிற விஷயம்.

அப்படித்தான் நான் 'பம்பாய் பாபு' படத்துக்கு பூஜை போட்ட சமயம், மைசூர் விநியோகஸ்தர் மல்லி, ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாக எனக்குத் தந்திருந்தார்.

அந்தப் பணத்தைத்தான் நான் திருப்பித் தராமல் மோசடி செய்துவிட்டதாகப் புகார் தந்திருந்தார்.



ஒரு படம் பாதியில் நின்று போகிறதென்றால் அதற்கு விவரிக்க முடியாத பல காரணங்கள் உண்டு. அந்த வலியைத் தாங்கிக் கொள்வது சாதாரண விஷயமல்ல. நின்று போகிற படம் மறுபடி தொடங்கி, நடக்க வேண்டும் என்பதுதான் எல்லா தயாரிப்பாளர்களின் பிரார்த்தனை, முயற்சி, கனவு எல்லாமாகவும் இருக்கும்.

ஏதோ காரணங்களால் 'பம்பாய் பாபு' நின்று போகவும் அதை எப்படித் தொடங்கி, எடுத்து முடிப்பது என்கிற யோசனையில்தான் நான் இருந்தேன்.

'நின்றது, நின்றதுதான். கொடுத்த அட்வான்ஸ் திரும்ப வராது' என்று அவரே முடிவு செய்து கொண்டு, என்னிடம் நேரடியாகக் கேட்காமலே, தாமே போலீஸிலும் புகார் தந்துவிட்டிருக்கிறார். அதுவும் பண மோசடி செய்துவிட்டதாக!

இதைக் கேள்விப்பட்டபோது நான் துடித்துப் போய் விட்டேன். சினிமா உலகில் 'நல்ல நடிகன்' என்பதைவிட, நாணயஸ்தர் என்ற பெயரைச் சம்பாதித்ததில்தான் எனக்கு எப்போதுமே அதிகப் பெருமை. யாரையும் ஏமாற்றவெல்லாம் நான் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை.

இதையெல்லாம் நான் விரிவாக அந்த போலீஸ் அதிகாரியிடம் எடுத்துச் சொன்னேன். விநியோகஸ்தர்கள் முன்பணம் தருவதும் படம் முடிந்தால்தான் அந்த அமௌண்ட் செட்டில் செய்யப்படும் என்கிற சினிமா உலக நடைமுறையையும் எத்தனை விளக்கியும் அவர் கேட்கவில்லை.

''அதெல்லாம் எதுக்குங்க? பேசாம அவருக்கு ஒரு செக் போட்டுக் குடுத்திட்டீங்கன்னா பிரச்னை முடிஞ்சிடும்'' என்றார்.

என் மானேஜர் தயங்கி, ''உடனடியா பேங்க்ல அத்தனை பணம் இல்லையே?'' என்றார்.

"போஸ்ட் டேட்டட் செக்காவது குடுத்துடுங்க. ஒரு வாரத்துல அரேஞ்ச் பண்ணிடுங்க'' என்றார் கறாராக.

வேறு வழியில்லாமல் என் மானேஜரை வீட்டுக்கு அனுப்பினேன், செக் புத்தகம் கொண்டு வர.

அப்போதுதான் எனக்கு உறைத்தது. அஸிஸ்டெண்ட் கமிஷனர்தானே என்னுடன் பேச வேண்டும் என்றார். இவர் - வேறு யாரோ எதற்கு என்னை விசாரிக்க வேண்டும்? அவரிடமே கேட்டேன்: "ஏஸிதானே என்னைப் பார்க்க அழைத்தார்? அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்!" என்றேன்.

என்னை ஏற இறங்கப் பார்த்தவர், வேண்டாவெறுப்பாக என்னை ஏ.சி.யின் அறை வாசலுக்குக் கூட்டிப் போய், கதவைத் திறக்காமல், அங்கிருந்தே, "இவர் உங்களைப் பார்க்கணுமாம்!" என்று குரல் கொடுத்தார்.

உள்ளிருந்து வந்த பதில் என்னை மேலும் இடுக்கிடச் செய்தது. "அதெல்லாம் எதுக்கு? நீயே பார்த்து செட்டில் பண்ணிக்கப்பா!"

ஏதோ சதித்திட்டம் மாதிரி எனக்குப் பட்டது. உடனே என் வக்கீலுக்குப் போன் செய்ய விரும்பினேன்.

கமிஷனர் அலுவலகத்திலிருந்தே என் வக்கீல்களான பிக்ஷேஸ்வரன் (இன்று இவர் இல்லை) பஞ்சாபகேசன் இருவருடனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொன்னேன்.

அதிர்ந்த அவர்கள், "என்ன வி.கே.ஆர், இப்படி மாட்டிக்கிட்டீங்க? ம்.. சரி, அவங்க என்ன கேட்டாலும் மறுக்காம எழுதிக் கொடுத்துட்டு வாங்க. ஏன்னா, இன்னைக்கு வெள்ளிக்கிழமை. ஏதாவது காரணம் சொல்லி உங்களை 'உள்ள' போட்டாலும் உடனடியா பெயில்ல எடுக்கமுடியாதபடி சனி, ஞாயிறு ரெண்டு நாளும் கோர்ட் லீவு. புரிஞ்சுதா?" என்றனர்.

மானேஜர் செக் புத்தகத்துடன் திரும்பி வந்தார். நாற்பதாயிரம் ரூபாய்க்கு செக் எழுதிக் கொடுத்துவிட்டு நேரே வக்கீல் வீட்டுக்குப் போனேன்.


நடந்தவற்றை விரிவாக விளக்கினேன்.

"வி.கே.ஆர்! நீங்க பயப்பட வேண்

ஆபீஸில் நடந்த



"என்னப்பா அக்ரமம் இது! என்கிட்ட ஏன் உடனே சொல்லலை?" என்றார் சிவாஜி.



செப்பு மொழிகள்....

கூட்டணி அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் பொறுமைசாலியாக இருக்க வேண்டும். எல்லோருடைய நம்பிக்கைக்கும் உரியவராக இருக்க வேண்டும்; அவமானங்களைத் தாங்கிக் கொள்ளபவராக இருக்க வேண்டும்.

— பிரதமர் குஜ்ரால்

டாம். வினியோகஸ்தர் தந்த முன்பணத்தைத் திரும்பத் தர்றது. அல்லது படம் வெளியானதும் ஏரியா குடுக்கறதுங்கறதெல்லாம் 'சிவில்' விஷயம்தான். தற்சமயம் உங்க படம் நின்னு போயிருக்கலாம்! திரும்ப வராதுன்னு என்ன நிச்சயம்? அதனால நீங்க பயப்பட வேணாம். இது கிரிமினல் கேஸ் ஆக வாய்ப்பே இல்லை. தேவையில்லாம உங்களை மிரட்டியிருக்காங்க!" என்று ஆறுதல் சொன்னவர், "எதற்கும் கவர்னரின் ஆலோசகர்களுக்கு ஒரு புகார் மனு தந்துடலாம்" என்றனர்.

அப்போது தமிழகத்தில் கவர்னர் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது.

தவே, சுப்ரமணியம் என்ற இரு அதிகாரிகள் கவர்னரின் ஆலோசகர்களாக இருந்தார்கள்.

விஷயத்தை விரிவாக விளக்கி ஒரு மனு எழுதி அவர்களிடம் சேர்ப்பித்துவிட்டுத்தான் வீடு திரும்பினேன்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. சிவாஜியைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போனேன்.

"என்ன ராமு, ஆளையே காணோமே ஒரு வாரமா?" என்றார் சிவாஜி.

"கொஞ்சம் ஷூட்டிங் இருந்தது. தவிர ரெண்டு மூணு புரொட்யூசர்கள் என்னை புக் பண்ண வந்து, கமிஷனர் ஆபீஸுக்கு இழுத்துட்டுப் போயிட்டாங்க!" என்றேன்.

"என்ன சொல்ற?"

பம்பாய் பாபு படத்தின் மைசூர் விநியோகஸ்தர் மல்லி அடித்த கூத்தை விரிவாக சிவாஜியிடம் விளக்கிச் சொன்னேன்.

"என்னப்பா அக்ரமம் இது! என்கிட்ட ஏன் உடனே சொல்லலை? கமிஷனர் செந்தாமரை நம்ம நண்பராச்சே!" என்றவர், உடனே கமிஷனருக்குப் போன் செய்தார்.

விஷயத்தை முழுக்கக் கேட்ட கமிஷனர், "வி.கே.ஆர் இப்படியா ஏமாற்றுவார்? எனக்கே தெரியாமல் என் ஆபீஸில் இப்படியொரு விஷயம் நடந்திருக்குங்கறதைக் கேட்க வருத்தமா இருக்கு. நீங்க நாளைக்கே உங்க பி.ஏ. குருமூர்த்தியையும் வி.கே.ஆரையும் என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க" என்றார்.

அவ்வண்ணமே மறுநாள் நான் கமிஷனர் செந்தாமரையைச் சந்தித்து, விளக்கினேன். கூடவே தவே, சுப்ரமணியத்திடம் அளித்த மனுவின் பிரதியையும் அவரிடம் அளித்தேன்.

"நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. இது கிரிமினல் கேஸ் இல்லை. உள்ளுக்குள்ள வேறு ஏதோ நடந்திருக்கு. நான் கவனிக்கிறேன். எதுக்கும் நீங்க கொடுத்த செக்குக்கு தைரியமா ஸ்டாப் பேமெண்ட்டு கொடுத்துடுங்க. பிறகு பார்த்துக் கொள்ளலாம்!" என்றார்.

நான் கொஞ்சம் தைரியம் பெற்று ஸ்டாப் பேமெண்ட் தரச் சொல்லி வங்கிக்குச் சொல்லி விட்டேன்.

அதற்குப் பின்தான் சற்று தெளிவாக சிந்திக்க ஆரம்பித்தேன். இத்தனை பிரச்னைக்கும் மூல காரணம் மல்லி. அவரிடமே நேரில் பேசி விட்டால் என்ன என்று தோன்றியது.

உடனே அவரைத் தொடர்பு கொண்டேன். பிரபல வழக்கறிஞர் நாராயண ஐயங்கார் முன்னிலையில் அவரிடம் வெளிப்படையாக இப்படிச் சொன்னேன். "என்னிடம் ஒரு வார்த்தை சொன்னீர்களா, இப்படி போலீஸில் புகார் தரப் போகிறேன் என்று! பணம் தரக் கொஞ்சம் தாமதமாகலாம். ஆனால் கட்டாயம் தந்து விடுவேன். யாரையும் ஏமாற்றும் எண்ணம் எனக்கில்லை" என்றேன்.

ஏதோ அவசரத்தில் அப்படியொரு காரியம் செய்து விட்டவர், அப்போது என்னிடம் வருந்தினார்.

நான் சொன்னேன்: "நான் நாணயஸ்தன். இந்தப் படம் முடிகிறதோ இல்லையோ - உங்கள் பணம் வந்து சேர்ந்து விடும். இது உறுதி!"

அதன்படியே வக்கீல் நாராயண ஐயங்கர் முன்னிலையில் மல்லியின் கணக்கை விரைவில் செட்டில் செய்தேன்!

இதை எதற்குச் சொல்கிறேனென்றால், சினிமா உலகில் எப்போது, எந்த ரூபத்தில் பிரச்னை வரும் என்றே சொல்ல முடியாது!

நாம் கடைப்பிடிக்கிற தர்மம்தான் நம்மை எப்போதும் காக்க வேண்டும்; காத்துக் கொண்டும் வருகிறது!

(தொடரும்)

"காட்டிலிருந்து அடித்தால் கொள்ளை; நாட்டிலிருந்து அடித்தால் ஊழல்!"

— பூலான் தேவி சிறப்பு பேட்டி

சோழா ஓட்டலில் பூலான் தேவியும் அவரது கணவர் உமர்சிங்கும் தங்கியிருந்த அறை. இரவு மணி பத்து. ஸ்டார் டி.வி.யில் நியூஸ் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. லாலு பிரசாத், தான் ஏன் கட்சியை உடைத்தேன் என்று ஆவேசமாய் பேசிக் கொண்டிருந்தார். அது முடிந்ததும் நம்மிடம் பேசினார்...

கல்கி : சிறுவயதில் எப்போதாவது அரசியலில் நுழைவோம், எம்.பி. ஆவோம் என்றெல்லாம் நீங்கள் கனவு கண்டது உண்டா?

பூலான் தேவி : துளியும் நினைத்துப் பார்த்தது கிடையாது. காட்டிலே கொள்ளைக்காரியாக வாழ்ந்த சமயம், எப்படியும் ஒரு நாள் போலீசில் மாட்டிக் கொண்டு விடுவோம் அல்லது, அவர்களுடனான மோதலில் துப்பாக்கி குண்டுபட்டு இறந்து போவோம் என்றுதான் நினைத்தேன். சரணடைந்து ஜெயிலில் அடைக்கப்பட்ட போது, ஆயுள் முழுக்க சிறையிலேயே கழிந்து விடும் என்றுதான் நினைத்தேன்.



கல்கி : கடந்த கால சிறை வாழ்க்கையைப் பற்றி நினைக்கிற போது எப்படி உணர்கிறீர்கள்?

பூலான் : ஒன்று, இரண்டல்ல; பதினொரு வருடங்கள் மூன்று மாதங்கள் நான் ஜெயிலில் இருந்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும், நேற்றுவரை என் வாழ்க்கை ஓடி விட்டது. இன்று என்ன நடக்குமோ என்று ஒருவித பயத்துடனேதான் கண் விழிப்பேன். ஜெயிலுக்குள்ளே நடைப்பிணமாகத்தான் நான் இருந்தேன்.

கல்கி : உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப் புத்தகமாய் எழுதலாம் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?

பூலான் : எனக்கு ஏற்பட்ட கொடுமைகள் வேறு ஒரு பெண்ணுக்கு ஏற்பட்டு விடக்கூடாது. எனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை - நான் அனுபவித்த சித்திரவதைகளை

செப்பு மொழிகள்....

தாயே இந்த மாநிலத்தில் உங்களுக்கு இருக்கிற செல்வாக்கைக் காட்டும் வகையில் இந்தக் கூட்டம் (சேலம்) அமைந்திருக்கிறது. நம் தொண்டர்கள் உங்களுக்கு வாளாகவும் கேடயமாகவும் இருப்பார்கள். நடைபெறும் குருசேத்திரப் போரில் நீங்கள் வெற்றி பெறும்வரை ஓய மாட்டோம்.

— செல்வ கணபதி



மக்கள் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். எனவேதான் புத்தகமாக எழுத ஒப்புக் கொண்டேன்.

கல்கி : மாலா சென் எழுதிய உங்கள் வாழ்க்கை வரலாற்றை, ஏன் சரியில்லை என்று குற்றம் கூறினீர்கள்?

பூலான் : ஜெயிலில் என்னை வந்து பேட்டி கண்டார் மாலா சென். என் வாழ்க்கையில் நடந்தவற்றைப் புத்தகமாக எழுதியபோது, தமது கற்பனையையும் சேர்த்து விட்டார். அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவேதான் இரண்டாம் முறையாக ஒரு பிரெஞ்சு பத்திரிகையாளரின் உதவியுடன் என் நிஜமான சுய வரலாற்று நூலை எழுதினேன்.

கல்கி : பாண்டிட் குயின் திரைப்படத்தைத் தடை செய்யக் கோரியது ஏன்?

பூலான் : அந்தப் படத்தில் இடம் பெற்ற அனைத்துமே, நான் எனது வாழ்க்கையில் அனுபவித்தவைதான் என்றாலும், நடந்த சித்திரவதை களை, அப்பட்டமாய் - விஷுவலாய் திரையில் காட்டுவது தேவையில்லாதது என்று நான் கருதினேன். நாகரிகம் கருதி சில குறிப்பிட்ட காட்சிகள், திரையில் தவிர்க்கப்பட வேண்டும் என்று விரும்பினேன். அதுதான் காரணம்.

கல்கி : அரசியலில் சேரும் எண்ணம் எப்படி ஏற்பட்டது?

பூலான் : முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சியில் சேரும்படி அழைப்பு வருகிற வரை, அரசியலில் ஈடுபடுகிற எண்ணம் எனக்குக் கிடையாது. அவர், நான் சிறையிலிருந்து வெளியில் வர உதவினார். நானும், தனி மனுஷியாய் இருப்பதைவிட ஓர் அரசியல் பின்பலத்துடன் இருப்பது நல்லது என்று நினைத்துக் கட்சியில் சேர்ந்தேன்.

கல்கி : ஒரு வேட்பாளராக நீங்கள் தேர்தல் பிரசாரம் செய்தபோது மக்களுடைய ரியாக்ஷன் எப்படி இருந்தது?

பூலான் : வேட்பு மனு தாக்கல் செய்த நாளன்றே, நான் தேர்தலில் ஜெயிப்பேன் என்று உறுதியாக நம்பினேன். நான் உ.பி.யில் மக்கள் ஆதரவு பெற்ற கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டது மட்டுமல்ல; அதற்குக் காரணம். உ.பி.யின் கிராமப்புற மக்களுக்கு, நான் கொடுமைகளை, சித்திரவதைகளை அனுபவித்த அப்பாவிப் பெண் என்பது நன்றாகத் தெரியும். அவர்களின் அனுதாபம் எனக்கு உண்டு என்பதும் தெரியும். எனவே தேர்தலில் வென்று எம்.பி. ஆவது எனக்குச் சுலபமாகவே இருந்தது.

கல்கி : உங்களது பழைய நாட்களை நினைத்துப் பார்ப்பது உண்டா?

பூலான் : என்னென்ன கொடுமைகளை நான் அனுபவிக்க நேர்ந்ததோ, எல்லாம் நடந்து முடிந்த கதை என்பது ஒரு விதத்தில் சரிதான் என்றாலும், கடவுளே! என்னை ஏன் இந்த பூமியில் பெண்ணாகப் பிறக்க வைத்தாய் என்று நான் கதறிய நாட்கள் எத்தனை தெரியுமா? என் பெண்ணை இத்தனை கொடுமைப் படுத்துகிறார்களே, இங்கே நடக்கிற அநியாயத்



''தலைவர் பலே கில்லாடிப்பா...''
''ஏன் அப்படி சொல்றே?''
''எல்லா துறையிலேயும் ஊழல் தலைவிரிச்சு ஆடுறதா தலைவர்கிட்ட சொன்னேன். உடனே தலைவிரித்தாடும் ஊழலை மொட்டை அடிக்க நூறு கோடி ரூபாய் ஒதுக்கப்படும்னு சொல்றாரே!''

— நாகூர் ஆர். லோகநாதன்

தைக் கேட்க ஆளில்லையா என்று கதறிய என்னைப் பெற்ற தாயின் குரல், அன்று ஏன் யாருடைய காதிலும் விழவில்லை என்று கடவுளை நோக்கி நான் எத்தனை தடவை கேட்டிருக்கிறேன் தெரியுமா?

கல்கி : கொள்ளைக்காரியாக இருந்து, பலரைக் கொன்று விட்டோமே என்று நீங்கள் எப்போதாவது வருத்தப்பட்டிருக்கிறீர்களா?

பூலான் : (லேசாய் கோபப்படுகிறார்) இல்லை. துளியும் எனக்கு வருத்தமில்லை. சொத்துக்களுக்கு ஆசைப்பட்டு, நான் கொள்ளைக்காரியாகவில்லை. எனக்குக் கொடுமை இழைத்தவர்களைப் பழி வாங்கவே துப்பாக்கி ஏந்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே, நான் ஒரு கொள்ளைக்காரியாக - கொலைகாரியாக இருந்ததற்காகத் துளியும் வருத்தப்படவில்லை.

கல்கி : இன்றைய அரசியல்வாதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பூலான் : காட்டிலிருக்கிற போது அடித்தால் கொள்ளை என்கிறார்கள். நாட்டிலிருக்கிற அரசியல்வாதிகள் அடித்தால் ஊழல் என்கிறார்கள். அவர்களுக்குச் சட்டம் தண்டனை தரும். ஆனால் இவர்களுக்கு?

கல்கி : உங்களைக் கவர்ந்த அரசியல் தலைவர்?

பூலான் : சமாஜ்வாடி தலைவரான முலாயம் சிங் யாதவ்ஜிதான்.

கல்கி : உங்களுக்கு உத்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக வேண்டும் என்ற ஆசை இருக்கிறதா?

பூலான் : உ.பி. முதலமைச்சர் நாற்காலி மீது எனக்கு ஆசை கிடையாது. நான் மீனவ இனத்தைச் சேர்ந்தவள். இந்தியாவின் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மீனவர்களை மேம்படுத்த இறுதிவரை பாடுபட வேண்டும் என்பதே என் ஆசை.

கல்கி : சினிமா பார்ப்பது உண்டா?

பூலான் : அதற்கெல்லாம் எனக்கு எங்கே நேரம் இருக்கிறது?

கல்கி : சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றிக் கேள்விப்பட்டது உண்டா?

பூலான் : ம்....

கல்கி : அவன் கூட, தன் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கி, பொது மன்னிப்புத் தர வேண்டுமென்று கோருகிறானே?

பூலான் : வீரப்பன் முதலில் சரணடையட்டும். அரசு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கட்டும். அதன் பிறகுதான் மற்றதெல்லாம் சாத்தியம்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**



நோஞ்சான் விட்ட சவால்!

ஒரு கிராமத்தில் இருந்த இளைஞர்கள் சிலர், ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கி எறிந்து தங்களுடைய வலிமையை சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த வழியாக வந்த ஒரு நோஞ்சான், ''அந்தப் பாறாங்கல்லைத் தூக்கி வீசுவதில், என்ன பலம் இருக்கிறது? அதோ தெரிகிறதே, அந்த மலையையே என்னால் சுமந்து காட்ட முடியும்!'' என்று அலட்சியமாகக் கூறினான்.

''எங்கே சுமந்து காட்டு, பார்க்கலாம்'' என்றனர் இளைஞர்கள்.

''உடனே முடியுமா? ஒரு மாதத்திற்குத் தினந்தோறும் எனக்கு ஆட்டுக் கறி, கோழிக் கறி, மீன், முட்டை ஆகியவற்றோடு உணவு அளிக்க வேண்டும். அதன் பிறகு சுமந்து காட்டுகிறேன்; பாருங்கள்!'' என்று கூறினான் நோஞ்சான்.

இளைஞர்கள் சம்மதித்தனர். கிராமவாசிகள், ஆளுக்கு ஒரு நாள். நோஞ்சானுக்கு உணவு அளித்தார்கள். ஆளே அடையாளம் தெரியாதபடி, பருமனாகி விட்டான்.

முப்பதாவது நாள் ஊர் மக்கள் அனைவரும், அந்த அதிசயத்தைக் காண மலைக்கு அருகில் திரண்டு வந்து நின்றனர்.

மாஜி நோஞ்சான் வந்தான். அருகில் நின்று கொண்டிருந்தவர்களிடமிருந்து துண்டுகளை வாங்கித் தலையில் பெரிய முண்டாக கட்டினான். ''ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்? மலையைத் தூக்கி, என் தலை மீது வையுங்கள். சுமந்து காட்டுகிறேன், பாருங்கள்!'' என்றான்!

— தமிழக நாட்டுப்புறக் கதைகள்
நூலிலிருந்து : வயலூர் ஆர். பார்த்திபன்

மூலம் : **டேனியல் ஸ்டீல்** தமிழில் : **ரா.கி. ரங்கராஜன்**

கணவன் பிராட் எதையோ ஒளித்து மறைத்துத் தன்னை ஏமாற்றியிருக்கிறான் என்பது மட்டும் பேஜுக்குப் புரிந்தது. ஆனால் என்ன அது என்று தெரியாதவனாகத் தவித்தான். பிராடுக்கும் சங்கடமாக இருந்ததோ என்னவோ, வீட்டுக்குப் புறப்பட்டான். இனி மேலும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து என்ன ஆகப் போகிறது? ஆலிஸனைப் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். மற்ற விஷயங்களை டாக்டரிடம் பேசியாயிற்று.

"நான் முதலில் போகிறேன். ஆண்டி தனியாக இருப்பான். நீ வேண்டுமானால் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வா," என்று பேஜிடம் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

சற்றைக்கெல்லாம் பேஜும் புறப்பட்ட சமயம், தாரென்ஸன் தன் இரண்டு மகன்களுடன் வந்து சேர்ந்தான். கணவன் க்ளீவ்லந்திலிருந்து வந்துவிட்டான் என்று மட்டுமே அவனிடம் சொன்னான் பேஜ். அவனுக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றிச் சொல்லவில்லை. அவள் மனம் அலை பாய்ந்த வண்ணம் இருந்தது. தாரென்ஸனின் பையன்களிடம் ஹலோ சொன்னது கூட ஏதோ சம்பிரதாயத்துக்காகச் சொன்ன மாதிரி இருந்தது.

"ஆலிஸனை வார்டுக்குக் கொண்டு வர ரொம்ப நேரம் ஆகுமென்று சொல்கிறார்கள். நான் வீட்டுக்குப் போய்விட்டுக் காலையில் வரலாமென்று பார்க்கிறேன்," என்றாள்.

தாரென்ஸன் அவளைக் கவலையுடன்

15




11:29

பார்த்து, "பாவம், ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாய். நன்றாய்த் தூங்கி ரெஸ்ட் எடுத்துக் கொள்," என்றான்.

"பார்க்கிறேன்," என்று புன்னகை செய்தாள் அவள். ஆனால் வேதனை அவள் முகத்தில் வரிவரியாகக் கோடிட்டிருந்தது. அப்படியொரு சோகத்தைத் தாரென்ஸன் தன் வாழ்க்கையில் கண்டதேயில்லை.

"உடம்பைப் பார்த்துக் கொள்," என்று மறுபடியும் அன்போடு சொன்னான்.

வீட்டை அடைந்தபோது, பிராடு ஆண்டியின் அருகே உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள். பிரேஸிதி ஜேன் தன் வீட்டுக்குப் போய் விட்டாள் என்று புரிந்தது.



''ஆலிக்குத் தலையில் பெரிய காயம். ஆனால் டாக்டர்கள் சரிபண்ணிவிடுவார்கள். சிக்கிரம் வீட்டுக்கு வந்து விடுவாள்,'' என்று பிராடு சொல்லிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. பேஜுக்கு அது பிடிக்கவில்லை. குழந்தையை வீணாக ஏமாற்றக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

ஆண்டி வெளியே போனான். ஜன்னலிலிருந்து பார்த்தபோது, தோட்டத்துப் புல்வெளியில் நாய்க்குட்டி லிஸ்ஸியுடன் அவன் விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது.

கணவனின் பக்கம் திரும்பாமலே, ''குழந்தையிடம் போய் ஏன் என்னென்னவோ சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள் பேஜ். வேறு

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம்.
© டேனியல் ஸ்டீல்

ஆயிரம் கேள்விகள் அவள் நாக்கு நுனியில் நின்றிருந்தன. அவைகளை இரவு ஆண்டி தூங்கிய பிறகு கேட்கலாமெனத் தீர்மானித்தாள்.

"ஏன்? ஆண்டியிடம் நான் என்ன சொல்லி விட்டேன்?" என்றான் பிராடு காட்டமாக. அவன் மனத்திலும் பல்வேறு எண்ணங்கள் முட்டி மோதிக் கொண்டு நின்றன. ஆலிஸன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலைமை மட்டுமல்ல; இந்த விபத்தின் விளைவாகத் தங்கள் இல்லறமே ஆட்டம் கண்டுகொண்டிருப்பதை அவனும் உணர்ந்திருந்தான். அவளும் அறிந்திருந்தாள்.

"ஆலிக்கு ஒன்றுமில்லை, நல்லபடி வீட்டுக்கு வந்து விடுவாள் என்று ஏன் சொல்கிறீர்கள்? நமக்கே எதுவும் தெரியாதே?"

"தலைமை சர்ஜன்தான் சொன்னார் - அவள் உயிர் பிழைக்க நல்ல சான்ஸ் இருக்கிறது என்று."

"பிழைப்பாள் என்று சொன்னார். ஆனால் எப்படி? கோமா நிலைமையிலா? குருடியாகவா? நடமாட முடியாத ஜடமாகவா? அவர் அப்படி எதுவும் சொல்லாதபோது ஆண்டியின் மனசில் அனாவசிய நம்பிக்கைகளை ஏற்படுத்துவானேன்?"

பிராடுக்கு எரிச்சல் வந்தது. "என்னை என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்? ஆலியின் மூளை எக்ஸ்ரேயையெல்லாம் அவனுக்குக் காட்டச் சொல்கிறாயா? இதோ பார், ஆண்டி குழந்தை. அவன் மனம் வேதனைப்படக் கூடாது. ஆலியிடம் அவனுக்குக் கொள்ளைப் பிரியம்...."

"எனக்கும்தான் பிரியம். ஆலிஸன் மீதும் பிரியம். ஆண்டி மீதும் பிரியம். ஆனால் அதற்காகத் தப்பான நம்பிக்கை தர வேண்டுமா? இன்று ராத்திரி அவளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்? ஆபரேஷனில் அவள் பிழைக்காவிட்டால்?" என்னும்போதே அவளுக்குக் கண்ணீர் பெருகி வழிந்தது.

"அப்படி ஒன்றும் நேராது. நேர்ந்தால் நாம் பார்த்துக் கொள்ளலாம்."

"நாம்? நாம் என்றா சொன்னீர்கள்?" இகழ்ச்சியாகச் சிரித்தாள் பேஜ். ஆண்டி வெளியே விளையாடிக் கொண்டிருந்ததால், எதைப் பின்னர் கேட்கலாமென்று நினைத்திருந்தாளோ அது அவள் வாயில் வந்து விட்டது. "எனக்குத் தெரியாமல், மர்மமாக என்னென்னவோ நடந்து கொண்டிருக்கிறது. நாம் பார்த்துக் கொள்ளலாம் என்கிறீர்கள்! எதை?"

"சரி, விடு. ஏதோ போதாத வேளை எல்லாம் கோளாறாகி விட்டது" என்றான் அவன் நிதானமாக. "ஆலிஸனுக்கு இப்படி ஒரு விபத்து நேர்ந்திராவிட்டால் உனக்கு எதுவும் தெரிந்திருக்காது. க்ளீவ்லந்துக்குப் போன் போட்டு என்னைக் கூப்பிடும்படி பாலண்டினிடம் நீ சொல்லியிருக்கவே தேவையில்லை."

"ஏன்? ஏன் தேவையில்லை?" என்று வெடித்தாள் அவள். பெற்ற மகள் வாழ்வா சாவா என்று இருக்கும்போது, கணவன் எங்கே இருக்கிறான் என்று கூப்பிட்டதா தப்பு?

"நீ கூப்பிட்டதால் என்னைப் பற்றி அவனுக்குத் தெரிந்து விட்டது. அவனுக்குத் தெரிய வேண்டிய அவசியமே இல்லை."

"அவருக்குத் தெரிய வேண்டாம். எனக்கு? நீங்கள் எங்கே போகிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்று எனக்குத் தெரிய வேண்டாமா? மூளை கெட்ட முண்டமாக இத்தனை நாளும் நான் இருந்து வந்திருப்பது இப்போதல்லவா தெரிகிறது? எத்தனை தடவை இதுபோல நீங்கள் செய்திருக்கிறீர்களோ, யார் கண்டது?" என்றாள் பேஜ். அவன் எங்கே போயிருந்தான் என்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் க்ளீவ்லந்துக்குப் போகவில்லை என்பது மட்டும் நிச்சயமாய்த் தெரிந்தது.

பிராடு தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டான். எதையும் ஒப்புக் கொள்ள அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் வேறு வழியும் தெரியவில்லை.

"சரி, சரி. இப்போது அதல்ல பிரச்னை," என்றான்.

"ஏன் பிரச்னை இல்லை? இப்போது அது தான் பிரச்னை. அது ஒன்றுதான் பிரச்னை. இந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நீங்கள் எங்கேயோ ஊர் மேய்ந்து விட்டு வந்திருக்கிறீர்கள். எங்கே, யாருடன் சுற்றினீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு உரிமை உண்டு. நீங்கள் விளையாடுவது என் வாழ்க்கையோடு! அதை மறக்காதீர்கள்! இஷ்டப்படி வெளியே ஜாலியாய்ச் சுற்றுவது, நடுநடுவே இங்கே எட்டிப் பார்ப்பது என்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்டா இல்லையா? உண்மையைச் சொல்லுங்கள், பிராடு, உண்மையைச் சொல்லுங்கள்!" சினத்தினால் அவள் தேகம் தடதடவென்று ஆடியது.

பிராடுக்குக் குற்ற உணர்ச்சி குறைந்து கோபம் மேலிட்டது.

"தெரிந்து கொண்டாயிற்று அல்லவா? அப்புறம் என்ன? என் வாயால் எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்று அவன் சொன்னதைக் கேட்டதும் –

பேஜின் இதயம் இரண்டாக விண்டது. ஒரே ஞாயிற்றுக்கிழமைக்குள் எத்தனை பூகம்பங்களைத்தான் இந்த உள்ளம் தாங்கிக் கொள்ளும்! அவன் சொன்னதனைத்தையும் அவன் முழு மூச்சாக மறுக்க வேண்டும், எதுவுமே உண்மையில்லை என்று சொல்ல வேண்டும் என அவள் ஏங்கினாள். அப்படியல்ல, அவள் அச்சமெல்லாம் உண்மைதான் என்று இப்போது புலப்பட்டு விட்டது.



செப்பு மொழிகள்..

துரோகிகள் ஓடி விட்டதால் அ.தி.மு.க. தூய்மையாகி விட்டது. இனி நமக்குத் தோல்வியே கிடையாது. வெற்றிதான். மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்வரை நான் தூங்க மாட்டேன்!

— ஜெயலலிதா

''இந்தத் துரோகம் இப்போதுதான் ஆரம்பித்ததா அல்லது ரொம்ப நாளாக நடக்கிறதா?'' என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டாள்.

ஆனால் பதில் கூற அவன் விரும்பவில்லை.

''இந்த விஷயத்தைப் பற்றி நான் உன்னுடன் பேசப் போவதில்லை, பேஜ்,'' என்றான்.

''பேசியே தீர வேண்டும். உங்களுடன் நான் கண்ணாமூச்சி விளையாடத் தயாராயில்லை. யார் அவள்?''

''புண்ணியமாய்ப் போகட்டும், பேஜ். இப்போது ஏன் அதெல்லாம் பேச வேண்டும்?''

''ஏனென்றால், இதெல்லாம் ஒத்திப் போடக்கூடிய விஷயமல்ல!'' என்றாள் பேஜ். ''விவகாரத்தை ஆரம்பித்தவர் நீங்கள். ஆகவே என்ன நடக்கிறது என்பதை நான் தெரிந்து கொண்டாக வேண்டும். சொல்லுங்கள். சீரியஸான விவகாரமா? ரொம்ப நாளாக நடந்து கொண்டிருக்கிறதா? எப்போது? ஏன்?'' துயரத்தினால் அவள் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது. அவளைப் பரிதாபமாகப் பார்த்தான். ''என்ன நேர்ந்தது? உங்கள் ரகசிய நடவடிக்கை ஏன் எனக்குத் தெரியாமலே போயிற்று?''

கண்ணிருந்தும் குருடியாக இருந்து விட்டோமே என்ற அவலம் அவள் நெஞ்சைப் பிழிந்தது. எப்போது எந்த இடத்தில் கோட்டை விட்டோம்? எதைக் காணத் தவறி விட்டோம்? யோசித்து யோசித்துப் பார்த்தாள். அவன் மீது சந்தேகப்படும்படியாக எந்த விஷயமும் அவளுக்கு ஞாபகம் வரவில்லை.

பிராடு சங்கடத்துடன் அவளை வெறித்துப் பார்த்தான். பேஜுடன் சண்டை போடுவது என்றைக்குமே அவனுக்குப் பிடிக்காது. இப்போது அவளுடன் பேசிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவனுக்கு வெறுப்பாக இருந்தது. ஆனால் இனிமேல் தவிர்ப்பதோ தள்ளிப் போடுவதோ முடியாத காரியம் என்று அவனுக்குப் புரிந்தது. இதுவும் நல்லதற்குத்தான். என்றாவது ஒருநாள் அவள் தெரிந்து கொள்ளத் தான் போகிறாள். அது இன்றைக்குத் தெரிந்து விட்டுப் போகட்டும்....

தொண்டையைச் செருமிக் கொண்டான்.

''உன்னிடம் சொல்லவாமென்று கொஞ்ச நாள் முன்பு நினைத்தேன் பேஜ். ஆனால்... ஆனால்... அது தொடராது, நீடிக்காது, உன்னிடம் சொல்ல வேண்டிய தேவையே ஏற்படாது என்று தோன்றியதால் சொல்லவில்லை...''

''அப்படியானால்... சீரியஸா?''

வெகு நேரத்துக்கு அவன் பதில் கூறவில்லை. பிறகு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் கண்களைப் பார்த்தபோது அவள் இதயத் துடிப்பு நின்று விட்டது. இது தற்செயலாக ஏற்பட்ட தாற்காலிகமான சபலம் அல்ல என்று அவளுக்குப் புரிந்தது. இது சீரியஸான உறவு...

இனம் தெரியாத பீதியொன்று அவள் வயிற்றைக் கலக்கியது. ஓசைப்படாமல், எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், அவளுடைய மண வாழ்க்கை மடேலென்று முறிந்து விட்டாற்போல இருந்தது.

''அப்புறம்?'' என்றாள். அவள் குரலும் கரகரவென்று உடைந்து விட்டது. ''சொல்லுங்கள். அவ்வளவு சீரியஸான உறவா என்று கேட்கிறேனே, சொல்லுங்கள்.''

''இதுவரை இல்லை... இப்போது சீரியஸாகி விடும் போல இருக்கிறது,'' என்கையில் அவன் பேச்சில் குழப்பம் கூத்தாடியது. ''எனக்கு எதுவும் புரியவில்லை, பேஜ். அதனால்தான் உன்னிடம் சொல்லாமல் இருந்தேன்.''

''எத்தனை நாளாக இது?'' என்றாள் பேஜ். எத்தனை நாளாக நாம் குருடியாக இருந்திருக்கிறோம், எத்தனை நாளாக நாம் முட்டாளாக்கப்பட்டு வந்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளும் வெறி அவளுக்கு ஏற்பட்டிருந்தது. கண்ணீரை விழுங்கிக் கொண்டு அவன் பதிலுக்குக் காத்திருந்தாள்.

''எட்டு மாதமாக,'' என்றான் பிராடு. ''அவள் பெயர் ஸ்டிபானி. என் கம்பெனியில் விளம்பரப் பிரிவில் வேலை பார்க்கிறாள். ஒரு வாடிக்கையாளருக்குப் பரிசு கொடுப்பதற்காக நானும் அவளும் சேர்ந்து நியூயார்க்கிற்குப் போனோம்...''

''எப்படி இருப்பாள் அந்தப் பெண்?'' என்றாள் பேஜ். அப்படிக் கேட்பதே அவளுக்குக் குமட்டியது. ஆனால் சகலத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும்... அதுவும் இப்போதே தெரிந்து கொள்ள வேண்டும். அவள் துடித்தாள்.

எட்டு மாதமாக! எட்டு மாதமாக! கடவுளே! எப்படிப்பட்ட முட்டாளாக நான் இருந்து விட்டேன்!

(தொடரும்)

நாம் எளிதாக உச்சரிக்கும் ஆதரவான சொற்களுக்கு நிரந்தரமான எதிரொலிகள் உண்டு.
— அன்னை தெரஸா

நல்ல மார்க்கு வாங்கியிருந்தாள் தமிழரசி. ஆனால் பிளஸ் டூவில் சேர வேண்டாம் என்று முடிவாகிவிட்டது.

வேலைக்குப் போகச் சொன்னார்கள். குடும்பம் ஓடாவிட்டாலும் நடக்கவாவது வேண்டும்.

தமிழரசிக்கு வருத்தம்தான். பி.காம் வரையிலாவது முடிக்க கனவு வைத்திருந்தாள். குடும்ப நிலைமை புரிந்தது. ஆனால், வருத்தம் குறைந்து விடுமா என்ன...?

"டைப்பிங் படிச்சிருக்கே... பக்கத்து வீட்டுல ஹிண்டு வாங்கி அப்ளிகேஷன் போடு...."

எல்லாருக்கும் 'எஸ்.எஸ்.எஸ்.ஸி படித்த, சரளமாக ஆங் கிலம் தெரிந்த' டைப்பிஸ்ட்தான் தேவையாயிருந்தது.



இரண்டு தகுதிகளுமே இல்லாத போது, விண்ணப்பித்து இரண்டு ரூபாய் வீணடிப்பதா...?

"எனக்குத் தெரியாது. எப்படியாவது ஒரு மாசத்துல உருப்படியா வேலை தேடிக்கோ...."

அதற்கு மேல் அப்பா பேசவில்லை.

"நாலு இடம் போய் ஏறி இறங்குடி...." வயசுப் பெண்ணானாலும் அம்மா வற்புறுத்தி அனுப்பி வைத்தாள். உறவும் நட்பும் சொன்ன கம்பெனிகளின் பட்டியலைத் தந்தாள்.

தினத்துக்கு இரண்டாக தமிழரசி 'கம்பெனி' படிகளை ஏறினாள்.

ஆங்கிலத்தில் ஸ்டைலாக கேள்விகள் கேட்கப்பட்டபோது 'யெஸ்' 'நோ' என்று கூட சொல்லவிடாமல் பயம் பற்றிக் கொண்டது. படபடவென்று இதயம் அடித்துக் கொண்டது. படியிறங்கி வெளியேறிய பின்னும் நெடு நேரம் படபடப்பு நீடித்தது.

தினமும் கேள்விக்குறியுடன் வந்தார் அப்பா. அவர் பார்வையைச் சந்திக்கவே சங்கடமாயிருந்தது. தவிர்த்து ஒளிந்து கொள்ள இது என்ன எட்டடுக்கு மாளிகையா?

அப்பா வீடு திரும்பும் நேரம் வெளியே போக ஆரம்பித்தாள் தமிழரசி. ஒரு நாள் அது கண்ணில் பட்டது.

Wanted - Typists - Contact here. அம்புக்குறியிட்டிருந்த திசையில் இருட்டுப் பாதை. பயந்து கொண்டே போனாள். பூட்டிய கதவு!

ஆபீஸ் நேரம் காலை ஒன்பது முதல் மாலை ஐந்து. பலகை தொங்கியது.

மறுநாள் மீண்டும் போனாள் தமிழரசி.

ஆபீஸ் திறந்திருந்தது. ஐம்பது டைப்ரைட்டர்கள் ஒரே நேரத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. ஐம்பது ஜோடி பெண் கரங்கள் பறந்து கொண்டிருந்தன.

தமிழரசி தன்னை அவர்கள் மத்தியில் இறுத்திப் பார்த்தாள். குபுக்கென்று பயம் நெஞ்சை முட்டியது.

'திரும்பிப் போய்விடலாம்' என்று முடிவெடுப்பதற்குள் 'யெஸ்?' என்று தோளருகே குரல் கேட்டது.

வேறு வழியில்லை. "இங்கே டைப்பிஸ்ட் வேலை...?"

"Come this way..." அழைத்துச் சென்று அமர வைத்த பெண்ணின் மேஜையில் டி.என். சுகுமாரி - சூபர்வைஸர் என்ற பெயர்ப்பலகை.

"What is your name?"

"தமிழரசி..."

கையிலிருந்த சான்றிதழ்களைக் காட்டினாள்.

புரட்டிப் பார்த்தவிட்டு ஒரு டைப்ரைட்டரினடியில் உட்கார்த்தி வைத்துவிட்டார் சுகுமாரி. "இந்த லெட்டரை டைப் அடித்தால் பார்த்துச் சொல்றேன்..." - ஆங்கிலத்தில்தான் பேசினார். பதிலுக்குக் காத்திராமல் போய் விட்டார்.

தமிழரசிக்கு நம்பமுடியவில்லை. தலைதிருப்பாமல் மற்ற பெண்கள் டைப் அடித்தார்கள்.

கடிதத்தைப் பார்த்தாள். பதினைந்து வரிகள் தான் இருக்கும்.

காகிதத்தை உள்ளே பொருத்தி, வியர்வை கசிந்த உள்ளங்கைகளைப் புடைவையில் துடைத்துக் கொண்டு நடுங்கும் விரல்களால் வேலை தொடங்கினாள்.

பதினைந்து நிமிடங்களாயிற்று கடிதத்தை முடிக்க. எடுத்துப் பார்த்து ஒப்பிட்டாள். முதல் வரியில் ஐந்து தவறுகள்! கடிதம் முழுதும் தழும்பு தழும்பாய்த் தப்புகள்.

எஸ். ஐ. ஆர்

மீண்டும் முயன்றாள். தவறுகள் கூடினவே யொழிய குறையவில்லை.

வியர்த்து, முதுகு நனைந்து போயிருந்தது. மூச்சு வேக வேகமாக வந்தது. எழுந்து ஓடிப் போய்விடலாமா?

முடியாது... வேலை வேண்டும். தட்டில் வைத்துத் தந்த லட்டு மாதிரி ஒரு வேலைக்கு வாய்ப்பு வந்திருக்கிறது.. ஆனால் பாழாய்ப் போகும் பயம்! படபடப்பு....

அரை மணி நேரம் சென்று தமிழரசி ஐந்தாவது முறையாகக் காகிதத்தை மாற்றி மீண்டும் 'டியர் ஸர்' என்று தொடங்கிய போது சூபர் வைசர் எழுந்து வருகிற அசைவு தெரிந்தது.

அவ்வளவுதான்! உடலின் இயக்கமே நின்று போய் உறைந்தாள்.

''தமிழரசி... முடிச்சுட்டீங்களா?''

ஐம்பது வயதிருக்கும் அந்த அம்மாளுக்கு, ஆங்கிலம் தெரியாத அரை வேக்காடான தன்னை 'முடிச்சுட்டீங்களா....?' என்றதும் தமிழரசி நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

நிராகரித்த நான்கு காகிதங்களை எடுத்துப் பார்த்தார் சுகுமாரி. டைப் ரட்டருக் குள் இருந்த காகிதத்தில் 'Dear Sir,' தப்பில்லாமல் அடிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார்.

''குட்! தமிழரசி! நல்லா பண்றீங்களே, கொஞ்சம் வேகமா முயற்சி பண்ணுங்க...''

தமிழரசிக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

''மேடம்?'' குரல் தழுதழுக்க சுகுமாரியின் முகத்தைப் பார்த்தாள். கிண்டல் இல்லாத அன்பான சிரிப்பு.

இன்று தமிழரசி வேலை பார்க்கும் அந்த ஷாதராம் கம்பெனியில் டைப்ரைட்டர்களுக்குப் பதில் கம்ப்யூட்டர்கள். ஏ.ஸி. குளிர்ச்சியில் இயங்கும் ஐம்பது ஜோடி மென்கரங்கள்.

சுகுமாரி மேடம் உட்கார்ந்திருந்த இடத்தில் நவீனமாய் ஒரு மேஜை. அதன் மீது ஒரு கம்ப்யூட்டர். அதை இயக்கும் கரங்களில் இரண்டு பவுன் வளையல் கிண்ணென்று உட்கார்ந்திருக்கிறது. கழுத்தில் தாலிச் சரடும் முகம் நிறைந்த மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையில் நிமிர்ந்த முதுகுமாக அங்கே இன்று தமிழரசிதான்...

யார் வேலை தேடி வந்தாலும் சூபர்வைசர் தமிழரசி ஒருமையில் பேசுவதில்லை. ''குட்! தமிழரசி! நல்லா பண்றீங்களே...'' சுகுமாரி மேடம் குரல் அவள் மனத்தில் நிரந்தரமாகப் பதிவாகியிருக்கிறது.



மும்பை மசாலா:



ஹாங்காங் இணைப்பு; அழகிகள் வருத்தம்!

நான் ஆணையிட்டால்...

"தாக்கரேவுக்கும், கட்சித் தொண்டர்களுக்குமிடையே நான் ஒரு பாலமாகச் செயல்படுகிறேன்; அவ்வளவுதான்! மற்றபடி இவர்கள் முகம்கூட என் நினைவில் நிற்பதில்லை; ஒரு தலையசைப்பு, ஒரு முறுவலுடன் வெளியுலகத்தாருடனான என் தொடர்பு முடிந்துவிடுகிறது. கட்சிக்குள்ளே இருக்கும் எதிரிகளின் விஷமத்தனம்தான் இது" என்று புலம்பியிருக்கிறார், படத் தயாரிப்பாளராக மாறியிருக்கும் தாக்கரேயின் மருமகள் ஸ்மிதா. ஏன்? சில பல உயர் அதிகாரிகளின் திடீர் மாற்றலுக்கும், பதவி உயர்வுக்கும், மருமகள் சொல்படி மாமனார் நடப்பதுதான் காரணம் என்ற பேச்சு பலமாக அடிபடுவதுதான். ஹூம்! ரிமோட் கண்ட்ரோலுக்கே ஒரு ரிமோட் கண்ட்ரோலா?

கல்லைக் கண்டால்...

முரண்பாடுகளுக்கு மும்பை பெயர் போனதுதான்; ஆனாலும் இப்படியா? ஒரு புறம், சிவசேனா கார்ப்பொரேட்டர் ப்ரகாஷ் ஆய்ரே, மாஹிம் பகுதியிலுள்ள கனோஸா கான்வெண்ட் முன், பெற்றோர்களைத் திரட்டி கோஷம், மறியல் என்று, நர்ஸரி அட்மிஷனுக்காக வெளுத்து வாங்குகிறார். அவர் கனோ, 'மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் கல்வித்தரம் குறைந்து விடும். அதனால் இடமில்லை' என்கின்றனர். இவரோ புதிதாக ஒரு 'டிவிஷன்' ஆரம்பியுங்கள் எனப் போராடுகிறார். விஷயம் கத்தோலிக்கப் பள்ளிகளின் தலைமையகத்திற்குச் சென்று, அடுத்த வருடத்திலிருந்து ஐம்பது குழந்தைகளை கூடுதலாகச் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது! மறுபுறம் என்னவென்றால், நகர்ப்புறத்திலுள்ள இருபது முனிசிபல் பள்ளிகளில், படிக்கப் போதுமான மாணவர்கள் இல்லை என்று பள்ளிகள் இழுத்து மூடப்படப் போகின்றன!

சி.பி.ஐ... ஜாக்கிரதை!

மும்பையின் நெரிசலான, ஜனத்திரள் அதிகமுள்ள சாலைகளில், திடீரென்று சில சி.பி.ஐ அதிகாரிகள் தோன்றுகிறார்கள். தங்கள் அடையாள அட்டைகளைக் காட்டி, ரோடில் நடந்து கொண்டிருக்கும் பெண்மணிகள், கிழவிகள், குழந்தைகள் முதலானோரிடம், "தனியாகச் செல்கிறீர்கள்; ஜாக்கிரதை! அக்கம்பக்கத்தில் திருடர்கள் நடமாடுகிறார்கள்; கையில், கழுத்திலுள்ளதை கழற்றிப் பையில் வைத்துக் கொள்ளுங்கள்; அடுத்த தெருவில் ஏதோ கலாட்டா; உங்களை பத்திரமாக வீட்டில் சேர்ப்பது எங்கள் கடமை!" என்று கூடவே வீடுவரை துணை செல்கிறார்கள். நன்றி நவிலலுடன் விடை கொடுத்த பின்தான் தெரிகிறது இவர்கள் அடையாளம் தெரிந்து கொள்ளப்படாத ரகத்துக் கொள்ளைக்காரர்கள் என்பது! அசல் சி.பி.ஐ.காரர்களையே அசத்திவிடும் வகையில் இந்த நூதனத் திருடர்கள் செயல்படுகின்றனர்!

ஏமாற ஒரு க்யூவா?

'மும்பையில் அப்பா அம்மாவைக்கூட வாங்கி விடலாம்; ஒரு ஃப்ளாட்டை வாங்குவதென்பது குதிரைக் கொம்பு' என்ற கூற்றைப் பொய்யாக்கப் புறப்பட்டுள்ளனர், மலாடிலுள்ள, 'மார்ச் செண்ட் கன்ஸ்ட்ரக்‌ஷன்' காரர்கள். இந்த கம்பெனியில் அங்கத்தினராக 650 ரூபாய் கட்டிவிட்டு, அடுத்த ஐந்து நாட்களுக்குள் இன்னும் ஓர் ஐந்து நபர்களை அங்கத்தினர்களாக்க வேண்டும். (இல்லாவிட்டால் 650 ரூபாய் அம்போ!) இந்தச் சங்கிலித் தொடர் நீளும். அடுத்த கட்டமாக, மும்பையில் எந்த இடத்திலாவது மூன்று லட்சம் மதிப்புள்ள ஓர் ஃப்ளாட்டை தேர்வு செய்யலாம். அதை கம்பெனிக்காரர்களே பணம் கொடுத்து வாங்கித் தருவார்கள்; வீடு கைக்கு வந்ததும் முதலில் 5,000 ரூபாயும் இரண்டு வருடங்களுக்குத் தினம் பத்து ரூபாயும் கட்ட வேண்டும்; அவ்வளவுதான்! கனவா நனவா என நம்ப முடியாத விதத்தில், 13,000 ரூபாய் செலவில் மூன்று லட்சம் மதிப்புள்ள வீடு சொந்தமாகும்! (ஒன்றிரண்டு நபர்களுக்குக் கிடைத்துமிருக்கிறது!) ஆபீஸ் வாசலில் நிற்கும் நீண்ட க்யூவைக் கண்டால், பிறிதொரு ஊழலுக்கான பிள்ளையார் சுழி போல் இது தோன்றினாலும், இதுவரை யாரும் கம்ப்ளெயிண்ட் செய்யவில்லை என்பதால், ஆக்‌ஷன் எடுக்க முடியா தென்கிறார்கள் போலீஸார். ஏமாந்தாலும் 650 ரூபாய் தானே நஷ்டம் என சூதாடத் துணிந்து விட்டனர் மக்கள்!

சோனியான ஜி

'ப்ரோக்ராமிங்கா?' 'மார்க்கெட்டிங்கா?' என்ற பனிப் போர், இப்போது 'இன்னொரு மகாபாரதமாக' வெடிக்கும் நிலை. ஜீ டீ. வியில் பனிச்சிடுகின்றன. சேர்மன் சுபாஷ் சந்திரன், ப்ரோக்ராமிங் பிரசிடெண்டாக, (சாணக்யா) சந்திர பிரகாஷ் த்விவேதியை என்று நியமித்தாரோ அன்றே ஆரம்பித்து விட்டது தலைவலி. முக்கிய பதவிகளில் தமக்கு வேண்டியவர்களை அமர்த்திக் கொண்டு, "ஜீ டீ.வி.யை இந்தியப்படுத்துவேன்; ப்ரீச்கேண்டி கலாச்சாரத்திலிருந்து கிராமியப் பாரம்பரியத்துக்கு இட்டுச் செல்வேன்' என இவர் அறிவித்த நாள் முதல், மார்கெட்டிங் துறையின் ஜிண்டாலுக்கும் அவர் சகாக்களுக்கும் வயிற்றைக் கலக்க ஆரம்பித்து விட்டது. இரு துறைகளும் சேர்மன் முன் வழக்காடு மன்ற மமைக்க உள்ளார்கள். ஒரு சேனல் இரண்டு பட்டால், மற்றொன்றுக்குக் கொண்டாட்டம் எனும் வகையில், மார்கெட்டிங், ப்ரோக்ராமிங் இரண்டையும் ஒருவரிடமே ஒப்புவித்திருக்கும் சோனி டீ.வி இப்போது சக்கைப் போடு போடுகிறது!

சீனத்தின் மீது சினம்!

ஹாங்காங் சைனாவுடன் இணைந்ததில் மற்றவர்களுக்கு எப்படியோ, மும்பை அழகிகளுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். இதுநாள் வரை "கேதே பஸிஃபிக்"கில் ஏர் ஹோஸ்டஸாகக் கோலோச்சியவர்களில் நிறைய மும்பை இளைஞிகள் உண்டு! ஆனால் சமீப காலமாக, சீன, ஜப்பானியப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வர, 'மாண்டரின்' மொழி தெரிந்த சிங்கப்பூர், மலேயா, தாய்வான், ஜப்பான், சீனா அழகிகள் மீது கேதே பஸிஃபிக்கின் பார்வை திரும்பியுள்ளது. இப்போதைய இணைப்பினால், மும்பைப் பெண்களின் வாய்ப்புகள் சரியும்! இதைவிட்டால் எத்தனையோ ஏர்லைன்ஸ் உண்டுதான்! ஆனால் இதிலிருக்கும் 'க்ளாமர்' வேறெதிலும் இல்லையாமே?

மும்பையிலிருந்து: **ஜெயஸ்ரீ ராஜ்**



செப்பு மொழிகள்...

செங்கல் சுமக்கும் பெண்கள் காதில்கூட குண்டுமணி நகை இருக்கும். ஐந்து ஆண்டுகள் செங்கோலோச்சிய உங்களிடம் ஒரு நகை இல்லையே! திரையுலகில் சம்பாதித்து வாங்கிய அணிகலன்கள்கூட இல்லாமல், அவை எனக்குத் தேவையில்லை என்று கூறிய தங்கத் தலைவியே நீங்கள்தான் இந்தத் தமிழ் மக்களுக்கு அணிகலன்!

- காளிமுத்து



''அவர் போலி டாக்டர்னு எப்படி கண்டு பிடிச்சே?''

''எனக்கு மூலம்ன்னு சொன்னதும், அப்படியா வெரிகுட்! கைகுடுங்க! ஆண் மூலம் அரசாளும்ன்னு சொல்றார்''

- வலங்கைமான் நூர்தீன்

ரயில் சிநேகம்

கிருஷ்ணா

அர்ஜுனன் அம்பின் குறி தவறாத இலக்கு போல, சரக்கென நிலை குத்தி நின்றது என் பார்வை.

ஒரு நிமிடம் ஆடிப் போய்விட்டேன்.

அவளா? உணர்ச்சிகளின் கொந்தளிப்பையும் மீறி புத்தி அதட்டியது.

"எப்படி அவளாயிருக்க முடியும்? அவள் வயது இப்போது நாற்பத்தேழாக இருக்க வேண்டும்! இவளோ பதினெட்டு வயது இளம் பெண்!"

பிளாட்பாரத்தில் நடந்து வரும் அவளையே பார்த்தேன்.

அதே குதிரை நடை, முகத்தில் சுடர்விடும் தன்னம்பிக்கை, செப்பு வாய், மெல்லிய உடல் வாகு, அட, அதே போல கறுப்பு மச்சம் மூக்கின் நுனிமேல்!

மூச்சடைத்துப் பார்த்தேன் அவளை.

ரயில் புறப்பட இன்னும் கால் மணி நேரம் இருந்தது.

"யார் அவ? தெரிஞ்ச பெண்ணா?"

என் மனைவி முழங்கையால் இடிக்கவும் மூச்சு சீரானது.

"பார்த்த முகமாய்த் தெரியுது சீதா. ஆனால், ஞாபகம் வரலே."

அக்மார்க் பொய்! மறக்கக்கூடிய முகமா அது. ஆறு வருடம் தாம்பத்யம் நடத்திய உருவமாயிற்றே!

எனக்குள் பறவைகளின் சடசடப்பு!

அந்தப் பெண் எங்கள் கம்பார்ட்மெண்ட்டிலேயே ஏறி, எங்கள் எதிரிலேயே வந்து அமர்ந்தாள்.

வாயில் சூயிங்கம் போலும். மெல்லும் போது குழி விழுந்தது.

'உனக்கு அழகே, இந்த கன்னக் குழிதான் வித்யா!'

நினைவுகளின் தாக்கத்தில் அதிர்ந்தது உடம்பு.

"எக்ஸ்கியூஸ் மீ! காலைக் கொஞ்சம் தூக்கிக்கிட்டா, இந்தப் பெட்டியை கீழே வைச்சுடுவேன்."

குரல் கூட அதே, அதே!

பச்சை உறை போட்ட வி.ஐ.பி. சூட்கேஸ் இருக்கைக்கு அடியில் காணாமல் போனது.

கர்சீப் எடுத்து முகத்தை ஒற்றிக் கொண்டாள்.

"எங்கேம்மா போறே?"

சீதா யாருடனும் எளிதில் ஒட்டிக் கொள்வாள்.

"டெல்லி."

முன்பற்களின் நடுவில் சூயிங்கம் தென்பட்டது. என்னால் அவளிடமிருந்து கண்களை அகற்றிக் கொள்ள முடியவில்லை.

"உன் பேரு?"

"சூர்யா."

எனக்குள் குபுகுபுவென நீரூற்று பொங்கிப் பிரவாகித்தது.

சூர்யா! சூர்யா!

மனசுக்குள் ஜபம் செய்தேன்.

"நாங்க திருச்சி. உச்சிப்பிள்ளையாரைப் பார்த்திருக்கியா?"

சீதா வாத்சல்யமாய் இழைந்தாள். சூர்யா தோள் குலுக்கி, உதட்டைப் பிதுக்கிச் சிரித்தாள்.

அவளுடன் பேச, பேச என்று உள்ளம் துடித்தது. உதடு உலர்ந்து போய், நாக்கு புரள மறுத்தது.

"இவருக்கு கலெக்டர் ஆபீசில் வேலை. நான் ஸ்கூல் டீச்சராயிருந்தேன். கல்யாணமானதும் விட்டுட்டேன்."

"ஏன்?"

"இவர் விடச் சொல்லிட்டார்."

என்னைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

மனசு குளிரப் பார்த்தேன். அவள் புன்னகையை மிச்சம் மீதி விடாமல் உள்ளே இரசித்து மலர்ந்தேன்.

"ஏன் அங்கிள் வேலைக்குப் போக வேண்டாம்னு சொல்லிட்டீங்க?"

அங்கிள்! ஜீரணிக்க முடியாத அவஸ்தை

யில், தொண்டைக்குழியில் முள் சிக்கிக் கொண்ட வலி.

அங்கிள்! அங்கிள்!

ஒவ்வொரு அணுவிலும் உள்ளே அவளின் அழைப்பு எதிரொலிக்க, ஜடமாகிப் போய் நின்றேன்.

"அங்கிள், என்ன பகல் கனவா?"

பூவாய்ச் சிரித்தான்.

"குடும்பச் சூழ்நிலை அப்படி."

பதில் சொல்வதற்குள் சருகாய்ப் போனேன்.

"மேல்சாவனிஸ்டு நீங்க."


டுமீல்!

குண்டு பாய்ந்தது நெஞ்சில்.

"சரியாய்ச் சொன்னேம்மா. இப்ப வயசாச்சு இவருக்கு. நாலு வருஷமோ, அஞ்சு வருஷமோதான் இருக்கு ரிடையர்டு ஆக. நாற்பத்தைஞ்சு வயசு வரை இவர் போட்ட ஆட்டமிருக்கே, அம்மம்மா!"

சீதா சமயம் பார்த்து வாரினாள்.

"நீங்க ஒரு மேல் சாவனிஸ்ட்."



முகத்தில் கோபம் பொங்க, கிட்டத்தட்ட இருபது வருடம் முன்பு வித்யா சொன்னது, மன ஆழத்திலிருந்து, நினைவின் மேல்தட்டுக்கு வந்தது.

"நீ இங்கிலீஷில் திட்டினாலும் சரி, தமிழில் திட்டினாலும் சரி, நீ வேலைக்குப் போறது எனக்குப் பிடிக்கலே."

அமர்த்தலாய்ச் சொன்னேன்.

"ஏன் திடீர்னு?"

"காரணம் சொன்னாத்தான் விடுவியா? எனக்குப் பிடிக்கலே."

"என்ன பிடிக்கலே?"

"நீ இப்படி செய்யறது?"

வித்யா புரியாமல் பார்த்தாள், என்னை.

"வினா விடைப் போட்டி மாதிரி என்ன பேச்சு இது?"

"உன் ஆபீஸ் எப்ப முடியுது?"

"அஞ்சு மணிக்கு."

"ஆறு, ஆறரை மணி வரை உனக்கு என்ன வேலை அங்கே?"

வித்யா வெறித்தாள்.

"சொல்லு."

"நான் இப்ப, எங்க ஜி.எம்.முக்கு பர்சனல் செகரெட்டரி."

"நீ செகரெட்டரியாயிருந்தால் எனக்குப் பிரச்னையில்லை. அவருக்கு மிகவும் 'பர்சனலாகவும்' இருக்கறதாய்க் கேள்வி. அதான் வேலையை விடச் சொல்றேன்."

அதிர்ந்து போய் என்னைப் பார்த்தாள்.

"ச்சீ!"

அவள் முகம் அருவருப்பாய் சும்பியதைக் கண்டு எனக்குள் ஆத்திரம்.

"இதோ பாரு, நீ, திருமதி சரவணனாய் மட்டும் இரு போதும். பர்சனல் செகரெட்டரியெல்லாம் வேண்டாம் இனி."

நெஞ்சின் குறுக்கே கைகட்டியபடி என்னை உறுத்துப் பார்த்தாள்.

"காற்றோட கரைஞ்சு போயிடற கற்பூரம் போல, கணவனோட, மனைவி கரைஞ்சு, 'ஐடென்டிடி' எதுவும் தனியாய் இல்லாமப் போயிடணும்னு சொல்றீங்களா?"

"நான் கதைகள் அதிகம் படிக்கறதில்லே."

என் குத்தல் பேச்சு அவளைச் சீண்டி விட்டது.

"நீங்க ஒரு மேல்சாவனிஸ்ட்."

"தாங்க் யூ."

"நான் திருமதி வித்யாவாய் இருக்கத்தான் ஆசைப்படறேன். இந்த வேலை, என் இலட்சியக் கனவு. சிறு வயது முதலே உள்ளத்தில் ஊட்டப்பட்ட தீ."

"தண்ணி ஊத்தி அணைச்சுடு."

"முடியாது"

"நான் வேணுமா, வேலை வேணுமா, முடிவு பண்ணிக்க."

"எப்ப என் மேலே சந்தேகப்பட்டு வேலையை விடச் சொல்றீங்களோ, அப்பவே முடிவு பண்ணிட்டேன்."

"என்னன்னு?"

"வேலையை விடறது இல்லைன்னு."

இப்போது நான் திகைத்தேன். என் பிரம்மாஸ்திரம் பயனற்றுப் போன கோபம் தலைக்கேறியது.

"நீ இப்ப மூணு மாசம்."

"தெரியும்."

"ஊராருக்கு என்ன பதில் சொல்லுவே?"

நக்கலாய்க் கேட்டேன்.

"ஊராரை விடுங்க. என் குழந்தையிடமே நீங்கதான் அப்பான்னு சொல்லாம வளர்ப்பேன். உங்க நிழல் கூட எங்க மேலே படாம வாழ்வேன்."

"மங்கம்மா சபதமா போடறே? போடி வெளியே."

வெளியேறி விட்டாள். அவள் அப்பாதான் ஒருமுறை வந்தார். நாயை விட்டு விரட்டாத குறை. என்றாலும் டைவர்ஸ் சுமுகமாய் முடிந்தது.

"வித்யாவுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு. பெயர் சூர்யாவாம். டெல்லிக்கு மாற்றல் கிடைச்சிருக்கு."

வித்யாவைப் பற்றி கடைசியாய்க் கிடைத்த தகவல் அது மட்டுமே.

சீதாவும், சூர்யாவும் பேசுவதிலிருந்து புரிந்து விட்டது.

என் மகள், அன்பு மகள் சூர்யா!

கண்களில் நீர் கோத்துக் கொள்ள துண்டால் துடைத்துக் கொண்டேன்.

"எதுக்கு கண்ட சாப்பாடு? நான் பூரியும் புளிசாதமும், தயிர்சாதமும் கொண்டு வந்திருக்கேன். சேர்ந்து சாப்பிடுவோம்."

சீதாவின் உபசரிப்பில் கட்டுண்டாள்.

"என்ன, அங்கிள் நான் சாப்பிடறதையே பார்க்கறாரு. வேணுமா?"

எச்சில் கையுடன் சாதத்தை நீட்டினாள்.



செப்பு மொழிகள்...

ஆட்சியில் இருந்த போது தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்த தவறுகளுக்காக ஊர் ஊராகப் போய் மன்னிப்புக் கேட்போம். அப்போதுதான் மக்கள் ஆதரவு நமக்குக் கிடைக்கும்.

— நெடுஞ்செழியன்

அருள்வாக்கு



வாழ்க்கைத் தொல்லைகளிடையே கொஞ்சம் உல்லாசமாகப் பொழுது போக்குவது ஒரு தப்பா என்று கேட்பீர்கள். உங்களுக்குச் சொல்கிறேன். பரோபகாரமாகச் சேவை செய்தால் அதுவே பெரிய உல்லாசம் என்று தெரியும். அதுவே விளையாட்டு, அதுவே இன்பம்.

கிருஷ்ண பரமாத்மா இப்படித்தான் வெளியிலே விளையாடுவதாகத் தெரிந்தாலும், உள்ளே அத்தனை பரோபகார சேவைதான் செய்தான். எத்தனை பேருடைய, எத்தனை எத்தனை கஷ்டங்களை விளையாட்டாகவே போக்கடித்தான்? குன்றைத் தூக்கிப் பிடித்தது விளையாட்டு மாதிரி இருக்கும். ஆனால் கோபர்களைக் காப்பதற்கே அவ்வளவு பெரிய மலையை பாலகிருஷ்ணன் தூக்கினான். சின்னக் குழந்தை, விஷம் கக்கும் காளிங்கனின் படத்திலே நர்த்தனம் செய்தது வெளியிலே பார்த்தால் விளையாட்டு; உண்மையில் அதுவும் ஜனங்களைக் காத்து அவர்களுக்கு நீர் நிலையை மீட்டுத் தருவதற்காகச் செய்த சேவைதான். இப்படித்தான் எத்தனையோ விளையாட்டுக்கள் செய்தான். அத்தனையும் சேவை. எவனைப் போல் விளையாடினவன் இல்லையோ அவனைப்போல் சேவை செய்தவனும் இல்லை என்று கிருஷ்ண பரமாத்மாவின் உதாரணத்தில் பார்க்கிறோம். லௌகிக சேவை மட்டும் இல்லை. ஞான சேவையும் நிறையச் செய்தான். அர்ஜுனன், உத்தவர் போன்றவர்களுக்கு மகா உபதேசங்கள் செய்தான். சேவை, ஞானம், விளையாட்டு எல்லாம் அவனிடம் ஒன்றாக இருந்தன. துளிகூடப் பற்றுதல் இன்றியே இத்தனையும் செய்தான். சிரித்துக் கொண்டே சாந்தமாக இவ்வளவையும் செய்தான். அதனாலேயே அநாயாசமாகச் செய்ய முடிந்தது. நம்மிலும் சேவை செய்கிறவர்களுக்கெல்லாம் இந்தச் சிரிப்பும் சாந்தமும் எப்போதும் இருக்க வேண்டும் - தைரியம் ஊக்கம் இவற்றோடு.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

வாங்கிக் கொள்ள என் கை நீண்டது.

"ஐயே எச்சில்; பாத்திரம் நிறைய சாப்பாடு இருக்கு. பயப்படாதீங்க, உங்களுக்கும் இருக்கு."

சீதா என்னைப் புதிராய் பார்த்தாள்.

"என்னாச்சு? மூடு அவுட்டாய் வர்றீங்க? மைக்ரேன் தலைவலியா?"

மறுப்பாய் தலையசைத்தேன்.

"என்ன ரகசியம்? அங்கிள், நீங்க ஏன் 'டை' அடிச்சுக்கக் கூடாது தலைக்கு? வெள்ளை, வெளேர்னு தும்பைப் பூவாய் முடி. வழுக்கையே விழலியே."

அவள் பேசினாள், சிரித்தாள், கேலி செய்தாள், கொஞ்சினாள், கெஞ்சினாள்!

"நான் ரிசர்வ்ட் டைப்! ஆனால், என்னவோ தெரியலே, அங்கிளைப் பார்த்ததும் ஏதோ ஒரு உரிமை, மனசுல புது நபர்ங்கற எண்ணமே வரலே. ஆனால் அவருக்குத்தான் என்னைப் பிடிக்கலே போலிருக்கு. பேசவே மாட்டேங்கறாரு."

கொஞ்சலாய் அவள் சிணுங்க, அப்படியே தாவி அணைத்து, தலையைக் கோதி விடத் துடித்தது மனசு.

"உன்னை யாருக்காவது பிடிக்காமப் போகுமா சூர்யா. நீ என் பொண்ணு மாதிரி."

நெகிழ்ந்து போய்ச் சொன்னேன்.

"ஐயையே, அங்கிள் 'மெல்ட்'டாயிட்டாரு."

கைதட்டிச் சிரித்தாள்.

"அவருக்குப் பெண் குழந்தை வேணும்னு ஒரே ஆசை. ஆனால் எங்களுக்கு ஒரே ஒரு பையன்தான்."

"என்னை வேணும்னா தத்தெடுத்துக்குங்க. ஆனால் இப்படி புளிசாதம் கொடுத்து பய முறுத்தக் கூடாது இனி."

"வாழு."

சீதா, அவள் காதைத் திருக, நான் வாய் விட்டுச் சிரித்தேன். சந்தோஷத்தில் மனசு ததும்பியது.

பயணித்ததே தெரியவில்லை. இதோ டெல்லி வந்து விட்டது.

"பை அங்கிள்! ஸீ யூ ஆன்ட்டி."

சொல்லி விடலாமா, நான்தான் உன் தகப்பனென்று? எந்த முகத்தை வைத்துக் கொண்டு உண்மையை உடைப்பது?

வழிநெடுக குழம்பித் தவித்த மனம், இதோ இப்போதும் தயங்கிப் பிணைந்து நின்றது.

"ஹாய் சூர்யா!"

யாரோ ஒரு பெண் ஓடி வந்தாள்.

"போலாமா? லக்கேஜ் சூட்கேஸ் மட்டும் தான். வரேன்."

எங்களிடம் விடைபெற்று, நடந்தாள்.

"யாரு சூர்யா அது? மிகவும் ஒட்டுதலாய்ச் சொல்லிக்கிட்டு வர்றே?"

"ஜஸ்ட் ரயில் சிநேகம்! பட், நல்லவங்க."

சூர்யாவின் பதில் காதில் விழ, மனசு நொறுங்கும் சப்தம் தாங்க முடியாமல் அப்படியே கீழே அமர்ந்து விட்டேன்.

குறையொன்றுமில்லை

அழிவு என்றால் எது...? என்ன...? ஒரு வஸ்துவாய் இருப்பது வேறொரு வஸ்துவாய் மாறி நிற்பது தான் அழிவே தவிர, இல்லாமலே போய்விடுவது அல்ல...

மண்ணினுடைய அழிது எது...?

அது பானையாக பரிணமிக்கிறதே... அப்போது மண் இல்லாமல் போகிறது. மண் உருண்டையை அழித்து பானையாக்கினால், மண் உருண்டை 'அழிகிறது'.

பானையை எடுத்து, தடியால் ஓர் அடி அடிக்கிறோம். அது ஓட்டாஞ்சில்லியாகிக் கீழே விழுகிறது. இப்போது பானையினுடைய அழிவு எது என்று கேட்டால், ஓட்டாஞ்சில்லி!

அந்த ஓட்டாஞ்சில்லியை இன்னும் அடிக்கிறோம். அது அணுவாகி, பரம அணுவாகிப் போகிறதேயொழிய அடியோடு அந்த வஸ்துவே இல்லாமல் போகாது.

அதே மாதிரிதான் ஆத்மாவுக்கும் அழிவு கிடையாது. அழிவில்லாத ஆத்மாவையும் தன்னுள்ளே அடக்கிக் காக்கிறான் பரமாத்மா.

ஆசையினாலே பிரளய காலத்தில் மிக ஜாக்கிரதையாகச் செயல்படுகிறான். அந்தக் காட்சியை மார்க்கண்டேய மஹரிஷி பார்த்து ஆனந்தப்படுகிறார். உள்ளுக்குள்ளே அவ்வளவையும் அடக்கிக் காத்து, மறுபடியும் சிருஷ்டி கிரமத்தில் வெளியே விடுகிறான் பரமாத்மா.

இதை சிலந்திப் பூச்சி உவமையைக் கொண்டு அழகாக எடுத்துச் சொல்கிறது சாந்தோக்ய உபநிஷத்.

சிலந்தியிருக்கிறதே, கிடுகிடுவென்று மேலே வரும், கீழே இறங்கும். வலை பின்னும். நூல் போல திரவத்தை வெளியே விடும்; மறுபடியும் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

எதற்காக வெளியிலே விடுகிறது? எதற்காக நூலை மறுபடியும் உள்ளே இழுத்துக் கொண்டது? பசையுள்ள அந்த நூலில் நூற்றுக் கணக்கான கிருமிகள் ஒட்டிக் கொண்டிருக்கும்; அது மொத்தத்தையும் உள்ளே இழுத்துக் கொள்ளத்தான் அப்படிச் செய்கிறது சிலந்தி.

அதே போல்தான் பரமாத்மா. தன்னுள் இருப்பதை வெளியே விடுகிறான். பிறகு தன்னுள்ளேயே இழுத்துக் கொள்கிறான். எல்லாவற்றையும் சாப்பிடுகிறான் – சராசரங்கள் அனைத்தையும் விழுங்கிக் காக்கிறான் பரமாத்மா. பிறகு அத்தனையும் வெளியிலே விட்டு, அந்தர்யாமியாய் தானே கூட நின்று ரக்ஷிக்கிறான் பரமாத்மா.

அவனே வரிக்கப்பட வேண்டியவன்.

அவன்தான் வரத்தைக் கொடுக்கக் கூடியவன்.

அவனே சிருஷ்டிக்கிறான்; அவனே சிருஷ்டிக்கப்படுகிறான்! அவனே உண்கிறான், அவனே விழுங்கப் படுகிறான்!

'பாருண்டான் பாருமிழ்ந்தான் பாரிடந்தான் பாரளந்தான்...' என்றார் நம்மாழ்வார். இந்தப் பாரை அவன் எதுதான் பண்ணவில்லை...!?

பாரை எடுத்து உண்டான்; மறுபடியும் அதை உமிழ்ந்தான். நடந்தான், அளந்தான்... இந்த உலகம் 'தன்னுடையது தன்னுடையது' என்று அவன் இவ்வளவு காரியம் பண்ணியிருக்கிறபோது, அது நம்முடையது நம்முடையது என்று சொல்லலாமா...' நாமும் நம்மைச் சேர்ந்ததும் கூட அவனுடையவை தானே!

ஹே வரதா! ப்ரபோ! என்னைச் சேர்ந்தது, என்னுடையது, யானும் எல்லாம் உன்னைச் சேர்ந்தது. நீயே எடுத்துக் கொள் என்று பிரார்த்தனை பண்ணினால், பரமாத்மா அனுக்கிரஹம் பண்ணுகிறான்.

அப்படி, மந்திரத்துக்குள்ளே இருந்து நம்மை ரக்ஷிப்பவன் மஹாவிஷ்ணு என்று விஷ்ணு சப்தத்துக்கு ஒரு விதத்தில் விசேஷமாக பொருள் உரைக்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு வியாக்யானம் விஷ்ணு சப்தத்துக்கு :

வியாப்யன் விஷ்ணு. அதாவது, எங்கும் பரவியிருப்பதால் அவனுக்கு விஷ்ணு என்று பெயர். அதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது...?

ப்ரும்ம சூத்திரத்தில் பரப்ரும்மத்துக்கு லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் எப்படிப்பட்டவன்? உயர்ந்ததாய் இருக்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கும்படியான சர்வேச்வரனுடைய தன்மை என்னவென்றால்... 'தூஷண த்ரய ராஹித்யம் ப்ரும்மண : பரம லக்ஷணம்'

தூஷண த்ரய – என்றால் மூன்று விதமான தோஷமில்லாமல் என்று பொருள். மூன்று வித தோஷமில்லாமல் அவன் விளங்குகிறான். எங்கும் வியாபித்திருக்கிறான் என்றால் அந்த மூன்று விதமான தோஷங்களுக்கு உட்படாமல் அவன் இருக்கிறான் என்று அர்த்தம்.

மூன்று தோஷங்கள் எவை...?


சாஸ்திர ரீதியாக, தர்க்க சாஸ்திரத்தில் அவை விளக்கப்படுகின்றன.

தர்க்க சாஸ்திரத்தில் மட்டும் ஒருத்தருக்கு தீக்ஷண்யமான புத்தி இருந்துவிட்டால் அவர்களால் சாதிக்க முடியாததே கிடையாது. இல்லை என்பதை 'இருக்கு' என்றும் இருக்கிறதை இல்லவே இல்லை என்றும் நிரூபணம் பண்ணலாம்!

சரி, மூன்று வித தோஷங்களுக்கு வருவோம். அவை என்னென்ன...?

அவ்யாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் : என்பவை அந்த மூன்று தோஷங்கள். இந்த மூன்று தோஷங்களும் இல்லாமல் எவன் ஒருவன் பரவி இருக்கிறானோ அவன்தான் விஷ்ணு.

முதலில் விஷ்ணு என்பதற்குப் பொருளை வேத ரீதியாகத் தெரிந்து கொண்டோம். இப்போது சாஸ்திர ரீதியாகத் தெரிந்து கொள்வோம். உயர்ந்த புத்திக் கூர்மையுடன் ஆராய்ந்து பார்த்தால்,



மேற்சொன்ன மூன்று தோஷங்களும் அவனிடம் கிடையாது என்பது தெரியவரும்.

வியாப்தி என்றால் பரவுதல் என்று அர்த்தம். அவ்யாப்தி என்றால், பரவுதல் இல்லாமை.

இந்த உபந்யாசத்தில் நான் பேசுகிறபோது 'பசுக்களெல்லாம் வெண்மையாய் இருக்கும்' என்று சொல்கிறேன்... அதைக் கேட்டுவிட்டுத் தெருக்கோடிக்குப் போனால், எதிரே கறுப்பாக ஒரு பசு வருகிறது! இன்னும் கொஞ்சம் தூரம் போனால் கறுப்பு கொஞ்சமும் வெளுப்பு கொஞ்சமுமாக இன்னொரு பசு; மேலும் சற்று தூரம் போனால், செவல் நிறத்தில் ஒரு பசு!

உபந்யாசம் கேட்டவர், மறுநாள் வருகிறார். "உமது உபந்யாசத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் எனக்கு ஒரு பதில் சொல்ல வேண்டும். நேற்று எல்லா பசுவும் வெள்ளையாய் இருக்கும் என்றீர். வீதி திரும்புவதற்குள் கறுப்பு பசு வருகிறது; கறுப்பு-வெளுப்பு, செவலை எல்லாம் வருகிறதே..." என்கிறார்!

அப்படியானால் அடியேன் சொன்னது தவறாகிப் போகிறது அல்லவா... வெண்மை நிறம் எல்லா பசுக்களுக்கும் சொந்தம் என நான் சொன்னதை ஒருத்தர் ஆட்சேபிக்கிறார். அவ்யாப்தி தோஷம் வந்து விட்டது! வெண்மை நிறமானது பசுக்கள் ஜாதியிலே பரவியில்லை. ஏதோ ஒருசில பசுக்கள் வெளுப்பாக இருக்கும் – அவ்வளவுதான்! ஆகையினாலே நான் சொன்னதில் அவ்யாப்தி தோஷம் வந்துவிட்டது!

அடுத்து சொல்கிறேன் : "பசுக்களுக்கெல்லாம் கொம்பு உண்டு... கொம்பை உடையவை பசுக்கள்."

தெருவிலே போனால், எருமைகள் கூட்டம் வருகிறது! எருமைகளுக்கும் கொம்பு இருக்கிறதே. பசுக்களைக் காட்டிலும் வேறு ஜாதியான எருமைக்கும் கொம்பு இருப்பதனாலே வேறொரு இனத்திலும் அது பரீவியிருப்பதனாலேயே அதிவியாப்தி என்கிற தோஷம் ஏற்பட்டுப் போயிற்று!

இன்னொரு தோஷம் : அசம்பவம். அப்படியென்றால், அடியோடு இல்லாதது. ஒருத்தர் சொல்கிறார். அதை இன்னொருத்தர் கேட்டுக்கொண்டிருக்கிறார்; என்ன சொல்கிறார் என்றால், "இதோ போகிறான் பாருங்கள்... அவன் யாரென்றால், மலடியின் பிள்ளை... அவன் எங்கே ஸ்நானம் செய்தான் தெரியுமா...? கானல் நீர் இருக்கிறதே அதிலே ஸ்நானம் பண்ணினான். பண்ணிவிட்டு இதோ போகிறான் பாருங்கள்..." என்கிறார்.

கேட்டவர் "அப்படியா?" என்கிறார். மலடிக்குப் பிள்ளை உண்டா? கானல் நீரில் ஸ்நானம் பண்ண முடியுமா...? தொடர்ந்து சொல்றார் : "அவன் தலையிலே என்ன வைத்

திருக்கிறான் தெரியுமா...? ஆகாசத் தாமரையை வைத்துக் கொண்டிருக்கிறான். மலடியின் பிள்ளை, கானல் நீரில் நீராடிவிட்டு, ஆகாசத் தாமரையைப் பறித்துத் தலையில் வைத்துக் கொண்டு அதோ போகிறான். அவன் கையில் என்ன வைத்திருக்கிறான் தெரியுமா...? முயல்கொம்பினால் ஆன வில்லை வைத்திருக்கிறான்!"

கேட்டுக் கொண்டிருந்தவரும் ஆனந்தமாக "ஆஹா!" என்று ஆச்சர்யப் பட்டுவிட்டுப் போய்விட்டார்!



செப்பு மொழிகள்....

காவிரி ஆணையம் அமைப்பது குறித்த மத்திய அரசின் வரைவுத் திட்டத்தைக் கிழித்துப் போட வேண்டும். இந்த வரைவுத் திட்டம் ஒருதலைப்பட்சமானது. அதை இன்னும் நான் படிக்கவில்லை. ஆனாலும் அதை தமிழக அதிகாரிகள் தயாரித்திருப்பார்களோ என்று எண்ணும் அளவுக்கு அது உள்ளதாகத் தெரிகிறது!

— ஹெக்டே.

இப்போது சொல்லப்பட்ட விஷயத்தில் ஏதாவதொரு விஷயமாவது நிஜத்தில் உண்டா? மலடிக்குப் பிள்ளை ஏது? ஆகாசத் தாமரை உண்டா? கானல் நீரிலே நீராட முடியுமா...? முயலுக்குக் கொம்புதான் உண்டா?...!

இது மொத்தமும் அசம்பவம்! அசம்பவமான விஷயமே இங்கே முழுக்க முழுக்க பேசப்பட்டது. கேட்கிறவர் வேணுமானால் அது பெரிய விஷயம் என்று எண்ணிப் போகலாம். ஆனால் அசம்பவம்தானே!

ஆக, இல்லாத விஷயத்தைச் சொல்வது அசம்பவம்.

இப்படி அவ்யாப்தி, அதிவியாப்தி, அசம்பவம் என்று மூன்று வித தோஷங்களைப் பார்க்கிறோம். இந்த தர்க்க சாஸ்திரப்படி. பகவானை, விஷ்ணு என்று சொல்லப்படக்கூடிய பரமாத்மாவை ஆராய்ந்தோமானால், அவ்யாப்தி என்கிற தோஷம் அவனுக்கு உண்டா?


அவன் எல்லா சராசரங்களுக்குள்ளும் நிறைந்திருப்பதனாலே அவனுக்கு அந்த தோஷம் சம்பவிக்கிற வாய்ப்பே கிடையாது. விடிவாக எங்கும் பரவியிருப்பதனாலே, பசுவுக்குள்ளும், தாவரம், மலை, மடு... நமக்குள்ளும் எங்கும் இருப்பதனாலே அவ்யாப்தி அவனுக்குச் சம்பவிக்க இடமேயில்லை.

அதே மாதிரி, அதிவ்யாப்தி என்கிற தோஷம் சம்பவிக்குமா? என்றால் அதற்கும் இடமில்லை. அதிக்ரமித்து அவன் இன்னொரு இடத்திலும் இருப்பதாகச் சொல்ல முடியாது. எல்லாவற்றுள்ளும் அவன் இருப்பதால் அதிவ்யாப்தி என்கிற பேச்சுக்கே இடமில்லை. அவனிடத்தில் இல்லாததை நாம் கற்பிக்க முடியுமா? இருப்பதைத்தான் சொல்ல முடியுமா?

இல்லாமை என்பதே அவனிடத்தில் இல்லை என்று ஆனதனாலே, அப்படிப்பட்ட எம்பெருமானிடத்தில் அசம்பவம் என்கிற தோஷமும் சம்பவிக்க இடமேயில்லை.

இந்த தூஷண த்ரயங்களுள் ஒரு தோஷமும் இல்லாமல், எங்கும் பரவியிருப்பதனால்தான் அவனுக்கு விஷ்ணு என்று பெயர்.

(தொடரும்)



"சொன்னதைக் கேளுங்க! உங்களுக்குப் பிடிக்கும்ங்கறதுக்காக ஆஞ்சநேயருக்கு மசால் வடை மாலையெல்லாம் சார்த்த முடியாது!"

"நல்லவேளை! உங்க சைக்கிளைப் பார்த்ததும் நினைவுக்கு வந்துடுச்சு!"

"எது?"

"என் மனைவி சாயந்திரம் வர்றப்ப பேரீச்சம் பழம் வாங்கிட்டு வரச் சொன்னது!"

— மேல்மங்கலம் பத்ரா



இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கர்கள் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தியதுதான் தோல் புற்று நோய்க்கு முக்கிய காரணமாம். புகழ்பெற்ற கடற்கரைகளுக்குச் சென்று, வெகுநேரம் சூரியக் குளியல் நடத்தியதன் விளைவு இது. பொதுவாக சூரிய வெப்பம் தோலில் உண்டாக்கும் விளைவுகள் பல வருடங்களுக்குப் பிறகுதான் தெரிய வரும். அந்த விதத்தில் அன்று கடற்கரையே கதி என்று கிடந்த இளைஞர்கள், இன்று நடுவயதைத் தாண்டிய நிலையில் 'ஐயோ, எனக்குப் புற்று நோயா?' என்று அலற நேர்ந்திருக்கிறது.

சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரிடையாக நம்மீது படாமல், உலகைச் சுற்றியுள்ள ஓசோன் படலம் பாதுகாக்கிறது. சுற்றுச்சூழல் மாசுபட்டதன் காரணமாக இந்த ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்ததால், தோல் புற்றுநோய் உருவாகும் வாய்ப்பு அதிகமாகி இருக்கிறது. சூரியக் குளியல் இந்த வாய்ப்பை மேலும் பல மடங்கு அதிகரித்து விட்டது.

தோலின் மேற்பகுதியில் உள்ள செல்களில் இருக்கும் டிஎன்.ஏ. என்ற உயிரணு சூரியக் கதிர்களால் மாற்றம் பெறுகிறது. இதன் காரணமாக அந்த செல்கள் வகை தொகையில்லாமல் பெருகுகின்றன; கட்டிகளாகின்றன; அந்தக் கட்டிகள் புற்று நோயில் கொண்டு போய் விடுகின்றன.

அமெரிக்கப் புற்றுநோய்க் கழகம், சில வருடங்களாக தோல் புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவது பற்றி ஆச்சர்யம் அடைந்திருக்கிறது. ஆண்டுக்கு ஆறு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிகிச்சை அளித்தால் கூட இவர்களில் மூவாயிரம் பேராவது இறந்து விடுவார்கள் என்ற நிலை... ஏன் இப்படி?



அடிக்கடி வெயிலில் காய்ந்து, சூரியக் குளியல் நடத்துபவர்களுக்குத்தான் கொஞ்சம் கொஞ்சமாக பாதிப்பு தலை காட்டத் தொடங்குகிறது. சின்ன பொட்டுக்களாகவோ, லேசான செதில்கள் போலவோ தோலில் அடையாளங்கள் தெரிகின்றன. இந்த இடங்களை 'கெரடோ ஸெஸ்' என்கிறார்கள். பொதுவாக நடுவயதுக்காரர்களும், முதியவர்களும்தான் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். உடையால் மறைக்கப்படாத பாகங்களில்தான் தோல் புற்றுநோய் பெரும்பாலும் உண்டாகிறது.

சூரியனின் புறஊதாக் கதிர்களை ஏ.பி என்று இரண்டு வகைகளாகப் பிரித்திருக்



வெயிலால் வரும் புற்றுநோய்!

கிறார்கள். இவற்றில் 'ஏ' வகைக் கதிர்கள் நீளமான அலைவரிசை கொண்டவை. இவை தோல் சுருக்கம், கறுத்துப் போதல், காயம் ஆகியவற்றை ஏற்படச் செய்கின்றன. தோலினுள் வெகு ஆழமாக ஊடுருவிச் செல்லும் இந்தக் கதிர்கள் தோல் புற்றுநோய்க்கும் காரணமாக அமையலாம்.

சூரியக் கதிர்களில் மிக அதிகம் காணப்படுவது 'பி' வகைதான். குறைவான அலைவரிசை கொண்ட இது, தோல் சுருக்கம், இளமையில் முதுமை இவற்றிற்குக் காரணமாகிறது. Malignant Melanoma என்ற தீவிரமான தோல் புற்றுநோய்க்கு இந்தக் கதிர்கள்தான் காரணமாகின்றன.

அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய புற்றுநோய் மையங்கள் சூரியக் குளியலால் தோல் புற்றுநோய் உண்டாகும் வாய்ப்பைப் பற்றி பலவிதங்களில் விளம்பரம் செய்கின்றன. கடற்கரையில் கிடந்தே ஆகவேண்டுமென்றால் தகுந்த கிரீமையாவது உடலில் தடவிக் கொள்ளுங்கள் என்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்த வகையான தோல் புற்றுநோய் வராமல் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

நெடுநேரம் வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். என்றாலும் "இந்தியர்கள் இதுபற்றி கவலைப்படத் தேவையில்லை. நம்மில் பெரும்பாலானவர்கள் மாநிறம் அல்லது கறுத்த தோல் கொண்டவர்கள். அதாவது நமக்கெல்லாம் தோலில் அதிக பிக்மென்டுகள் இருக்கின்றன என்று பொருள். இவை சூரியக் கதிர்கள் நம் உடலில் தீமை விளைவிப்பதை தடுக்கும்" என்கிறார்கள் இங்குள்ள மருத்துவர்கள்.

— அருண் சரண்யா

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும், கமலம் துணியோடு குழந்தையை அள்ளிக் கொண்டாள். கால்கள் அதிர்ந்து நடுங்கின. நிற்க முடியாமல் தரையில் உட்கார்ந்தாள். குழந்தையைத் தன் முகத்தோடு தேய்த்து முகர்ந்தாள். அவளுடைய நாசித்துவாரங்கள் வழியே குழந்தையை முழுவதும் உள்ளே இழுத்துக் கொள்ளுவது போல அப்படி ஓர் ஆழமான மூச்சிழுப்பு.

"ஏய்... அழக் கூடாது" என்று எச்சரித்தான், சுப்பிரமணி. இடுப்பு வேட்டியை சரி செய்தான். மசி தெளித்தாற் போல நூறு பொத்தல்களுடன் இருந்த பனியனை மறைக்க ஆணியில் தொங்கிய சட்டையை உருவினான்.

கமலம் கண்ணீரை அடக்கியதில் கன்னங்கள் சிவந்து போயின. குழந்தையின் மீது முத்தங்களாகப் பொழிந்தாள். அது பஞ்சுக் கைகளை முறுக்கி முகத்தில் தேய்த்துக் கொண்டது. பால் வாசம் கமகமத்தது. இப்போதுதான் குடித்து முடித்து உப்பிய வயிறுடன் இருந்த போதும், இன்னும் ஒரே ஒரு முறை என்று கமலம் ரவிக்கையை மேலேற்றினாள். குழந்தை சீந்தவில்லை. துணித்திரைக்கு மறுபக்கம் இருந்த சமையல் பகுதிக்குக் குழந்தையோடு போனாள்.

சுப்பிரமணி கதவைத் திறந்தான். "வாங்க வாங்க" என்று சற்று உரக்கவே வரவேற்றான். இரண்டு முன் போர்ஷன்காரர்களும் சங்கோஜமில்லாமல் இங்கே வேடிக்கை பார்த்தனர்.

கமலத்தின் சகோதரி சாரதாவும், அவள் கணவன் சேதுராமனும் நுழைந்தார்கள். சாரதாவின் இரண்டு கைகளிலும் பாலிதீன் பைகள்.

மொத்தமே ஒரு பெரிய அறை. நடுவில் மர பீரோ. அதன் உச்சி நுனியிலிருந்து சுவர் வரை ஆணியடித்து தொங்கும் பழைய திரை.

"வாங்க" என்று கமலம் குரல் கொடுத்தாள். திரைக்குப் பின்னால் இருந்து வெளிப்பட்டாள். மர பீரோவிற்கு அருகிலேயே அமர்ந்தாள்.



குழலினிது..

அவள் கையில் ஏந்தியிருந்த புஷ்பக் கொத்தை சாரதா பேராவலுடன் பார்த்தாள். பசித்த புலி, மானைப் பார்க்கும் பார்வையாக கமலத்திற்குத் தோன்றியது.

சுப்பிரமணி சுவர் மூலையிலிருந்து பாய் எடுத்து உதறிப் பிரித்தான். நெருக்கமான, பின்னல் தளர்ந்து பாய் வெலவெலத்திருந்தது. உதறிய வேகத்தில் ஒன்றிரண்டு குச்சிகள் கழிந்தன.

"பசங்க எங்கே?" என்றார் சேதுராமன். பாயில் அமர்ந்தார். தேமல் பிடித்த சுவரில் ஒற்றை விரலை தேய்த்துப் பார்த்தார். சுண்ணாம்பு ஒட்டவில்லை என்று தைரியமானவுடன் ஸஃபாரி சட்டையுடன் முதுகு சாய்த்தார்.

"பெரியவன் கிட்ட புஸ்தகம் இல்ல. படிக்கறதுக்காக கிளாஸ்மேட் வீட்டுக்குப் போயிருக்கான். அடுத்தவ



அதோ மூலைல உக்காந்து பல்லாங்குழி ஆடிட்டிருக்காளே. ஏய் வாலு. பெரியம்மா வந்திருக்காங்க பாரு..?"

அது முகத்தைத் தூக்கி ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சலனமேயில்லாமல் ஒரு குழியிலிருந்து சோழி களை அள்ளி மற்ற குழிகளுக்கு விநியோகித்தது.

சுப்பிரமணி மேஜை விசிறியை எடுத்து, தரையில் அவர்கள் திசை நோக்கி அமைத்து ஸ்விட்சைத் தட்டினான்.

கர்ர கர்ர கடகடகட என்று மின்விசிறி பெரும் ஆட்சேபத்துடன் இயங்கியது. பலவீனமாக காற்றை வீசி எறிந்தது.

சாரதா வாங்கி வந்த இனிப்புகளையும், பழங்களையும் சமையல் பகுதியில் கொண்டு வைத்தாள். பல்லாங்குழி ஆடியவளை அன்பாகத் தலையில் வருடி விட்டு கமலத்திற்கு எதிரில் வந்து அமர்ந்தாள்.

கமலம் ரவிக்கையை இழுத்து மூடிவிட்டு, சிவந்த கண்களுடன் புன்னகைத்தாள். சொர்க்கத்தைப் பறி கொடுக்கும் வேளையில் இருக்கும் வறட்டுப் புன்னகை.

சாரதா மடியைப் பரப்பி அமைத்தாள். கண்களில் கனவு வழிந்தது. கை ஏந்தினாள்.

கமலம் குழந்தையை அவள் மடியில் கிடத்தினாள். துணிச் சுருளுக்கு உள்ளேயிருந்து அதன் சிவந்த சருமம் தெரிந்தது. வெள்ளைத் திட்டுகளாக தோல் உரிந்து சுருண்டிருந்தது. உதடுகளை விலக்கி நாக்கு நுனியால் தொட்டு உள்ளிழுத்து பச்ச் என்று சப்புக் கொட்டியது. கண்களைத் திறக்கவில்லை.

யாழினிது....

சுபா

கமலம் தொண்டையைச் செருமினாள். அடக்கப்பட்ட துக்கம் குரலை நசுக்கியது. "நகம் பெரிசு பெரிசா வளருது. மூஞ்சியெல்லாம் பாரு எப்படி பிறாண்டிக் கிட்டிருக்குன்னு. குளிப்பாட்டினவுடனே ஈரமா இருக்கறப்ப மெதுவா இப்படி நகத்தைப் பிய்ச்சு எடுத்துடு. அஞ்சு மாசம் வரைக்கும் கழுத்துக்குக் கீழே கை கொடுத்துத் தூக்கு."

சுமந்த வயிறு சுருட்டி இழுத்தது. உயிரமுது கொடுத்த நெஞ்சங்கள் கனத்து விம்மின. அழக்கூடாது என்ற பிடிவாதத்தில் தொண்டை பற்றி எரிந்தது.

"பாத்துக்கறேன், கமலம். பன்னெண்டு வருஷமா ஏங்கிப் போனவ.... எவ்வளவு கவனமா இருப்பேன்னு யோசிச்சுப் பாரு. இவரோட அக்கா ஊர்லேர்ந்து ஒரு சின்ன பொண்ணை துணைக்கு அனுப்பியிருக்கா. வீட்டோட இருந்து எல்லா ஒத்தாசையும், பண்ணிக் கொடுக்கும். நீ கவலையே படாதே. என் கண்ணுக்குள்ள வச்சு வளர்ப்பேன்" என்றாள் சாரதா. குழந்தை மீது உட்காரப் பார்த்த ஒரு ஈயை விரட்டி.

கமலம் குழந்தையின் மீதிருந்து தன் விரல்களை மெல்ல நீக்கினாள்.

"பெரியவனுக்கு ஒரு மாதிரி சொல்லிட்டேன். பொண்ணு கிட்டதான் என்ன சொல்லி சமாளிக்கப் போறேன்னு தெரியல."

"கோலா வாங்கிட்டு வரேன்" என்று சுப்பிரமணி துணிப்பையை கயிற்றுக் கொடியி



தண்டனையிலும் ஒரு பயன்!

கொலம்பியா திரைப்பட நிறுவனத்தின் அதிபர் ஒரு மோசடி வழக்கில் சிக்கிக் கொண்டார். அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை என்ன தெரியுமா?

5,000 டாலர்கள் அபராதத்துடன் மூன்று வருட ஜாமீன் விடுதலை. அதற்கு முன்னதாக அவர் போதை மருந்துகளுக்கு எதிராகப் பிரசாரப்படம் ஒன்று எடுத்து இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டும்!

தண்டனைக்கு தண்டனையும் ஆயிற்று; சமுதாயத்துக்கு நல்லது செய்ததாகவும் ஆயிற்று!

— கோவி. ராஜேந்திரன்



நெஞ்சை நெசவு செய்த ஆசை நெசவு!

◆ இருபத்தாறு வாரங்களாக ஆசையை நெசவு செய்து, எண்ணற்ற வாசக இதயங்களின் அன்பை நெசவு செய்து கொண்டு விட்டார் இந்திரா சௌந்தர் ராஜன்.

வேலூர் - 6, வே.ந. கதிர்வேல்

◆ வன்முறை பெருகிவிடும் இன்றைய சமுதாயத்தில், காந்தியடிகளின் அகிம்சையைக் கடைப்பிடிப்பதே சமூக ஒற்றுமைக்குச் சிறந்த வழி என்பதைத் தனது 'ஆசை நெசவி'ன் மூலம் கூறும் கதாசிரியர், சில உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களையும் எளிய நடையில் ஆங்காங்கே நெசவு செய்திருக்கிறார்.

தஞ்சாவூர் - 1, வெ. முருகானந்தம்

◆ சகதியில் புரளும் சமுதாயம், அதனைத் திருத்தும் வழி அகிம்சை என்ற கருத்தினை அடி நாதமாகக் கொண்டு அற்புதமாக வடிவமைக்கப்பட்ட கதை "ஆசை நெசவு". காலைல குளிச்சா மாலைல அழுக்காவது போல்தான் சமூகச் செயல்பாடுகளும். உற்சாகம் குறையாமல் உத்வேகப்படுத்திக் கொண்டே இருந்தால் மட்டுமே சீர்திருத்தம் நிலைப்படும் என்ற கருத்து மிகச் சரியானது.

காட்டூர், எஸ். அருள்மொழி

◆ நெசவு நெய்யும் போது அமையும் பார்டரைப் போன்று வெகு பாந்தமாய்ப் பொருந்தியிருந்தது. 'ஆசை நெசவி'ற்கான அரஸின் ஓவியங்கள்.

நெய்வேலி - 3, க. ஸ்ரீகாந்த்.

◆ பல வண்ணங்கள் போல், பல கதாபாத்திரங்கள் வாசகர்கள் நெஞ்சங்களை 'ஆசை நெசவு' நெய்தார்கள். 'ஐயா உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன். நல்லதுக்குத் துணை செய்யாட்டியும் கெடுதல் பண்ணாம இருய்யா!' என்று நபீஸா இன்ஸ்பெக்டரிடம் கூறும் வார்த்தை என் நெஞ்சைத் தொட்டது. இந்திரா சௌந்தர்ராஜனுக்கு என்னுடைய பாராட்டுக்கள்.

சென்னை - 15, கே.ஆர். ராஜா.

விருந்து உருவ, சேதுராமன் எழுந்து தடுத்தார்.

சுப்பிரமணியை உட்கார்த்தி அவன் ஆபீஸ், தவறிப் போன பிரமோஷன், அரசியல் ரெய்டுகள் பற்றிப் பேசி "கௌம்பலாமா சாரதா?" என்றார்.

சாரதா குழந்தையை நெஞ்சோடு அணைத்து எழுந்தாள்.

"வரேன் கமலம். பசங்களுக்கு ஏதாச்சும் வாங்கிக் கொடு" என்று ஒரு கவரை கமலத்தின் மடியில் வைத்து விட்டு, சரசரவென்று கணவன் பின்னே காரைப் பார்க்க நடந்து விட்டாள்.

ஒண்டுக் குடித்தனக்காரர்களுக்கு விஷயம் தெரியுமாதலால் பரிதாபப் பெருமூச்சுகளை மட்டும் செலவழித்து தத்தம் கூடுகளுக்குள் பின் வாங்கினர்.

காரை அனுப்பி விட்டு சுப்பிரமணி திரும்பியதும் கமலம் அழுகையில் வெடித்தாள்.

"இல்லாம கெடக்காளேன்னு தானேங்க பெத்துத் தூக்கிக் கொடுத்தோம்? வெலைக்கு வாங்கறதா? நெனைச்சு பணம் கொடுத்திருக்கா, பணம்! என் குழந்தையை காசுக்கு விக்கறவளா ஆயிட்டேன், நான்...! ஐயோ!"

சாரதா வைதது விட்டுப் போன கவரை சுப்பிரமணி மீது வீசியடித்தாள். காகிதக்கவர் அந்த ஆவேசம் தாங்காமல் கிழிந்து, நூறு ரூபாய் நோட்டுகள், அறையெங்கும் மீன் விசிறிக் காற்றில் சிறகடித்தன.

பல்லாங்குழியை நகர்த்திவிட்டு, மகளின் சிறுமடியில் விழுந்து கமலம் அரற்ற, சுப்பிரமணி குனிந்து ஒவ்வொரு கரன்ஸி தாளையும் பொறுக்கலானான்.

வங்கியின் பெயர்ப்பலகையை நிமிர்ந்து பார்த்துவிட்டு சுப்பிரமணி உள்ளே நுழைந்தான்.

"பத்தாயிரம் ரூபாயை எடுக்க முடியாத டெபாஸிட்டாப் போடணும் சார்; கொழந்தை மேல. அது வளர்ந்து பெரிசானதும் பணம் அதுகிட்ட சேரணும். நானே நெனைச்சாலும் நடுவுல எடுக்க முடியாதபடி போடுங்க சார்."

"உக்காருங்க" என்று வங்கி மேலாளர் விண்ணப்பத்தாளைப் பிரித்தார். "பேரு?"

"பேரா?" திகைத்தான். உதடுகளைப் பிதுக்கினான். "தெரியல சார். அவங்க வீட்ல இன்னும் வக்கல!"

"குழந்தைக்கு நீங்க என்ன வேணும் சார், கார்டியனா?" என்ற கேள்விக்கு சுப்பிரமணி ஏன் குலுங்கிக் குலுங்கி அழுகிறான் என்று மேலாளருக்குப் புரியவில்லை.



செவ்வாய் இனி நம் பக்கத்து வீடு!

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் இருக்கிறதா - இருந்ததா என்று ஆராய 21 வருடமாக நடந்த முயற்சி, திருவினையாகியிருப்பதைக் கண்டு உலகமே சந்தோஷிக்கிறது. கடந்த டிசம்பர் மாதம் செவ்வாய் நோக்கி ஏவப்பட்ட 'பாத் ஃபைண்டர்' விண்கலம் தனது ஏழு மாத கால பயணத்துக்குப் பின், எதிர்பார்த்தபடி - செவ்வாயில் தரையிறங்கி விட்டது.

இப்போது அது - பூமியிலிருந்து 200 மில்லியன் கிலோ மீட்டருக்கும் மேல் தள்ளியிருக்கும் - செவ்வாயில் !

பாத் ஃபைண்டர் ஓர் விண்கலம்! ஆறு சக்கர 'ஸோ - ஜர்னர்' எனும் ரோபோவோடு சென்றுள்ளது இது. செவ்வாய் சமவெளியில் இறங்கும்போது இதன் வேகம், நொடிக்கு 7 கி.மீ. இந்த அதிவேகப் பாய்ச்சல் தரையிறங்கும் பாத் ஃபைண்டரில் ஆபத்தான குலுக்கல்களை ஏற்படுத்தி விடாமலிருக்க, பாராசூட் பலூன்களும் இணைத்து அனுப்பப்பட்டது. தூசுச் சுழற்சி நிறைந்த, — 23 டிகிரிக்கும் குறைவான வெப்ப நிலை கொண்ட இரவில், சிவப்புப் பாறை வெளியில், 'ஏரீஸ் வேலீஸ்' என்னுமிடத்தில், தரையிறங்கியது.

76-ல் எடுக்கப்பட்ட வைகிங் புகைப்படங்கள் - 'ஏரீஸ் வேலீஸ் பகுதி, பற்பல கோடி வருடங்களுக்கு முன்பு மாபெரும் வெள்ளத்தின் வீச்சில் இருந்த இடம். ஆக, இங்குள்ள பாறைகள் நீருக்கடியிலேயே சுகமாய் இருந்தபடியால், இதில் படிந்துள்ள தூசுகளும் வேதியியல் பொருட்களும் நாசமாகியிருக்கின்றன' - எனும் குறிப்பைத் தந்தன. ஆகவே, இங்கு ஆராய்ந்தால், ஆரம்பகால செவ்வாய்க் கிரக வாழ்க்கை பற்றிய தகவல்கள் சரியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், பாத் ஃபைண்டர் இங்கு அனுப்பப்பட்டுள்ளது. எக்ஸ் - கதிர்கள் மூலம் பாறைகளைத் துளைத்து ஆராயும் Spectrometer எனும் கருவி இணைக்கப்பட்டுள்ள 'ஸோ - ஜர்னர்' அது காணும் பாறைகளின் உள் வரை ஊடுருவி ஆராய்ந்து, தகவல்களை அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செவ்வாயின் சீதோஷ்ணத்தைத் தொடர்ந்து பதிவு செய்ய ஒரு கருவியும், வண்ணப் புகைப் படங்களை எடுத்து அனுப்ப - 24 ஃபில்டர்கள் பொருத்தப்பட்ட, 360 டிகிரி சுழலக்கூடிய காமிரா ஒன்றும் - ரோபோவோடு இருக்கிறது.

படம் பிடித்த பத்தாவது நிமிடம் அப் படங்கள் பூமியிலுள்ள விஞ்ஞானிகளின் கைகளில். 'செவ்வாய்க் கிரகத்தில் உயிரின வாழ்வு சாத்தியம்' என்று சில மாதங்களுக்கு முன்பு வெளியான அதிகாரபூர்வ செய்திகளுக்கு இந்த ஆய்வு மேலும் உதவும் என்று அனைவரும் எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

— கொரட்டூர் ஸ்ரீனிவாஸ்

படீலென்று ஒரு பாட்டில் விழுந்து நொறுங்கிய ஓசை.

கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து ஊருக்குக் கொண்டு போன சூட்கேஸைத் துடைத்துச் சுத்தம் செய்து கொண்டிருந்த நர்மதா திரும்பிப் பார்த்தாள்.

ஓசை சமையல் அறையிலிருந்து வந்தது. அம்மாதான். என்ன விழுந்தது?

''என்னம்மா ஆச்சு?'' உரக்கக் கேட்டாள்.

பதில் இல்லை.

காலையில் இருந்து இது மூன்றாவது. பரணில் இருந்த பாத்திரம் எடுக்கப் போய் எதிலோ இடறி தடதடவென்று எல்லாம் கீழே சரிந்து, கீழே பாத்திரத்தில் வைத்திருந்த பால் கவிழ்ந்து விட்டது.

அப்பாவிடமிருந்து இரவு வாங்கி வைத்த பெருமாள் கோவில் சாவியை இடம் மாற்றி வைத்துவிட்டு கால் மணி நேர அலைச்சல்.

என்ன ஆயிற்று அம்மாவுக்கு?

திடீரென்று கவலை வந்தது. எழுந்து சமையலறைக்குப் போனாள்.

இயல்பாகக் கண் திரும்பி வாசலைப் பார்த்தது. தாத்தா தூரத்தில் – ஹால் தாண்டி, ஐம்பது பேர் உட்கார்ந்து சாப்பிடும் அளவு பெரிய நடை தாண்டி, ஒரு சிறு கூட்டம் நடத்தலாம் போன்ற திறந்த வெளி சிமெண்டு முற்றம் தாண்டி, சுற்றி ஓடும் திண்ணை வரிசை மெயின்கேட்டில் நுழைகிற வாயில் அருகே உட்கார்ந்திருந்தவர் திரும்பிப் பார்த்தார்.

பாட்டில் உடைந்தது கேட்டிருக்கும்.

இரு வரிசைத் திண்ணையிலும் யார் யாரோ உட்கார்ந்திருந்தார்கள்.

யோசனை கேட்கிறவர்கள், உதவி கேட்பவர்கள், சிபாரிசு கேட்பவர்கள். ஏழு மணிக்கே கூடிவிடும் கூட்டம் அது.

தலை உலுக்கி என்ன என்று தூரத்திலிருந்தே சைகையால் கேட்டார் அனந்தாச்சாரி.

ஒரு சிறுபுன்னகையோடு ஒன்றுமில்லை என்று பதில் தெரிவிக்கத் தலையாட்டினாள்.

கிழவருக்குக் கண் கூர்மை. புரிந்திருக்கும்.

நர்மதா சமையல் அறைக்குப் போனாள்.

கீழே விழுந்து நொறுங்கிய பாட்டில் நொறுங்கலைக் கூட்டிக் கொண்டிருந்தாள் மஹாலக்ஷ்மி.

“என்னம்மா ஆச்சு?”

மஹாலக்ஷ்மி பளிச்சென்று நிமிர்ந்தாள்.

“என்னமோ ஆச்சு!” வழக்கமாக அவளிடம் தென்படும் முகமலர்ச்சியும் பொறுமையும் இல்லை. ஏதோ ஒரு வெறுமை.

முகத்திலடித்த அந்த பதில் மஹாலக்ஷ்மிக்கே சற்று மிகுதி என்று பட்டிருக்கும் போலும்!

“கை தவறிடுத்து!” என்று மீண்டும் குனிந்து கூட்டத் தொடங்கினாள்.

“நீ நகரும்மா. நான் கூட்டறேன்” நர்மதா விளக்குமாறை அவள் கையிலிருந்து வாங்கினாள்.

மஹாலக்ஷ்மி கொடுத்துவிட்டு நகர்ந்தாள். நர்மதாவுக்கு சிறு வியப்பு.

‘இது சும்மா இயல்பில்லை. கைவேலையை யார் வற்புறுத்தினாலும் அவள் விட்டுக் கொடுக்க மாட்டாள்’


கூட்டிக் கொண்டே யோசித்தாள்.

‘அம்மாவுக்குள்ளே என்னமோ மாற்றம்! எதுவோ நொறுங்கி விட்டிருக்கிறது! ஆசையா... நம்பிக்கையா... பாசமா... எது அது?”

நேற்று மாலை ஊரிலிருந்து திரும்பினதுமே அவள் போக்கில் தெரிந்த மாறுதல் நர்மதாவைத் தாக்கிற்று.

நர்மதாவின் வருகை அவளுக்குள் எப்போதும் ஒரு நீர் ஊற்றைப் பொங்க





வைக்கும். கண்ணும் மூக்கும் பேசும். முகமே அந்த வருகையைக் கொண்டாடும்.

எதுவும் இல்லை.

"வாடீ... ஏன் தாமதம்... ட்ரெய்ன் லேட்டா?" என்றான். ஏதோ ஒரு வாட்டத்திலிருந்து மீள முயலும் பார்வை.

நர்மதாவுக்கு ஏமாற்றமாய் விட்டது.

வந்த இரண்டு மணி நேரத்தில் அம்மா புலம்பத் தொடங்கி விட்டாள்.

"எல்லாத்துக்கும் றெக்கை முத்திப் போச்சு! எங்கயாவது பிச்சுண்டு போயிடணும்! இந்த ஜடத் தோடயும் மடத் தோடயும் யார் கட்டிண்டு மாரடிப்பாங்கற சலிப்பு வந்தாயிடுத்து."

தாக்குதல் பொதுவாகத் தொடங்கியது, இலக்கு நிர்ணயமின்றி.

ஹால் மூலையில் பூத்தொடுத்துக் கொண்டே மஹாலக்ஷ்மி ஆரம்பித்த போது அனந்தாச்சாரி காதில் விழும் தூரத்தில் உள்ள அவர் அறையில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

"எல்லாம் அவா அவா இஷ்டம்! ஒருத்தன் அமெரிக்கா போறேன்னான்... ஆஹா பேஷ்னு எப்பச் சொல்வான்னு காத்திண்டிருந்தாப்ல அவனை மூட்டை கட்டி

கன்னியாகி நிலவினில் ஆடி...

அனுப்பியாச்சு"

அண்ணா ஸ்ரீதர் எம்.சி.ஏ முடித்து அமெரிக்காவுக்குக் கிளம்பியதில் அம்மாவுக்கு விருப்பமில்லை. தாத்தாதான் அவரவர் விருப்பத்திற்கு நாம் குறுக்கே நிற்க வேண்

3

வையவன்

செப்பு மொழிகள்...



இப்போது வெளிவருகிற திரைப்படங்களில் எல்லாம் சண்டைக் காட்சிகள் அதிகமாக இடம் பெறுவதால் இங்கேயும் (சினிமா உலகிலும்) மோதுதல் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது போலும்!

– முதல்வர் கருணாநிதி

டாம் என்று விடாப்பிடியாக அவனை அனுப்பி வைத்தார்.

மஹாலக்ஷ்மியின் முதலாவது காயம் அதில் தொடங்கியதா? இல்லை. அதற்கு முன்பேவா?

''இப்ப நீ கௌம்பியிருக்கே! அன்னி பெசண்ட் ஆகலாமா.... முத்துலெக்ஷ்மி ரெட்டி ஆயிடலாமான்னு. நோக்கும் பச்சைக் கொடி ரெடியாக் காத்துண்டிருக்கு... ம்ஹும்... நேக்கென்ன 'பவர்' இருக்கு? நான் வெறும் பெருமாள் கோயில் பட்டாச்சாரியோட ஆம்படையாதானே! நான் வாய் பேச முடியுமோ''

என்ன இவள் இப்படிச் சரிந்து விட்டாள்?

'அம்மா அம்மா... நீயா பேசறே?' நர்மதாவுக்குத் திடுக்கிட்டது. 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய' என்ற பகவான் வாக்குக்குப் பொருள் சொன்னவள் நீ இல்லையா?'

சேரன் மாதேவியில் துவைத்து, அயர்ன் பண்ணிக் கொண்டு வந்திருந்த துணிகளை பீரோவில் அடுக்கிக் கொண்டிருந்த நர்மதா திரும்பிப் பார்த்தாள்.

''யாரும் கல்யாணம் பண்ணிக் குழந்தை குட்டி பெத்துண்டு நாலு பேராட்டம் குடியும் குடித்தனமுமா இருந்துடாதீங்கோ!''

மஹாலக்ஷ்மியின் குரலில் காரம் கூடியது. உள்ளே நெடுநாள் தேங்கியிருந்த கசப்பு உடைப்பு எடுத்துக் கொண்ட மாதிரி.

''அம்மா...'' என்று நர்மதா அடக்க முயன்றாள்.

''ஏன்டீ. என்னைக் கட்டுப்படுத்தறே? நேக்கு இல்லியா சுதந்தரம்... நான் வாயைத் திறந்து எதுவும் பேசப்படாதோ?''

நர்மதா மீண்டும் அனந்தாச்சாரியின் அறையைப் பார்த்தாள். அவரிடம் சிறிதுகூடச் சலனமில்லை. எழுதும் வேலை தொடர்ந்து கொண்டிருந்தது.

''இல்லேன்னு யார் சொல்லிட்டா இப்ப? வேணும்னா இன்னும் நன்னா வீதிக்கெல்லாம் கேக்கறாப்ல கத்து.''

மஹாலக்ஷ்மிக்குள் எரிகிற தீயை ஏறத் தள்ளிய மாதிரி ஆனது.

''ஆமான்டீ... ஒன்னால கத்தத் தானே முடியும், கத்திக்கோங்கறியா...'

நர்மதா வாயை வளர்த்ததற்கு வருத்தப் பட்டாள்.

''நீங்கள்ளாம் மஹான்கள்! பெரியவாள்! நான் சராசரி. நான் எதுத்துக் கேள்வி கேட்கலாமோ? நேக்கு என்ன அந்தஸ்து?''

'திருக்கூடலில் இருக்கிற கல்யாண சத்திரத்தில் ஒவ்வொரு முகூர்த்தத்திற்கும் பணத்தை எண்ணிக் கொண்டு வாடகை ரசீதில் கையெழுத்துப் போடுவது யார்?

கல்தான்புரத்து நிலத்தில் குத்தகை நெல்லை இறக்குகிற வண்டிக்காரன் யாரிடம் கூலி வாங்கிக் கொள்கிறான்?

திம்ம சமுத்திரத்து மாந்தோப்பின் வருஷக் குத்தகையை வாதாடி விற்று நோட்டு எண்ணுவது யார்?'

நர்மதா கண் ஆடாமல் அம்மாவையே பார்த்து மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவையெல்லாம் அனந்தாச்சாரியின் பிதுரார்ஜித சொத்து, தன் கணவன் வெறும் கோயில் பட்டாச்சாரி என்ற தாழ்வு மனப்பான்மையா இவளுக்கு?

இது இவளுக்குள் எத்தனை நாளாய் உறங்கிக் கொண்டிருக்கிறது?

இவ்வளவு நாள் இவளை யார் மாடினாரைக் கோபுரத்தில் தூக்கி வைத்து வாயடங்கிக் கை கட்டி இருக்கச் சொன்னது? அவரை எதிர்த்து ஒரு சொல்... மறுத்து ஒரு வார்த்தை வந்திருக்குமா இவள் வாயில்?

அப்படி இவள் இருக்க வேண்டுமென்று தாத்தா எதிர்பார்க்கவில்லை. அவர் மனசில் எந்த மரியாதையையும் எதிர்பார்க்கும் பலவீனம் இல்லை.

இவளுக்கே அது தெரியும்!

இவளே மனம் உவந்து கொடுத்துவிட்ட ஒரு கௌரவ பீடத்தின் கனம் இவளையே நசுக்குகிறதோ!

நர்மதா மனம் வேறு திசைக்குத் தாவியது.

வரப் போகிற வரன் அம்மாவின் தூரத்து உறவு. ஐஎஸ்ஆர்ஓவில் பெரிய சயின்டிஃபிக் ஆபீசர். நல்ல சம்பளம், அந்தஸ்து... அழகு... குணம் இத்யாதி இத்யாதி

இதையும் தான் எங்கே மறுத்து விடப் போகிறோனோ என்ற பயம் இவளைப் பிடித்து ஆட்டுகிறதோ!

தனக்கு ஏன் கல்யாண ஆசை வரவில்லை?

நர்மதா தனக்குள் தோண்டித் துருவி, தான் ஏன் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறோம் என்று காரணம் தேடி

னாள்.

தினேஷ்?

ஊஹூம். இல்லை. அவன் காரணமில்லை.

தாத்தாவே 'அவனுக்கு அப்படி ஒரு அபிப்பிராயம் இருந்து, உனக்கும் சம்மதமானால் சொல்லு' என்று கேட்டார்.

"இல்லே தாத்தா. அவனுக்குக் காதலிலும் நம்பிக்கை இல்லை; கல்யாணத்திலும் நம்பிக்கை இல்லை" என்று, தான் சொன்ன பதிலை நினைத்துக் கொண்டாள்.

நிஜமாய் அவன் காரணமில்லை. தான் அவனுக்காகக் காத்திருக்கவில்லை.

பின்?

உத்யோகம், கல்யாணம், குழந்தை, வீடு, பண வேட்டை என்று அலுப்பு சலிப்பில்லாமல் சுழலும் அந்த ராட்சத ராட்டினம் அவளை நோக்கி எதையோ கேட்டது.

இதுதான்... இவ்வளவுதான்... இதுக்கு மேலே ஒண்ணுமில்லே! இதை விட்டுட்டு நீ என்ன சாதிச்சுடப் போறே?

அதில் சிக்கி விடுவதா என்ற வீம்பா... பயமா?

மஹாலக்ஷ்மியை நேற்று அவள் விநோதமாகப் பார்த்தாள்.

'உன் வானத்திற்கு எவ்வளவு சிறிய வரம்பு? எவ்வளவு பாதுகாப்பான எல்லை? பங்களா, கார் அந்தஸ்து என்று பறக்க முடியாவிட்டாலும் உன் அளவிற்காவது உன் பிள்ளைகள் ஒடுங்கிவிட வேண்டும் என்று உனக்கு என்ன கவலை?

பூக்கட்டிக் கொண்டிருந்த மஹாலக்ஷ்மி குக்கர் ஓசை வரவும் சமையல் அறைக்கு எழுந்து போனாள்.

'வீட்டை வசூல், குத்தகை வசூல் இதில் ஏன் உனக்கு ஒரு காத்திரமான ஈடுபாடு?'

நர்மதாவின் மௌனக் கேள்விகள் மஹாலக்ஷ்மியின் பின்னே துரத்தின.

'லட்சோப லட்சம் பேர் வேலை, சோறு, கூரை, ஆடை, அன்பு கருணைன்னு நாயாப் பேயா அலையறதைப் பார்த்து மனசு பதர்றதே! நான் என்னம்மா செய்யட்டும்?'

'கண் மூடிக் காது பொத்தி என் சுகம், என் சௌக்யம், என் பெருமை என் புகழ்னு நிர்த்தாட்சண்யமா இருக்க முடியல்லியே... எப்பப் பாத்தாலும் அடிவானத்து உறுமல் மாதிரி எதுவோ இடியோசை என்னை உலுப்பறதே!'

மஹாலக்ஷ்மி திரும்பி வந்தாள். பூக்கட்ட உட்கார்ந்து விட்ட இடத்தில் தொடர்ந்தாள்.

"ஏதோ ஒரு சமயத்திலே எல்லாரும் போராட்டம் பண்ணினா... அப்பு ஜெயிலுக்குப் போனா பாத்துக்கறதுக்கு மனுஷா இருந்தா! மரியாதை இருந்தது. அது ஒரு காலம்."

தாத்தாவை மஹாலக்ஷ்மி திரும்பிப் பார்த்தாள். அவர் வேலை எந்தத் தாக்குதலுக்கும் தடைப்பட்டதில்லை. எழுதிக் கொண்டிருந்தார்.

"அப்ப வயசும் இருந்தது. மதிக்கிற மனுஷாளும் இருந்தா! இப்ப... எங்கியோ கவர்ன்மெண்ட்காரன் தோல் கழுவ மருந்துக்கு ஃபாக்டரி கட்டறானாம்! நமக்கென்ன வந்தது? எவன் எதைக் கட்டினா நமக்கென்ன... எதை இடிச்சா நமக்கென்ன?"

வெள்ளைப் பூனை ஒன்று 'மியாவ்' என்று கத்தி அவள் முகத்தை வெறித்தது. மஹாலக்ஷ்மி கையை ஓங்கினாள். ஓடிவிட்டது.



"உங்க கம்பெனி மிக்ஸி வாங்கினா இலவசமா ஏதோ தர்றதா விளம்பரம் செய்திருக்காங்களே, என்ன தருவீங்க?"

"மிக்ஸி ஓடறப்ப காதுல அடைச்சுக்க பஞ்சு!"

– மேல்மங்கலம் பத்ரா

"வயசுக்கு வந்த பொண் ஒருத்தி ஆத்திலே இருக்காளேங்கிற பீதி ஆருக்கும் இல்லே. எப்பவும் நாம வீடரா இருக்கணும்னு ஒருத்தர்... எல்லாம் பெருமாள் பார்த்துப்பார்னு ஒருத்தர்."

தாக்குதல் இருமுனையிலுமா? நர்மதா மனசில் சிரித்துக் கொண்டாள்.

"நான் மினிஸ்டர் ஆக மாட்டேன்... நேக்கு ஜில்லா போர்டு பிரசிடெண்ட் என்ன பஞ்சாயத்துத் தலைவர் பதவிகூட வேண்டாம்னு, வந்த சிதேவியை எல்லாம் எட்டி உதைச்சாச்சு. தியாகி நெலம் கொடுத்தான் பதினோரு ஏக்கரா. அதையும் பள்ளிக்கூடத்துக்கு எடமில்லேன்னு கொடுத்தாச்சு." ஆஹா அதுதான் சரின்னு தலையாட்ட ஒரு பிள்ளை!"

திடீரென்று நர்மதாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது. 'மெனோ பாஸ்' கோளாறா? விலக்கு நிற்கிற சமயத்தில் பெண் சிதறுவாளாமே! ஒருவேளை அதுவோ?



செப்பு மொழிகள்...

சினிமாவில் கூட பொய்யாக அடித்துக் கொள்வது போல் தானே மக்களை ஏமாற்றினோம். இப்போது நிஜமாக வன்முறையில் இறங்கி மக்கள் நம்மேல் வைத்திருக்கும் மதிப்பை நாம் கெடுத்துக் கொள்ளலாமா?

– இளையராஜா

நேற்றைத் தொடர்ந்து இன்றுமா...

விழுந்து நொறுங்கிய சிதறலை பிளாஸ்டிக் முறத்தில் வாரிக் குப்பைக் கூடை நோக்கி நடந்தாள் நர்மதா.

வெளியே இருந்து தாத்தா குரல் கேட்டது.

''நர்மூ... நர்மூ... மீனாட்சி வந்திருக்கா''

நர்மதா திரும்பிப் பார்த்தாள். எல்லாக் குழப்பத்தையும் வெள்ளம் அடித்துப் போய் விட்ட மாதிரி மனசில் உற்சாகம் துள்ளிக் குதித்தது.

கொழுகொழுவென்று வானிப்பும் இளமையுமாய் மீனாட்சி படியேறிக் கொண்டிருந்தாள். ஏதோ பள்ளிப் பருவமே ஒன்று இரண்டு திரும்பி வந்த மாதிரி ஒரு துள்ளல் பிறந்தது.

மீனாட்சி கறுப்பு. கண்ணும் சிரிப்பும் மின்னல் ஊசி மாதிரி மனசைக் கோத்துக் கோத்து இழுக்கும்.

''என்ன மகாராணி... தபால் கூடப் போட மாட்டே போலிருக்கு!'' என்று தெருநடையில் ஹவாய் செருப்பைக் கழற்றினாள் அநாயாசமாக.

''ஆமாண்டி. டில்லி எருமை... நான்தான் அட்ரஸ் கொடுத்துட்டுப் போனனே... வெளியூர் போனாளே என்ன ஆனாளோ எப்படின்னு லெட்டர் போடறதுக்கென்ன?'' என்று மடக்கியவாறே குப்பைக்கூடையில் முறத்தைக் கவிழ்த்து விட்டு வந்து அவள் கன்னத்தில் தட்டினாள்.

''நீங்கள்ளாம் சோஷல் வர்க்கர்ஸ். பட்டதாரிங்க, நான் என்ன ஆஃப்டர் ஆல் மீன்காரி... யாருமே லெட்டர் போட்டிருக்கான்னு யாராவது கேட்டா நீ எப்படி சொல்லுவே?''

''இந்தப் புண்ணாக்குப் பிரலாபம் வேண்டாம். நல்லா டெவலப் ஆயிட்டே... இன்னும் ஒரு ரவுண்ட் பெருத்துட்டே... மொகத்திலே ஒரு தேஜஸ் வேற...''

வாசல் நடையில் போட்டிருந்த பெஞ்சில் உட்கார வைத்து, அவள் தோள் மீது கை போட்டுப் பேசினாள் நர்மதா.

''நேத்திக்கு நானும் தாத்தாவும் ரயில்வே ஸ்டேஷன்லருந்து யார் ஆட்டோவில வந்தோம் தெரியுமோ?'' கண்களைச் சிமிட்டிக் கொண்டே கேட்டாள்.

''தெரியுமே.''

''மோகன்ராஜே சொன்னானா?''

''இல்லே... அண்ட போண்டப் பறவை சொல்லிச்சு!''

'தத்' என்று அவள் காதை முறுக்கினாள் நர்மதா.

''பரவால்லே... சீக்கிரம் நீ செட்டில் ஆயிடுவே. மோகன்ராஜ் சொந்தமா ஆட்டோ வாங்கிட்டான்.''

''ஆமாம்... ஐயா ஏராப்ளேன் வாங்கிட்டாரு... எப்ப வாங்குவாரோன்னு காத்துட்டிருந்தேனா இப்ப ஒடனே செட்டில்தான்!''

நர்மதா சிரித்தாள்.

மோகன்ராஜும் மீனாட்சியும் நேசிப்பதை முதலிலிருந்து மதித்தவள் அவள்தான்.

அனந்தாச்சாரி வேகமாக உள்ளே வரவும் மீனாட்சி எழுந்து நின்றாள். ''நீ உட்காரும்மா'' என்று அவளைப் பார்த்துச் சிரித்து விட்டு எதிரில் நின்ற சைக்கிளைத் தள்ளி வாசலுக்கு இறக்கிக் கொண்டே ''நான் சாவடிவரைக்கும் போய்ட்டு வர்றேம்மா. அங்கே என்னமோ கலாட்டாவாம்... மோகன்ராஜை அடிச்சுட்டாங்களாம்!'' என்றார் அனந்தாச்சாரி.

(தொடரும்)



''நேற்று என் பையன் ஊதுபத்தி ஸ்டாண்டை முழுங்கிட்டான்!''

''அய்யய்யோ, அப்புறம் என்னாச்சு?''

''வாழைப்பழத்தை ஊதுபத்தி ஸ்டாண்டா உபயோகிச்சதால ஒண்ணும் ஆகலை!''

– சக்தி சரவணன்

"லேமினேட் செய்ய ஆர்டர் கொடுத்து விட்டேன்!"

✉ 'சொதப்பல் சாம்பியன் சி.பி.ஐ' தலையங்கம் படித்தேன். சி.பி.ஐ.க்குப் பெயர் தான் பெத்த பெயரு! ஆனால் சி.பி.ஐ-யினால் ஒன்றுமே சாதிக்க முடியவில்லை என்பதற்கு சமீபத்திய உதாரணம்: லல்லுபிரசாத் யாதவ்!

விருதுநகர், சுந்தர் அழகேசன்.

✉ "சொதப்பல் சாம்பியன் சி.பி.ஐ!" எனப் பட்டம் சூட்டி எழுதப்பட்ட தலையங்கம் பல்வேறு பொறுப்பின்மைகளைச் சுட்டிக் காட்டி வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது!

இனாம்மணியாச்சி, ச.ஆ. கேசவன்.

✉ கவலட்சுமியின் அட்டைப்படம் ஏந்திய கல்கி சூப்பர்! குறிப்புகளும் தான்.

பு.புளியம்பட்டி, அ. கிருஷ்ணகுமார்.

✉ நடிகை கவலட்சுமியின் டைரி குறிப்பை படிக்கும் பாக்கியம் பெற்றேன். அரிய கருத்துக்களில் ஆழ்ந்து விட்டேன். காந்திஜி, நேருஜி, டைரி குறிப்புகளை லேமினேட் பண்ணினார்களா என்று தெரியாது. கவலட்சுமியின் டைரி குறிப்பை லேமினேட் செய்ய ஆர்டர் கொடுத்துள்ளேன்.

மகாதேவபுரம், எஸ். ராமசாமி.

✉ சேலம் மாநாடு பற்றிய நேர்முக வர்ணனை (கட்டுரை + படங்கள்) அற்புதம். கட்டுரையைப் படித்ததும் நேரில் பார்த்து ரசித்தது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

திருச்சி - 18, அம்மனூர்என். சாம்பமூர்த்தி.

✉ சேலம் மாநாடு பற்றிக் கல்கி நிருபர் மிகவும் நுணுக்கமாகக் கவனித்து தகவல்கள் கொடுத்திருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்கிறோம். அதற்காக, தமிழ்க்குடிமகன், "நாக்கு சிவந்திருக்கிறதா? என்று நமக்கு முன்னால் அமர்ந்திருந்த ஆர்க்காடு வீராசாமியிடம் கேட்டார்!" என்பது போன்ற செய்திகளைக்கூட வெளியிட வேண்டுமா?

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

✉ அன்று மாநாடு என்ற பெயரில் லட்சக்கணக்கான செலவில் விழா. இன்றும் அதுவே. அன்று ஊர்வலத்தில் கோவில் நேர்ச்சை போன்று முதுகில் ஊக்குகளால் குத்தித் தொங்க விட்டு வந்த கோரம். இன்றும் அது போன்று மற்றொரு கோரம். ஆட்சி மாறினாலும், காட்சிகள் மாறவில்லை.

தூத்துக்குடி-1, ப. சுகுமார்.

✉ ஜெ. - சசி உறவுக்குக் கூறிய உதாரணம் அருமையிலும் அருமை! ஆனால் குஜ்ரால் கட்டாயம் வருத்தப்படுவார்!

கமுதி, ராஜி.

✉ "தகுதிக்கு ஒரு சிம்மாசனம்" கட்டுரை படித்தேன். கே.ஆர். நாராயணன் அவர்களின், குடியரசுத் தலைவர் பதவிக் கால நடைமுறைகள் மிக நன்றாகவே இருக்கும் என்பதை அவரது இளமைக் கால அனுபவங்களின் மூலம் அறிவித்து விட்டீர்கள்...!

சூலூர், அ. மயில்சாமி.

✉ 'பாரு'க்குள்ளே நாளைய பாரதம்' படித்தேன். சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை என்று கடை முதலாளிகளும், அச்சிறுவர்கள் மூலம் இனி குடிப்பதில்லை என்று 'குடி' மக்களும் தீர்மானமாக முடிவெடுத்தால்தான் இப்பிரச்னைக்கு முடிவு காண முடியும்.

மன்னார்குடி, டி. வரதன்.

✉ பஜ்ஜி போடுவதில்கூட இவ்வளவு விஷயங்கள் இருக்கிறதா என வியந்தோம். நிர்வாகம் எப்படி இருக்க வேண்டும் என்பதை மிக எளிய உதாரணம் மூலம் அழகாக விளக்கிய சாவிக்கு பாராட்டுக்கள்.

விபீஷணபுரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ "ஒதுக்கப்பட்ட கல்லே மூலைக்குத் தலைக்கல் ஆனது" என பைபிள் வாசகம் ஒன்றுண்டு. அதுபோல இதழின் ஓரத்தில்தான் இடம் பெற்றிருந்தாலும், அவற்றில் உள்ள சாரத்தின் காரணமாக "மார்ஜின் மொழிகள்" மனதில் இடம் பிடித்து விட்டன.

திருவண்ணாதபுரம், இ.க. பாலசுப்பிரமணியன்.



கையே போதும்; மெஷின் வேண்டாம்!

புகைப்படங்கள், அடையாள அட்டை இவற்றையெல்லாம் லாமினேட் செய்த பிறகு பார்த்திருப்பீர்கள். இந்த லாமினேஷனை அதற்கான கருவிகளின் மூலம்தான் செய்ய முடியும். அடையாள அட்டையின் மீது பி.வி.சி. எனப்படும் மிக மெல்லிய நிறமற்ற தாளை இதன் மீது வைத்து, கருவிக்குள் புகுத்தினால், குறிப்பிட்ட வெப்பத்தில் அந்தத் தாள் அதன் மீது அழுத்தமாகப் பதிந்து விடும். பிறகு இரண்டையும் பிரிக்க முடியாது. கவர்ச்சியான தோற்றம், எழுத்துக்கள் மற்றும் புகைப்படம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு - இவை லாமினேஷனின் சிறப்புகள்.

பி. ரங்கநாதன் என்பவரோ எந்தக் கருவியும் தேவை இல்லாமல் கைகளாலேயே லாமினேட் செய்யும் முறையை முதல் முறையாக அறிமுகப்படுத்தியிருக்கிறார். திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் சென்னையில் நகலெடுத்தல், அமோனியா பிரிண்டிங் ஆகியவற்றிற்கான கடையை வைத்திருக்கிறார். "லாமினேஷன் கருவி வாங்கி, கஸ்டமர்களுக்காக லாமினேட் செய்து கொடுப்பேன். சில சமயம் வெப்பத்தின் காரணமாக லாமினேட் செய்யப்படும் தாளின் முனை லேசாக கருகிப் போவதுண்டு. இந்தக் குறைபாடு இல்லாத கருவிகளும் இப்போது மார்க்கெட்டுக்கு வந்துவிட்டன. ஆனால் விலைதான் ரொம்ப அதிகம். சுமார் 25,000 ரூபாய். அந்த சமயத்தில்தான் கருவியின் உதவி இல்லாமல் பி.வி.சி. தாளை, நமக்குத் தேவைப்படும் டாக்குமென்டின் மீது கையாலேயே பொருத்தி லாமினேட் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றியது. முயற்சிகளில் இறங்கினேன்.

"முதலில் பி.வி.சி. தாளை அப்படியே பொருத்திப் பார்த்தேன். ஆனால் குறிப்பிட்ட வெப்பம் இல்லாததாலோ என்னவோ இரு தாள்களுக்கும் இடையே grains வந்து தோற்ற அழகைக் குறைத்தது. பிறகு சற்று அதிக விலை என்றாலும் பாலியஸ்டர் தாளைப் பயன்படுத்திப் பார்க்கலாம் என்று தோன்றியது. இதற்கு 'ஸ்டிக்கர் கம்'மை பயன்படுத்த, ஆங்காங்கே திட்டுத் திட்டாக அசிங்கமாகக் காட்சியளித்தது. பிறகு பல்வேறு பரிசோதனைகளைச் செய்து பார்த்து பாலியஸ்டர் தாளை குறிப்பிட்ட ரசாயனக் கலவையில் (வியாபார ரகசியம்) ட்ரீட் செய்த பிறகு, விளைவு திருப்திகரமாக இருந்தது!" என்கிறார்.

தமது தயாரிப்பின் நன்மைகளையும் பட்டியலிட்டார். "விலை உயர்ந்த கருவி தேவையில்லை என்பதால் மிகக் குறைந்த செலவிலேயே இதைச் செய்ய முடிகிறது. உதாரணமாக ஓர் அடையாள அட்டையை வழக்கமான முறையில் லாமினேட் செய்ய பத்து ரூபாய் ஆகும். எனது செயல் முறையில் லாமினேட் செய்யப்படும் தாள்களில் ஒருவித மொடமொடப்பை கவனித்திருக்கலாம் - அதாவது மடக்கினால் உடைந்து விடும் என்கிற மாதிரி. நான் பயன்படுத்தும் தாள் மிக மெல்லியது என்பதால் இந்த நிலை ஏற்படாது. சுமார் பத்து வருடங்களுக்காவது இந்த லாமினேஷன் நிலைத்து நிற்கும் என்பதற்கு நான் உத்தரவாதம். இன்னொரு முக்கிய நன்மையும் உண்டு. சில தாள்களையோ பத்திரங்களையோ நாம் மற்றவர்களுக்குக் காட்ட விரும்பாமல் இருக்கலாம். என் தயாரிப்பை வாங்கிக்கிட்டு போய் அவங்களே அதையெல்லாம் சுலபமாக லாமினேட் செய்துக்க முடியும். டைரியிலோ, புத்தகத்திலோ ஒரு பக்கம் இரண்டாகக் கிழிந்து விட்டால் இப்படி லாமினேட் செய்யலாம் - கருவியின் மூலம் இப்படிச் செய்ய முடியாது."

கடந்த ஒரு வருடமாக கையால் செய்யப்படும் இந்த லாமினேட் தாள்களை மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தி வருகிறார் இவர். முன்பு அரசு (பெரியார்) போக்குவரத்துக் கழகத்தில் கூட இலவச பஸ் பாஸை லாமினேட் செய்ய இவரது தயாரிப்பைத்தான் பயன்படுத்தினார்களாம்!

— ஜி.எஸ்.எஸ்.

இது ஒன்றே

33 வருடங்களாக கவர்ச்சிகர வருமானம் அளிக்கும் முதலீடு.

சொல்லப் போனால் ஒன்றே ஒன்று தான் உள்ளது

US 64

விசேஷ அளிப்பு ரூ.14.00 மட்டும் 31 ஜூலை வரை.

விசேஷ ஜூலை அளிப்பின் கீழ் யூஎஸ் 64ல் முதலீடு செய்ய இதுவே சிறந்த தருணம். யூஎஸ் 64 திட்டம் 2 கோடிக்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுக்கு வருடாவருடம் தவறாமல் வெகுமதி அளித்து வருகிறது. இப்போது மறுபடியும் அளித்துள்ளது. போனஸிற்கு பின் உள்ள மூலதனத்தில் 20% டிவிடெண்ட் அளித்துள்ளது. அதாவது இது போனஸிற்கு முன் உள்ள மூலதனத்தின் மீது 22% டிவிடெண்ட் ஆகும். ஆகவே, பாதுகாப்பு, எளிதில் ரொக்கம் மற்றும் கவர்ச்சிகர லாபம் அளிக்கும் திட்டத்திலேயே விசேஷ தள்ளுபடி விலையில் முதலீடு செய்ய, உங்கள் அருகாமையிலுள்ள யூடிஐ கிளை, முக்கிய பிரதிநிதி அல்லது முகவரை அணுகவும்.

20% டிவிடெண்ட் போனஸிற்கு பின் உள்ள மூலதனத்தில்

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கு

மண்டல அலுவலகம்: 29, ராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர் போன்: 214973 • சென்னை போன்: 517101, 517190 • மதுரை போன்: 38186 • திருச்சி போன்: 760060

SISTA SAATCHI & SAATCHI - 077/97 M TAM B.

● க. குழந்தைவேல்,
மேட்டுத்திருக்காம்புலியூர்.

? தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடிப்பதுதான் த.மா.காவின் லட்சியம். அதற்காகக் குறுக்கு வழியில் செயல்பட மாட்டோம் என்று ப. சிதம்பரம் கூறியுள்ளது பற்றி...?

! ரொம்ப ஆரோக்கியமான சிந்தனை. இதை விட ஆரோக்கியமான தீர்மானம், ஜாதி சங்கங்கள், கட்சிகள் ஆகியவற்றுடன் த.மா.கா. எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாது என்று மூப்பனார் எடுத்திருக்கும் முடிவு.

● எஸ். ராமசுப்பிரமணியன், தூத்துக்குடி.

? அசார் மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது பற்றி தராசின் கருத்து என்ன...?

! புது டீமைப் பற்றி எனக்கு மட்டுமென்ன, டெண்டுல்கருக்கே அதிருப்திதான்! இளைஞர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆட வாய்ப்புக் கிட்டி, அவர்களும் நன்றாக ஆடி, மொத்தத்தில் டீம் நல்ல பெயர் வாங்கினால் சரி. வெற்றிக்கு உத்தரவாதம் வேண்டாம்; ஆனால் வெற்றி பெற்றுத் தரக்கூடிய உணர்வுகளுக்கு உத்தரவாதம் தேவை.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? சந்திரலேகா மீது திராவகம் வீசப்பட்ட வழக்கை வாபஸ் பெறமாட்டோம் என சுப்ரமணிய சுவாமி அறிவித்துள்ளது பற்றி...?

! குப்புற விழுந்தால் மட்டுமல்ல... மீசையே இல்லாவிட்டாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்கிறவர் சுவாமி!

● கே.ஏ. பாலமுருகன், திருநெல்வேலி - 8.

? அரசு எடுத்துள்ள பெயர் மாற்ற முடிவு வரவேற்கத் தக்கதுதான். இருப்பினும் பெருந்தலைவர்களின் வழியை மனிதன் மறந்துவிடும் சூழ்நிலையை அது உருவாக்காதா?

! பஸ்களுக்கும் மாவட்டங்களுக்கும் பெருந்தலைவர்கள் பெயரைச் சூட்டுவதால் அவர்கள் காட்டிய வழியை மக்கள் மறக்க மாட்டார்கள் எனில், இன்று ஜாதிக் கலவரங்களே நிகழ்ந்திருக்காதே! விஷயம் இதிலெல்லாம் இல்லை ஐயா! அனைவருக்கும் சிறந்த கல்வி, வேலை வாய்ப்புப் பெருக்கம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது... இந்த விஷயங்களில் அல்லவா முக்கியமாக கவனம் செலுத்தப்பட வேண்டும்... அதைவிட்டு....

● செய்யது மைதீன், திருநெல்வேலி - 5.

? லல்லுவை ஆதரித்து தற்கொலைப் படை உருவாகப் போகிறதாமே- பீஹாரில்?

! ஜனநாயகம், நேர்மை, தர்மம் எல்லாவற்றையும் கொலை செய்யும் தலைவருக்குத் தற்கொலைப் படை!

லாலுவை ஆதரித்து தற்கொலைப் படை உருவாகிறதே...?



• கொலையும் தற்கொலையும்!

● செங்குன்றம் பாலசுப்ரமண்யன், சென்னை - 52.

? பத்திரிகைகள் நடத்தும் குறுக்கெழுத்துப் போட்டிகள் நமது ஐயாவுக்குப் (அமரர் கல்கி) பிடிக்காதாமே?

! குறுக்கெழுத்துப் போட்டி மூளைக்கு வேலை கொடுப்பது. அதற்கு எதிரி அல்ல. அந்த கூப்பனுக்குக் கட்டணம் வசூலித்து, பரிசு வழங்கியதைத்தான் பத்திரிகை தர்மம் அல்ல என்று கருதினார். பத்திரிகை அதன் உள்ளடக்கத்துக்காக விற்பனையாக வேண்டும். இன்றோ பத்திரிகையை லாட்டரிச் சீட்டாகவே மாற்றி விட்டார்கள்! பரிதாபம்!

● வி.பி. காந்தி, மதுரை. ❒

? ரேஷன் கார்டு வெளியீட்டுக்கென முதல்வர் தலைமையில் ஒரு பெரிய விழா, தமிழக தினசரிகளில் அரைப்பக்க விளம்பரம் அவசியம்தானா?

! விழாவும் விளம்பரமும் அவசியம்தான். புதிய திட்டம் தொடங்கப்பட்டு, அமுலுக்கு வருவது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஆனால், ஆடம்பரமும் முதல்வர் பட 'பப்ளிசிடி'யும் தேவையில்லை.

● ஆர். மார்டின், திருமானூர்.

? ஒரு தலையாக நீண்ட நாட்கள் காதலித்துக்

கொண்டே இருந்தால் இதயத்துக்குக் கெடு தலா?

! தோல்வியை, ஏமாற்றத்தை 'டேக் இட் ஈஸி பாலிஸி'யுடன் ஏற்பதாக இருந்தால் இதயத்துக்குக் கேடு இல்லை... அல்லாத பட்சத்தில் மனசிலும் உடலிலும் பலவித கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

● வி. முத்துக்குமரன், திருமானூர்.

? நமது நாடு இன்னும் ஊழலில் முதலிடம் பிடிக்கவில்லையே...?

! மனந்தளராதீர்கள்! அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

● வடவள்ளி ராமசுப்ரமணியன்,
கோயமுத்தூர்.

? பத்திரிகை உரிமையாளர்கள் வம்சாவழியாக வருவதும் ஆட்சிப் பொறுப்பில் தந்தை, தனயன், பேரன் என்று வருவதும் ஒன்றா...? கலைஞர் அப்படி ஒப்பிட்டுப் பேசியுள்ளாரே?

! ஒன்று அல்ல... பத்திரிகைகள் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. அதன் பங்குதாரர்களாயிருப்பவர்களுக்குத் தமது பங்குகளை வாரிசுகளுக்கு எழுதி வைக்கவோ பரிசளிக்கவோ உரிமை உண்டு. தனியார் நிறுவனங்களுக்கான கம்பெனி சட்ட திட்டப்படி அவை நடத்தப்பட வேண்டும். கட்சியின் விஷயம் வேறு. அது ஒரு பொது அமைப்பு. அந்தந்த கட்சிக்கான அரசியல் சட்ட அமைப்பு உண்டு; தேர்தல் முறை உண்டு. அந்தத் தேர்தல் முறைப்படி ஒரு கடைநிலை உறுப்பினர் கூட தலைவராக உயர முடியும். முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே முக்கியம். அப்படி நடக்காதபோதுதான் சிக்கல்.

● நீ.க. பத்மநாபன், நீடாமங்கலம்.

? தங்களை அதிசயிக்க வைக்கும் அரசியல் வாதி யாரோ...?

! சந்திரலேகா! ஆஸிட் தெளிப்பு இவருக்குத் திடீரென்று பன்னீர்த் தெளிப்பாக மாறி விட்டதே!



• இல்லாத மீசையிலும்...!

இந்தச் சாக்கடை அரசியலில் எதை எதிர்பார்த்து சுயமரியாதையைச் சவப்பெட்டிக்குள் அடக்கம் பண்ணியிருக்கிறார்?

● வே. முருகேசன்,
சென்னை - 4.

? தூத்துக்குடியில் விஷ வாயு தாக்கி நூறு பெண்கள் மயக்க முற்றது பற்றி...?

! 'எங்கள் நிறுவனத்தில் எந்தக் கோளாறும் இல்லை; விஷவாயு இங்கிருந்து வரவில்லை..' என்று அடித்துக் சொல்லியிருக்கிறது ஸ்டெர்லைட். நிபுணர் குழுவின் விசாரணை தேவை.

● பி. ஜெயப்பிரகாஷ்,
சர்க்கார்பதி.

? சிதறு தேங்காய் போடுபவர்கள் அதன் துண்டுகளை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கூறுவது ஏன் சார்?

! சிதறு தேங்காய் என்பது நமது ஆணவத்தை இறைவன் முன்பு சிதற அடிப்பதன் அறிகுறி. அதைத் திரும்ப எடுக்கலாமா? இரண்டாவதாக, அந்தத் தேங்காய்த் துண்டங்களை நாலு ஏழைச் சிறுவர்கள் சுவைத்து உண்டு நம்மை வாழ்த்த வேண்டும் என்பதும் நோக்கம். ஆனால், இப்போது பல இடங்களில் கோவில் நிர்வாகமே துண்டங்களைச் சேகரித்து விற்று, காசாக்கிவிடுகிறதே!

● பா. குணா, சேத்துப்பட்டு.

? சமீபத்தில் படித்த புத்தகம்?

! அருந்ததி ராய் எழுதிய 'The God of small Things' என்கிற நாவல். அம்மணிக்கு இது முதல் நாவலாம். கேரள கிராமம் ஒன்று- மக்களை, இயற்கைக் காட்சிகளை, பழக்க வழக்கங்களை எழுத்தில் கொண்டுவர முடியும். அட, சிநேகாஷ்ணத்தைக் கூடவா! இதமான குளிரும் போர்த்திக் கொள்ள கதகதப்பான கம்பளியும் சேர்த்துக் கிடைத்தாற்போல ஒரு சுகம். விலையை மட்டும் கேட்காதீர்கள்!

● இ. மகாராசன்,
கடமலைக் குண்டு.

? புனித நதியான கங்கையைத் தூய்மைப்படுத்தும் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட லட்சக்கணக்கான பணம் ஊழல் காரணமாக வீணாகிவிட்டதாமே?

! சம்பந்தப்பட்டவர்கள், அதே கங்கையில் ஒரு முழுக்குப் போட்டு பாவங்களைக் கழுவி விடமாட்டார்களா!



• ஆரோக்கியம்...



• அதைவிட ஆரோக்கியம்!



• பப்ளிசிடிக்கு ரேஷன் இல்லை!



• அழகிய அரசியல்!



• குளிரும் கம்பளியும்...

❒ ரூ. 50 பரிசு பெறுபவர்:
வி.பி.காந்தி,
ஜோ இல்லம், ஐந்தாவது தெரு,
பாஸ்டின் நகர், மதுரை - 16.

தாயநிலம்!

ஷபீனா

"அன்னை சாரதா முதியோர் இல்லம்'' என்ற பித்தளைப் போர்டு நித்யாவை வரவேற்றது. பெரிய இரும்பு கேட்டைத் திறந்து நடைபாதையில் நடந்தவாறே 'நிருபரி'ன் கண்ணால் அந்தக் கட்டடத்தை அளந்தாள் நித்யா.

ஒரு வார இதழின் மாணவ நிருபர் நித்யா. பி.எஸ்ஸி., படித்துக் கொண்டிருக்கிறாள். பெரிய பங்களா மஞ்சள் வெய்யிலில் தகதகத்தது.

"யாரைப் பாக்கணும் தாயி...?'' - ஒரு கிழவியின் குரல் நித்யாவை நிறுத்தியது.

"ம்... இங்கே கமலவல்லி அம்மா இல்லே, அவுங்களை...''

"ஓ.. அக்காவையா... போய்க்கோ... ஆபீஸ் ரூம்முலேதான் இருக்காங்க.''

வராண்டா படியேறி -

"மேடம்... நான் வரலாமா...?''

சற்று ஸ்தூலம். சிவந்த மேனி. படித்த களை. அழகான மூக்குக் கண்ணாடி முகம்.

"வாங்க... வாம்மா...! - கமலவல்லியின் அழைப்புக் குரல் நித்யாவை உள்ளே அனுப்பியது.

"நமஸ்காரம். நான் நித்யா... 'வார மல்லிகை' நிருபர்.''

"ஓ... வாம்மா... உட்காரு...''

ஐந்து நிமிட மவுனத்தில கமல வல்லியை அளந்தாள் நித்யா. பெரிய பணக் காரக் குடும்பம். கணவர் ரிடையர்டு, ஐ.ஏ.எஸ். கமலவல்லியின் பாழ் நெற்றியில் அவர் மறைந்திருந்தார்.

ஏகப்பட்ட சொத்து சுகங்களை வீணாக் காமல் இப்படி ஒரு முதியோர் இல்லம் துவக்கி சேவை செய்கிறாள் - இவை நித்யா வுக்குத் தெரிந்தவை.

"ஆரம்பிக்கலாமா...?'' - நித்யா.

"இரும்மா... முதல்லே இந்த இல்லத்தைச் சுற்றிப் பாத்துக்க... பிறகு பேட்டி.''

சுமார் மூவாயிரம் சதுர அடியில் விரிந் திருந்த அந்த பங்களா கமலவல்லியின் உடைமை. பத்து அறைகள். பெரிய ஹால். கலர் டி.வி. விசாலமான சமையலறை. இரண்டு பிரிட்ஜ்கள். கிரைண்டர்... மிக்ஸி.. இப்படி நவீன சமையலறை. அழகான பூஜை அறை. விசாலமான தோட்டம்.. மாடியில் நான்கு அறைகள். அங்கங்கே ஆண்களும் பெண்களுமாக பலதரப்பட்ட முதியவர்கள் பூத்தொடுப்பது, கைவேலை என்று பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

நித்யாவுக்கு அத்தனை வியப்பு. அங்கு தங்கியிருக்கும் முதியவர்கள் சிலரையும் பேட்டி கண்டாள்.

அறுபத்தி ஏழு வயது ரங்கனாதனுக்கு ஆறு பிள்ளைகள். மூன்று பெண்கள் - மனைவி இல்லை. ஒருவரும் கவனிக்க வில்லை. பென்ஷன் பணத்தோடு இங்கே வந்து விட்டார்.

எழுபது வயது கந்...

''வெளியிலே சொல்லாதேடி யம்மா. இப்ப கவர்மெண்டில் பெரிய சிப் இன் ஜினியரா இருக் கானே மதல...

கோபால், என் ஒரே பிள்ளை... பிள்ளையைத் தாரை வார்த்துக் கொடுத்த பாக்கியசாலி நான்...'' கண்ணைக் கசக்கிக் கொண்டாள்.

அறுபது வயது குலசேகரனுக்கு இரண்டு காலும் சரியாக இல்லை. சொத்தை தங்கள் பெயருக்கு மாற்றவில்லை என்பதால் இரண்டு பிள்ளைகளும் ஆளுக்கொரு காலாக பங்கு பிரித்துக் கொண்டு உடைத்திருந்தார்கள்.

இப்படி சுமார் அறுபது அவலக் கிழங் களுக்கு ஆதரவு இந்தக் கமலவல்லி. எத்தனை தியாக புத்தி. சேவை மனப்பான்மை. இத் தனை பேரும் அந்தம்மாவுக்கு எவ்வளவு நன்றி சொல்ல வேண்டும்...

"வாம்மா என் ரூமுக்குப் போகலாம்....'' கமலவல்லியின் அழைப்பில் பின் தொடர்ந்

தான்.

ஆபீஸ் அறையை ஒட்டி, கமலவல்லியின் பிரத்தியேக அறை.

சூடான காப்பியுடன் பேட்டியைத் துவக்கினாள்.

"நான் பரம்பரையாகவே செல்வந்தர் குடும்பம். கணவர் ஐ.ஏ.எஸ். அதிகாரி... நிறைய சொத்து. இரண்டு பெண்கள். ஒரு பையன். மூன்று பேரும் அமெரிக்காவில் வசதியாக இருக்கிறார்கள். ஏதோ நம்மாலான சேவை செய்யலாமென்று இந்தப் பணியைச் செய்கிறேன்."

இது பேட்டியின் சுருக்கம்.

டேப்ரிகார்டர் ஓடிக் கொண்டிருந்தது.

"மேடம்... இந்த மாதிரி ஆதரவு இல்லாதவர்களை ஆதரிக்கணும் என்கிற பெரிய தியாக மனப்பான்மை ஏற்பட்டதன் காரணம் என்ன...?" - நித்யாவின் கேள்வி.

கமலவல்லி நித்யாவைப் பார்த்துக் கொண்டே மவுனமாக அமர்ந்திருந்தாள். 'குபுக்' கென்று இரு கண்களிலும் நீர். சட்டென்று கமலவல்லியின் கை டேப்ரிகார்டரை அணைத்தது.

கமலவல்லி பல்லைக் கடித்துக் கொண்டு துக்கத்தை விழுங்கினாள்.

"சுயநலம்தான் காரணம் நித்யா..." - வார்த்தைகள் வெடித்தன.

"சுயநலமா...? ஏம்மா... இத்தனை வசதிகள்... சொத்து... உங்களுக்கென்ன சுயநலம்?"

மழையினூடே வெய்யில் போல் சிரித்தாள் கமலவல்லி. கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நீ சின்னப் பொண்ணும்மா... காசும், பணமும், வசதிகளும் வாழ்க்கையில்லே... அதெல்லாம் ஒரு வயசு வரைதான். வயசாகி விட்டதுன்னா வேண்டியதெல்லாம்... காசு... பணமில்லேம்மா... ஆதரவு. இதமான பேச்சு... நாம் தனி ஆள் இல்லேங்கற எண்ணம்."

நித்யா குழம்பினாள்.



"புரியலே... மேடம்..."

"நித்யா... உன் பேட்டியிலே என் தியாக உள்ளம், சேவை மனப்பான்மை அப்படீன்னு நீ எழுதலாம். ஆனா..."

"ஆனா...?"

"ம்... உன் பேட்டி முடிஞ்சுது... இப்ப ஆப் தி ரெகார்ட்... இது உன் மனசோட இருக்கட்டும்... யார்கிட்டேயாவது சொல்ல வேண்டுமே..." கமலவல்லி சற்று நிறுத்திக் கண்களை மூடிக் கொண்டாள்.

பத்து நிமிட மௌனம்.

"நித்யா... உலகமே அதைத்தான் சொல்றது... நான் பெரிய சேவை மனப்பான்மை கொண்டவள்... அது இதுன்னு... ஆனா உண்மை இதுதான். என் பிள்ளையும் சரி. பெண்களும் சரி... அமெரிக்கா போனதோடு சரி. இந்த அம்மாவை நினைக்கிறதுமில்லே தொடர்பு கொள்றதுமில்லே... நீயும் வேண்டாம். உன் சொத்தும் வேண்டாம் அப்படீங்கறாங்க... அவர்களைப் பார்த்தே எத்தனை வருஷமாகுது தெரியுமோ... என் பிள்ளை ரொம்ப ஒசத்தி... என்னைத் தலை முழுகிட்டதாகவே எழுதிட்டான்."

"இதுக்கெல்லாம் காரணம்...?"

"எது வேணா இருக்கட்டும்... பெத்து வளர்த்து ஆளாக்கின தாயையே தலை முழுகிட்டேன்னா... காரணம் எதுவா இருந்தா என்ன...? அன்னிக்கு என் வாழ்விலே வந்த தனிமை பயம்... ஆதரவுக்காக ஏங்கின மனம்... மத்த உறவெல்லாம் என் பணத்து மேலே கண்ணா இருந்தது. என்ன செய்ய? நானே ஒரு முதியோர் இல்லம் போகலாமான்னு நினைச்சேன். அப்பத்தான் இந்த எண்ணம் வந்தது"

கமலவல்லி நிறுத்தினாள்.

"கூடாது... அப்படி ஒரு இல்லம் போய்... என் கணவரின் அந்தஸ்துக்குக் களங்கம் வரக் கூடாது. நம்ம அவலம் வெளியே தெரிய வேண்டாம்னு நான் அனாதை இல்லம் போகாமே அதை என்கிட்டே வரவழைச்சேன். ஆமாம்... என்னுடைய சுயநலம்தான். இப்பப் பாரு... உலகமே என்னைப் புகழுது. சேவை... தியாகம்னு... ஆனா... என் சுயநலம்தான் இது. உண்மையிலேயே... இத்தனை முதியோர்களை நான் காப்பாற்றவில்லை... அவர்கள்தான் எனக்குத் துணை... உறவு... புகலிடம் எல்லாம்... என் தனிமை உணர்வு போச்சு... நான் பெரிய குடும்பமாயிட்டேன்..."

நித்யா அதிர்ச்சியில் உறைந்து விட்டாள்.

இப்படியும் ஒரு புதிய கோணமா? சுயநலமா!

இலங்கைக்குச் சென்றிருக்கும் (ஆசிய கோப்பை + சில டெஸ்ட்கள்) இந்திய கிரிக்கெட் அணி, சமீபத்தில் பெங்களூரில் பயிற்சி மேற்கொண்டது. மைதானத்திலிருந்து ஒரு நேரடி ரிப்போர்ட்.

"இலங்கையில் மழை பெய்தாலாவது தோற்காமல் இருப்போம்!"

● சென்னையில் கேம்ப் என்று முதலில் அறிவித்துவிட்டு உடனே பெங்களூருக்கு மாற்றியதற்குச் சொன்ன காரணம் : சென்னையில் வெயில்! கேப்டன் சச்சின் டெண்டுல்கர் பெங்களூரைத் தான் விரும்பினார் என்பது உபரிக் காரணம். ஆனால், பத்து தினங்கள் கேம்ப் என்று சொன்னாலும் முழுமையாக ஒரு நாள் கூட நடக்கவில்லை! காரணம், வருண பகவான் தினமும் வந்து கொண்டேயிருந்ததுதான்! "இந்த மழை, கொழும்பில் நடக்க இருக்கும் டெஸ்டு சமயத்தில் பெய்தாலாவது நாம் டெஸ்டில் தோற்காமல் இருப்போம்!" என்று கமென்ட் அடித்தார் ஒரு வீரர். (பேரைச் சொன்னால் தப்பாச்சே!)

● கேம்பில் நெட் பிராக்டிசை விட வீரர்கள் அதிகம் எடுத்துக் கொண்டது Physical Fitness பயிற்சிதான். முதன் முறையாக ஸ்போர்ட்ஸ் அதாரிடி ஆஃப் இந்தியாவைச் சேர்ந்த 'தேஜ்பால் கவுல்' என்பவர் வீரர்களை தினமும் பரேடு எடுத்தார்.

"யாருக்கும் எவ்வித பிரச்னை யும் இல்லை. எல்லோரும் பூரண உடல் வலி வுடன் இருக்கிறார்கள்" என்று நம்மிடம் சொன்னார் மானேஜர் மதன்லால்.

● இம்முறை, தினமும் காலையில் மனோதத்துவ டாக்டர் ஒருவர் கேம்ப்புக்கு

• பயிற்சியின் போது....



வந்து வீரர்களைச் சந்தித்து ஆலோசனைகளை வழங்கியது புதிய விஷயம். என்ன காரணம் என்று யாரும் சொல்ல வில்லை. இதுவரை டாக்டராக இருந்த அலி இரானியை கேம்பில் காணவே இல்லை!

- தேர்வுக்குழு கூடியபோது கேப்டன் சச்சின் டெண்டுல்கர் கலந்து கொள்ளவில்லை. பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது கூட சேர்மன் ராமகாந்த் தேசாயும், இந்திய போர்டு செயலாளர் லீலே ஆகிய இருவர் மட்டுமே பங்கு கொண்டனர்!
- சுமார் மூன்று மணி நேரம் நடந்தது, தேர்வுக் குழு கூட்டம். காரசாரமான விவாதம் நடந்ததாகத் தகவல். ஆட்டக்காரர்கள் ஒரு மனதாகத் தேர்ந்து எடுக்கப்பட வில்லை என்கிறார்கள். தேர்வு முடிந்த பிறகு, தென் மண்டல தேர்வாளரும் முன்னாள் டெஸ்ட் பந்து வீச்சாளருமான சில்லால் யாதவ் கோபமாக அறையிலிருந்து வெளியேறியதைக் காண முடிந்தது. உள்ளே என்ன பவுன்ஸரோ? மானேஜர் மதன் லாலும் கூட்டம் முடிந்து வெளியேறிய போது இறுகிய முகத்துடன்தான் சென்றார்.
- இலங்கை செல்லும் அணியில் வினோத் காம்பளி, மோங்கியா இருவரும் இல்லை. சபா கரீம் விக்கெட் கீப்பராக இருப்பார் எனக் கூறப்பட்டது! அதற்குச் சொல்லப் பட்ட காரணம், "மோங்கியாவை விட சபா கரீம் நல்ல பேட்ஸ்மேன்!"
- பம்பாயைச் சேர்ந்த நிலேஸ் குல்கர்னியும் ஒரிசாவைச் சேர்ந்த டொபாஷிஸ் மகாந்தியும் புதிய முகங்கள். குல்கர்னி இடது கை ஸ்பின்னர். மகாந்தி அதிவேகப் பந்து வீச்சாளர். ஒரிசாவிலிருந்து இந்திய அணியில் இடம் பெறும் முதல் வீரர் டொபாஷிஸ் மகாந்தி, சென்னையைச் சேர்ந்த M.R.F. Pace Foundation லிருந்து இந்தியாவிற்கு அறிமுகம் ஆகும் 5வது நபர். (விவேக் ரஸ்தான், சுபுரர்தோ பானர்ஜி, ஸ்ரீநாத், பிரசாத் ஆகியோர் பிறர்).
- தேர்வு முடிந்த உடன் சச்சின் லண்டனில் நடைபெற உள்ள கேப்டன்களின் மாநாட்டில் பங்கு கொள்ளப் போய் விட்டார். லண்டனிலிருந்து நேரிடையாக கொழும்பில் இந்திய அணியினருடன் சேர்ந்து கொள்வார் என மதன்லால் கூறினார்.
- கேப்டன் இல்லாமல் அணி, தனியாக வெளி நாடு செல்வது இதுவே முதல் முறை.
- தேர்வுக் குழுவினர் இம்மாதம் 24ம் தேதி மீண்டும் பம்பாயில் சந்தித்து, டெஸ்டு போட்டிகளில் பங்கு கொள்ளும் அணியைத் தேர்ந்து எடுப்போம் என்றார் தேசாய். பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் தேசாய் வினோத் காம்ப்ளி நீக்கம், மோங்கியா நீக்கம் போன்ற காரசாரமான கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல் திணறினார். ஆனால் டெல்லியைச் சேர்ந்த ராபின் சிங் (இவர், அவரல்ல!) ஜூனியர் கேம்பில் நன்றாகப் பந்து வீசினார் என்றும், அதனால் இலங்கை செல்லும் டெஸ்டு அணியில் இடம் பெறலாம் என்றும் சூசகமாகத் தெரிவித்தார்.
- இந்த அணித் தேர்வு பற்றி டெண்டுல்கருக்கு முழுத் திருப்தி இல்லை என்று தெரிய வருகிறது.

— சிம்மம்

புகைப்படம் : இரவி

ஆண்டவர் வளர்த்த ஆமணக்குச் செடி!

வலம்புரி ஜான்

அந்த நாளில் யோனா என்று ஒருவர் வாழ்ந்திருந்தார். இவர் அமித்தாய் என்பவரின் மகன். இவருக்கு ஆண்டவரின் அருள் வாக்கு புறப்பட்டது. "நீ புறப்பட்டு, நினிவே நகரத்திற்குச் சென்று, அதற்கு அழிவு வரப் போகிறது என்று அங்குள்ளவர்களுக்கு அறிவித்து விடு" என்று ஆண்டவர் யோனாவுக்குக் கட்டளையிட்டார். ஏனெனில் நினிவே பட்டணத்தில் உள்ள ஆண்களும் பெண்களும் மனம் திரும்பாதவர்களாகத் தீமையிலேயே நிலைத்திருந்தார்கள்.

யோனாவோ கடவுள் இட்ட கட்டளையை உடனே நிறைவேற்றவில்லை. அவர் ஆண்டவருக்கு அஞ்சி அவரது சமூகத்திலின்று தப்பி ஓடினார். நாசித்துவாரங்களில் நர்த்தனமாடும் காற்றிடமிருந்து உயிர் தப்பிக்க நினைத்தால் எப்படி? எங்கும் நிறைந்திருக்கிற இறைவனிடமிருந்து யோனா தப்பிவிட நினைத்தது விந்தைதான். அவர் யோப்பா என்கிற இடத்திற்குச் சென்றார். அங்கிருந்து தர்சீசுக்கு (ஸ்பெயின்) புறப்பட இருந்த ஒரு கப்பலில் அவர் ஏறிக் கொண்டார்.

ஆண்டவர் யோனாவை விடுவதாக இல்லை. கப்பல் ஆடி அசைந்து புறப்பட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் ஆண்டவர் கடலின் மேல் கடுமையான காற்றை வீசும்படியாகச் செய்தார். கப்பல் தள்ளாடி, பாறை மீது மோதி உடைந்து, நொறுங்கி விடும் போல் இருந்தது. கப்பலில் இருந்தவர்கள் எந்த நிமிடம் கடலின் ஆழத்திற்குள் போகப் போகிறோமோ என்று அச்சத்தால் நடுங்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தெய்வங்களை மன்றாடத் தொடங்கினார்கள்.

கப்பலின் பளுவைக் குறைத்தால் ஒருவேளை அழிவைத் தவிர்க்க முடியாவிட்டாலும், தள்ளிப் போடலாம் என்கிற முடிவிற்கு அவர்கள் வந்தார்கள். ஆகவே கப்பலில் இருந்த சரக்குகளைக் கடலின் மேல் தூக்கி எறிந்தார்கள். யோனாவிற்கு நடந்தது ஒன்றும் தெரியாது. அவர் கப்பலின் அடித் தட்டுக்குப் போய்ப் படுத்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். கனவில் கடவுள் வந்து விட்டால் என்ன செய்வது என்கிற கவலை அவருக்கு. கப்பல் அந்த ஆட்டம் ஆடியும் கூட யோனாவின் தூக்கம் கலைந்தபாடில்லை.

கப்பல் தலைவன் விரைவாக வந்து "என்ன இது? உனக்கு இந்த நேரத்தில் தூக்கம் வருகிறது? எழுந்திரு. நீயும் உன் தெய்வத்தை நோக்கி வேண்டிக் கொள். ஒருவேளை அந்தத் தெய்வமாவது நம் அனைவரையும் காப்பாற்றட்டும்" என்றான்.

பிறகு கப்பலில் இருந்தவர்கள், "நம்மில் பயணப்படுகிற எவரோ ஒருவரால்தான் கப்பலுக்கு எதிர்பாராத சிக்கல் வந்து விட்டது. அவர் எவர் என்று கண்டறிய சீட்டுக் குலுக்கிப் போடுவோம்" என்றார்கள். அவ்வாறே அவர்கள் சீட்டுக் குலுக்கிப் போட்டபோது, சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. அவர்கள் அனைவரும் யோனாவைச் சூழ்ந்து கொண்டார்கள். உன் வேலை என்ன? எங்கிருந்து வருகிறாய்? உன் நாடு எது? உன் இனம் எது? என்று கேள்விகளால் யோனாவைத் துளைத்தார்கள்.



யோனா அவர்களைப் பார்த்து, "நான் ஒரு எபிரேயன். நீரையும், நிலத்தையும் படைத்த ஒரே இறைவனை நான் வழிபடுகிறவன்"


வெளிச்சத்தின் விலாசம்

15



என்று சொன்னார். மேலும் ஆண்டவர் தம்மிடம் ஒரு செய்தி சொன்னதாகவும், அவரிடமிருந்து தான் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு கப்பல் ஏறியதாகவும் யோனா அவர்களுக்குத் தெரிவித்தார். அவர்களுக்கோ அச்சம் அதிகமானது. "நீ ஏன் இப்படிச் செய்தாய்?" என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தபோதே அலைகள் உயரமாய் எழும்பின. கடலின் பரப்பில் பறந்து கொண்டிருந்த மீன் கொத்திப் பறவைகளே கூக்குரலிட்டன. அப்போது அவர்கள் "கடலின் கொந்தளிப்பு அடங்கி விடும்படியாக நாங்கள் உன்னை என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள். அதற்கு யோனா எந்தத் தயக்கமும் இல்லாமல், "நீங்கள் என்னைத் தூக்கிக் கடலில் எறிந்து விடுங்கள்; அப்பொழுது கொந்தளிப்பு

செப்பு மொழிகள்....



நீதிபதிகள் இரக்கமுடையவர்களாகவும் புரிந்து கொள்ளும் இதயத்தைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். திறமை போன்ற சிறப்புப் பண்புகள் இருந்தாலும் மற்றவர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத - உணர்ச்சியற்ற மனிதர்களுக்கு நீதிமன்றத்தில் இடமில்லை.

— சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மன்மோகன்சிங் லிபரான்.

அடங்கிவிடும்; நீங்கள் எல்லோரும் பிழைத்துக் கொள்ளுவீர்கள்; உங்களைத் தாக்கும் இந்தக் கடும்புயல் என்னால்தான் உண்டாயிற்று என்பதை நான் அறிவேன்" என்றார். என்றாலும் அவர் சொன்னதை உடனே அவர்கள் செயல்படுத்தவில்லை. தங்கள் வலிமையையெல்லாம் ஒன்று திரட்டி தண்டு வலித்தார்கள். இருந்த போதிலும் கடலின் உக்கிரம் அதிகமானதே தவிர குறையவே இல்லை.

ஆகவே அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து "ஆண்டவரே குற்றமில்லாத ஒருவரைச் சாகடித்தோம் என்கிற பழி எங்கள் மீது விழாதிருப்பதாக" என்று சொல்லிவிட்டு யோனாவைத் தூக்கிக் கடலிலே எறிந்தார்கள். சில நிமிடங்களிலேயே கடலின் கொந்தளிப்பு அடங்கிப் போனது. அச்சத்தால் நடுங்கிப் போன அனைவரும் ஆண்டவரைத் தோத்தரித்தார்கள். யோனாவை எறிந்த பிறகு கப்பல் அமைதியாக அன்னப்பறவை தெப்பத்தில் மிதப்பதைப் போல அசைந்தது. சிறிது நேரத்தில் ஆண்டவரின் ஏற்பாட்டின்படியே கடலில் திமிங்கிலம் ஒன்று பெரும் இரைச்சலோடு வந்தது. அது யோனாவை விழுங்கியது. யோனா திமிங்கிலத்தின வயிற்றுக்குள் போனார். அங்கிருந்தபடியே அவர் ஆண்டவனை வேண்டலானார். தன் உயிரைக் காப்பாற்றும்படியாக யோனா கடவுளிடம் தொடர்ந்து வேண்டினார். இப்படியாக மூன்று நாட்கள் அல்லும் பகலும் அவர் இடைவிடாது இறைவனிடம் இறைஞ்சி மன்றாடினார். மூன்றாவது நாள் ஆண்டவரின கட்டளைப்படியே திமிங்கிலமானது யோனாவைக் கரையிலே கொண்டுவந்து கக்கியது. தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஆண்டவருக்கு நன்றி பாராட்டிய யோனா கடற்கரையில் புதுவாழ்வு கிடைத்தது என்று புளகாங்கிதமடைந்தார்.

இரண்டாவது முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் அருள்வாக்கு புறப்பட்டது. "நீ புறப்பட்டு நினிவே நகருக்குப் போய் நாற்பது நாளில் அந்நகரம் அழிக்கப்படும் என்று தெரிவிப்பாயாக" என்றார் ஆண்டவர். நினிவே நகரத்து மக்கள் யோனாவின் செய்தியை நம்பினார்கள். சிறியோர், பெரியோர் அனைவரும் சாக்கிலான ஆடைகளை அணிந்து கொண்டு நோன்பு இருக்க ஆரம்பித்தார்கள். நினிவே நகரமே இருளில் தன்னை மூழ்கடித்துக் கொண்டது. யோனா இறைவனிடமிருந்து கொண்டு வந்த செய்தி நினிவே அரசனுக்கும் எட்டியது. அவன் தனது அரச ஆடைகளைக் களைந்துவிட்டு, சாம்பலின் மேல் உட்கார்ந்து தவம் செய்யத் தொடங்கினான்! அவன் ஓர் ஆணை பிறப்பித்தான். "இதனால் அரசரும், அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது : எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக் கூடப் பார்க்கக் கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ, தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும், விலங்குகளும் சாக்கு உடைகளை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுள் நம்மை மன்னிக்கும்படியாக மன்றாட வேண்டும்; அனைவரும் தமது தீய வழிகளையும், கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும்" என்று அதில் கண்டிருந்தது. இவ்வாறு கர்த்தாதி கர்த்தரிடம் கையேந்தினால் மக்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும் என்று அரசனும், அரசவையினரும் நம்பினார்கள்.

ஒரு நாடே தவக்கோலம் பூண்டதை இறைவன் பார்த்தார். அவர்கள் தீயவழிகளினின்று விலகிக் கொண்டதைப் பார்த்து பரமன் பூரித்தார். ஆகவே ஆண்டவர் தமது மனதை மாற்

நிக் கொண்டார். அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த அழிவை அனுப்பவில்லை. ஆனால் யோனாவுக்கு இது சற்றும் பிடிக்கவில்லை. "ஆண்டவரே! நான் என் உயிரை விட்டுப் புறப்படுவதற்கு முன்னரே இதைத்தானே சொன்னேன். இதை முன்னிட்டே நான் தர்கீசுக்குத் தப்பி ஓடினேன். நீர் கனிவு மிக்கவர்; இரக்கம் உள்ளவர். அளவில்லாத பொறுமையும், இரக்கமும் உடையவர். உமது அன்பிற்கு எல்லை வகுத்தவர்கள் எங்கும் இல்லை. அழிக்க நினைப்பீர்; பிறகு உமது மனதை மாற்றிக் கொள்ளுவீர். இதெல்லாம் முன்பே எனக்குத் தெரிந்ததுதான். ஆகையால் ஆண்டவரே இப்போதே என் உயிரை எடுத்துக் கொள்ளும். வாழ்வதை விடச் சாவதே எனக்கு நல்லது" என்று யோனா வேண்டிக் கொண்டார்.

அதற்கு ஆண்டவர், "யோனா, நீ இவ்வாறு கோபம் கொள்ளுவது முறையா?" என்று கேட்டார். யோனாவோ நகரை விட்டு கிழக்குத் திசையில் நடந்தார். தமது வார்த்தைகள் பொய்த்துப் போய் விட்டனவே என்கிற வருத்தம் யோனாவை வாட்டியது. ஓரிடத்தில் பந்தல் ஒன்றை அமைத்துக் கொண்டு நகரத்திற்கு வரவிருந்த அழிவு தள்ளிப் போடப்பட்டதா, தவிர்க்கப்பட்டு விட்டதா என்று தமது விழிகளை அகலத் திறந்து பார்த்துக் கொண்டே இருந்தார். கடவுளின் ஏற்பாட்டின்படியே அவர் அமைத்த பந்தலின் அருகே ஓர் ஆமணக்குச் செடி முளைத்தது. அது வளர்ந்து யோனாவின் தலைக்கு நிழல் தந்தது. வெப்பகாலத்தில் யோனாவின் மனத் தளர்ச்சி கொஞ்சம் குறைந்தது. அந்த ஆமணக்குச் செடியைக் கண்டு யோனா அகமகிழ்ந்தார்.

ஆனால் மறுநாள் கதிரவன் கண் விழித்தான். கடவுளின் கட்டளைப்படியே விடிகிற நேரத்தில் எங்கிருந்தோ வந்த புழு ஒன்று ஆமணக்குச் செடியை அரித்தது. செடியோ உலர்ந்து வாடி ஒன்றுமில்லாமல் விழுந்தது. கடவுளின் ஆணைப்படியே கிழக்கிலிருந்து அனல்காற்று வீசியது. வெப்பத்தால் யோனாவின் நெற்றியில் வியர்வை நதி வெள்ளமாகப் புரண்டது. அவருக்கு மயக்கம் உண்டானது. யோனா மீண்டும் "வாழ்வதை விட சாவதே மேல்" என்று சொல்லிக் கொண்டு தனக்குச் சாவு வர வேண்டுமென்று கடவுளிடம் உருக்கமாகப் பிரார்த்தித்தார்.

அப்பொழுது கடவுள் யோனாவை நோக்கினார். "ஆமணக்குச் செடியைக் குறித்து நீ இவ்வாறு சினம் கொள்ளுவது முறையா?" என்று கேட்டார். அதற்கு யோனா, "ஆம்; முறைதான்; செத்துப் போகும் அளவிற்கு நான்



"பழைய பேப்பர்காரன் எதுக்கு வந்துட்டுப் போறான்?"

"நீங்க புதுசா நாவல் எழுதறதா கேள்விப்பட்டு, அட்வான்ஸ் கொடுத்துட்டுப் போறான்!"

— குடந்தை கே.ஆர். ரவிக்குமார்

சினம் கொள்ளுவது சரிதான்" என்று சொன்னார். தம்மிடம் கடவுள் ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு, அதற்கு நேர்மாறாகச் செய்தால் தன் மரியாதை என்னாவது என்று யோனா அலைபாய்ந்தார்.

ஆண்டவர் அவரை நோக்கி, "அந்த ஆமணக்குச் செடி ஓர் இரவில் முளைத்தெழுந்து மறு இரவில் ஒன்றுமில்லாமல் முற்றிலுமாக அழிந்தது. அதற்காக நீ உழைக்கவும் இல்லை; உரமிடவும் இல்லை; அதற்காக நீ இவ்வளவு இரக்கப்படுகிறாயே! இந்த நினிவே நகரத்தில் இலட்சத்து இருபதாயிரம் மக்கள் இருக்கிறார்கள். இவர்களில் தங்கள் இடக்கை எது வலக்கை எது என்று அறியாத பாமர மக்களும் இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான விலங்கினங்களும் இருக்கின்றன. அறியாமல் தவறு செய்கிற மக்களைக் கண்டித்து, அவர்கள் மனம் மாறிவிட்டால், அவர்களை மன்னிப்பது எனது கடமைதானே! ஆமணக்குச் செடிக்கு நீ காட்டுகிற அன்பை என் மக்களுக்கு நான் காட்டுவது தவறா?" என்று கேட்டார்.

யோனா தமது தவறை உணர்ந்தார். எந்த மகத்தான மனிதனும் கருவிதானே தவிர கர்த்தா அல்ல என்பதை உணர்ந்து கொண்டார். இறைவன் தமக்கு நடத்திய பாடத்திற்குக் கருவியாக அமைந்த நினிவே நகரத்தைக் கண்ணீரோடு நோக்கினார். நினிவே நகரம் புதிய பாதையில் நடக்க உறுதிபூண்டு, பாவத்தின் இருளிலிருந்து பரிசுத்தமான வெளிச்சத்திற்குள் பிரவேசித்தது. யோனா அடுத்து ஆண்டவர் தமக்கு இடப்போகிற கட்டளைக்காகத் தாழ்மையோடு காத்திருக்கலானார்.

(தொடரும்)


கல்கி-பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

'மாமியார் - மருமகள்' ஜோக்

முடிவு

போட்டி - 12



''என்னங்க திடீர்னு 'ஐயோ'ன்னு கத்திட்டு மயங்கி விழுந்திட்டீங்க!''

''பின்னே மாமியாரும் மருமகளும் தோள் மேலே கையைப் போட்டுட்டு ஒண்ணா வந்தா மனுசனுக்கு பயமா இருக்காதா?''

– ஔவை ஏ.எஸ். யோகானந்தம்

❖❖❖

''உன் மாமியாரைப் பத்தி வரதட்சணைக் கொடுமைன்னு புகார் கொடுத்தியே... விசாரணைக்கு மாமியார் பஸ்ல வந்தாங்களா, ஆட்டோல வந்தாங்களா?''

''ஸ்டிரெச்சர்லதான்.''

– கடலூர் சரீஃலி

❖❖❖

''கருணாநிதி – மூப்பனார் உறவு மாதிரி அவங்க வீட்டுல மாமியார் மருமகள் உறவு...''

''எந்த விதத்தில?''

''சண்டையா இல்லையா'ன்னு கண்டு பிடிக்கவே முடியாது. ஆனா அப்பப்ப அறிக்கைகள் மூலமா காரசாரமா விமர்சனம் பண்ணிப்பாங்க!''

– எஸ். மாலதி

❖❖❖

பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது...

''சம்பந்தி தேசியத் தலைவராக இருக்கலாம். அதுக்காகக் கல்யாணம் முடிஞ்ச கையோட மாமியாரும் மருமகளும் 'குடும்ப ஒருமைப்பாடு உறுதிமொழி' எடுத்துக்கணும்னு சொல்றது நல்லாவா இருக்குது?''

– எஸ். சம்பத்

❖❖❖

''இருந்தாலும் என் மாட்டுப் பெண் ரொம்ப மோசம். ஒருநாள் எழுந்திருக்கக் கொஞ்சம் நேரமானதும் தலை மாட்டில விளக்கு வைச்சு ஒப்பாரி பாட ஆரம்பிச்சுட்டா!''

– ஜெயஸ்ரீ சாய்நாத்

❖❖❖

''உன் மாமியார் ஒரு பேப்பர்ல கழுதை, பீடை, முண்டம், சனியனே, மூதேவின்னு எழுதி உங்கிட்டே குடுத்துட்டுப் போறாங்களே எதுக்கு?''

''இன்னிக்கு அவங்க, 'மவுன விரதமாச்சே... அதான்!''

– ஜெயாப்ரியன்

❖❖❖

''இதோ பாருப்பா! என் நகையெல்லாம் திருடிட்டு, என் மாமியார் அந்த பீரோவிலே நாலாவது அடுக்கிலே ஒளிச்சு வெச்சிருக்கிற அஞ்சு பவுன் நெக்லஸை மட்டும் விட்டுட்டுப் போறியே? என் வயித்தெரிச்சல் உன்னைச் சும்மா விடாது!''

– தே. ராஜாசிங் ஜெயக்குமார்


❖❖❖

''சண்டை போடாதீங்கன்னு படிச்சி படிச்சி சொன்னேன் கேட்டீங்களா?''

''இப்ப அதுக்கு என்ன?''

'என்னவா...? இந்த காலனியிலே நம்ம வீட்டை கலவரப் பகுதியா அறிவிச்சிட்டாங்களாம்!''

– நெல்லை. குரலோன்




பாலம்

● தமிழிலும் ஆங்கிலத்திலும் சுமார் பத்து சஞ்சிகைகள் வாங்குகிறேன். படித்து விட்டு பழைய பேப்பராகப் போடுவதற்குப் பதில் ஒரு வாசகசாலைக்கு இலவசமாகத் தர விருப்பம்.

ஜி. ராமச்சந்திரன்,
45, அலுமேலுமங்காபுரம்,
சென்னை - 24.

● இருபத்தைந்து ஆண்டுகளாக பஞ்சாயதன பூஜை செய்து வருகிறேன். மானசரோவர் சென்று வந்த பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்த ஓரிரு கற்களைக் கொடுத்தால் சிவமூர்த்தியாக ஆவாஹனம் செய்து வழிபடுவேன்.



டாக்டர்
எஸ். தர்மராஜன்,
7, கிருத்திகா
அபார்ட்மெண்ட்ஸ்,
4B, ஜானகி அம்மாள்
தெரு,
ரங்கராஜபுரம்,
சென்னை -24.

● ICWAI இன்டர் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கிறேன். முதல் நிலைத் தேர்வு எழுதவிருக்கிறேன். புதிய 'சிலபஸ்' அடிப்படையில் study materials இருந்தால் படிக்கக் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆர். பாஸ்கர்,
9A, சங்கிலிகோனார் சந்து,
வடக்கு ஆண்டார் வீதி,
திருச்சி - 620 002.

● பல நாட்டு அஞ்சல் தலைகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

ஏ.ஆர். கதிர்வேலன்,
3/50, இலுப்பக்குடியார் தெரு,
கோனாபட்டு 622 503.

● B.B.C. தமிழோசையில் ஒலிபரப்பப்பட்ட "வினவுங்கள், விடை தருவோம்" நிகழ்ச்சி தொகுக்கப்பட்டு புத்தக உருவில் வந்துள்ளது. ஒரு பிரதி தேவை. விவரம் தெரிவிக்கவும்.

மே.மு. மாதவன்,
110/2, பெரிய தெரு,
அந்திமாஞ்சேரி பேட்டை 631 202.

● என்னுடன் அடையாறு மகளிர் பாலிடெக்னிக்கில் 1974-75ல் PTC படித்த ஆர். சாரதா என்னுடன் தொடர்பு கொள்வரா?

திருமதி கே. சீதா,
26, அபிராமி நகர்,
காட்சி மண்டபம் அருகே,
திருநெல்வேலி 627 006.

● சுயராஜ்யா பத்திரிகை 1971, 1972 தொடங்கி இறுதி வரை உள்ள இதழ்கள் தேவை. அத்துடன் ராஜாஜி அவர்களின் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பும் வேண்டும்.

ஆர்.எஸ். மூர்த்தி,
1, வடக்கு மடவிளாகம், கடம்பர்கோயில்,
குளித்தலை 639 104.

● மிக்கி மவுஸ், டொனால்ட் டக் போன்ற கார்ட்டூன் பட ரசிகர்களை இணைத்து ஒரு குழுமம் அமைக்க ஆசை.

ச. சுந்தர்,
16, சோலையம்மன்
கோயில் சந்து,
சென்னை - 600 007.

● 'கலைமணி' எழுதிய "ராவ் பகதூர் சிங்காரம்" நாவல் தேவை. விலை கொடுத்து பெற்றுக் கொள்வேன்.

என். வேங்கடேசன்,
4B, A.V.G. தெரு,
நெல்லிக்குப்பம் 607 105.

● வெளிநாட்டு தமிழ் வானொலிகளின் ஒலிபரப்பு நேரம், அலைவரிசை, தொடர்பு முகவரி இவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கே. ராஜா,
21. ஜே.பி. கோயில் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை - 21.

● தனுஷ்கோடி ராமசாமியின் சிறுகதைத் தொகுப்புகள் - 'சேதாரம்', 'நாரணமோ' முதலியவை - வைத்திருப்பவர்கள் விவரம் தெரிவித்தால் படித்து விட்டு உடன் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.

இ. தங்கமணி, ஆசிரியர்,
மூக்கனூர்பட்டி,
சந்தப்பட்டி (அ)
தருமபுரி (மாவ) 635 305

● பழைய ஆர்மோனியம் ஒன்று - டபுள் ரீடு - விலைக்கு வாங்க விருப்பம்.

எஸ். பார்த்தசாரதி,
30/5. காஜாமலை காலனி,
திருச்சி 620 020.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது - ஆர்)

யாத்திரை



சாதாரணமானவை எனது வாக்குறுதிகள்
ஆனால் உண்மையானவை.
கனவின் அழகிய வெண் குதிரை
சிறகுகள் விரித்து
இமைப் பொழுதில் கொண்டு சேர்க்கிற
கற்பனை இதமானதுதான்.
சாத்தியமாகாது.
நானோ நிதர்சனங்களில் வாழ்பவன்.
உன் கூந்தலுக்குச் சூட
குதிரையேறி வான் பறந்து
நட்சத்ரங்கள் எடுத்து வரும்
எண்ணம் எனக்கில்லை.
அசந்தால் ஆளைத் தள்ளி
குழி பறிக்கிற குதிரைகள் அவை.
அதில் எப்படி பயணிக்க?
கரை தொட்டு வருடிச் செல்லும்
நதியோட்டம் பார்த்தபடி
காலாற நடக்கும் விருப்பம் உண்டெனில்
வா என்னுடன்.
வேறெதும் கொண்டு தர இயலாது.
ஒன்று நிச்சயம்.
நடந்து நீ களைத்தால்
உனைச் சுமந்து நடப்பேன்.
தாகித்தால் இரு கை குவித்து
அள்ளும் நதி நீரை
முதலில் உனக்குக் கொடுப்பேன்.

— ஷாராஜ்

கிடைத்தது



அப்பா ஒரு லட்சியத்தோடு சென்னைக்கு வந்தார். அது நடக்கவில்லை. அப்பாவுக்குக் கைகூடாமல் போன லட்சியத்தை மகள் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்கிற ஆர்வத்தில் இருக்கிறார். அவர்தான் செல்வி தீபா.

அப்படியென்ன லட்சியம்? நடிகையாக வேண்டும் என்பதுதான்!

அப்பா பெயர் : ராம்ஜி. 'வின்ஸ் கார்மெண்ட் டிசைனர்ஸ்' வின் சொந்தக்காரர். வின்ஸில் பாண்ட் - சட்டைகள், சூட்டுகள் தைத்துக் கொள்ளாத வி.ஐ.பிகளே இல்லை. ரஜினிகாந்த் முதல் பல்வேறு சினிமா பிரமுகர்களும் தொழிலதிபர்களும் கலைஞர் குடும்பம் தொடங்கி (மேயர் சூட் தைத்துக் கொடுத்தது இவர்கள் தான்) பல்வேறு அரசியல்வாதிகளும் இங்குதான் தங்களுடைய ஆடைகளைத் தைத்துக் கொள்கிறார்கள்.

''நான் நடிகனாக வேண்டும் என்கிற லட்சியத்தோடுதான் சென்னைக்கு வந்து மனோகர் நாடகக் குழுவில் சேர்ந்தேன். சினிமாவில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் இரண்டு படங்களைத் தயாரித்தேன். அதுவும் சரிப்பட்டு வரவில்லை. பிறகுதான் வின்ஸை ஆரம்பித்தேன்!'' என்று கூறும் ராம்ஜி, தமது மகளின் ஆர்வத்துக்கு எந்த வகையில் துணை

'கையளவு' வாய்ப்பு; இருப்பது கடலளவு ஆசை!

நிற்கிறார்?

''சினிமா நமக்குச் சரிப்பட்டு வராது என்பதால் அவளுடைய ஆர்வத்துக்கு நான் துணை நிற்கவில்லை. என்றாலும் அவளது ஆர்வத்துக்கு நான் தடைபோடவும் இல்லை!'' என்கிறார்.

''அப்பாவுக்கு அறிமுகமில்லாத சினிமா பிரமுகர்கள் மிகவும் குறைவு என்பதால், அவர் நினைத்தால் எனக்கு வாய்ப்புத் தரச் சொல்லிப் பலரிடமும் சிபாரிசு செய்ய முடியும். (ரஜினி சார் வீட்டுக்கெல்லாம் அடிக்கடி போய் பேசிக் கொண்டிருப்போம்!) ஆனாலும் அவருக்கு இஷ்டமில்லாததால் மறுத்து விட்டார். அதனால் எனது சொந்த முயற்சியிலேயே சினிமா வாய்ப்புத் தேட வேண்டும் என்று முடிவு செய்தேன்.

''முதலில் ஒரு ஸ்டில் போட்டோ கிராபரை அழைத்து என்னை ஸ்டில்கள் எடுத்துக் கொண்டேன். பிறகு அப்பாவுக்கு அறிமுகமில்லாத டைரக்டர் எஸ்.ஏ. சந்திர சேகர் அவர்களிடம் போய் வாய்ப்புக் கேட்டேன். 'அடுத்த படத்தில் பார்க்கலாம்!' என்று அவர் அனுப்பி விட்டார்!

''பிறகு அப்பாவோடு கார்மெண்ட் டிசைனிங் கற்றுக் கொண்டே வாய்ப்புகள் தேட ஆரம்பித்தேன். டைரக்டர் பாலசந்தர் அவர்களின் 'கையளவு மனசு' டெலிவிஷன் தொடருக்கு அப்பாதான் கார்மெண்ட் டிசைனர் என்பதால் எனக்கு பாலசந்தர் சாரின் குடும்பத்தினரோடு பழக்கம் ஏற்பட்டது. எனது நடிப்பு ஆர்வம் பற்றி அவர்களிடம் சொல்லி வைத்தேன். அவர்களுடைய சிபாரிசோ என்னவோ, பாலசந்தர் சார் என்னை நேரில் பார்க்க வேண்டுமென்று சொல்ல, நானும் போனேன். பார்த்த அவர், 'பிரேமி' தொடரில் கதாநாயகியின் சூம்மேட்டாக வருகிற ஒரு சிறு வேஷம் தருகிறேன். மூன்று நான்கு எபிஸோடுகளில் மட்டும் தான் நீ வருகிற மாதிரி இருக்கும். அதில் நீ எப்படிச் செய்கிறாய் என்று பார்த்துவிட்டு, நான் ஹிந்தியில் எடுக்கப் போகும் கையளவு மனசில் உனக்கொரு பாத்திரம் தருகிறேன்' என்றார். நானும் காத்துக் கொண்டிருக்கிறேன்!'' என்றார் தீபா.

''சரி, 'பிரேமி'யில் நீங்கள் நடித்த பகுதிகள் ஒளிபரப்பாகி விட்ட நிலையில், அதை நீங்கள் எப்படி நடித்திருப்பதாக நினைக்கிறீர்கள்?''

''நான் அதைப் பார்க்கவில்லை. என் அக்காள்தான் பார்த்தாள். பார்த்துவிட்டுப் 'பரவாயில்லை!' என்றாள். என்னுடைய ஆசையெல்லாம் எக்கச்சக்கமாக நடிக்க வேண்டும், எப்படியும் நடிக்க வேண்டும் என்பதல்ல; டீசண்டான பாத்திரங்களில் நடித்து என் அப்பாவுக்கு நிறைவேறாமல் போன ஆசையை நான் நிறைவேற்ற வேண்டும் என்பதுதான்!'' என்றார் தீபா.

''அவள் நடிகையாகிறாளோ இல்லையோ, தந்தை என்கிற முறையில் இப்போதிருக்கும் எனது கடையில், இவளுக்காக பெண்களுக்கான 'கார்மெண்ட் டிசைனிங்' பகுதியையும் ஆரம்பித்துத் தருகிற வேலைகளில் இறங்கியிருக்கிறேன்!'' என்றார் ராம்ஜி.

— பிரின்ஸ்

வண்ணப்படம் : பிரவீன்குமார்

டில்லி நியூஸ்:

பாஸ்வானின் ஏரோபிக் பயிற்சி

சினிமா நடிகர்களும், நடிகைகளும் மட்டும்தான் ஸ்டீரியோவில் பாட்டுப் போட்டு, ஏரோபிக் உடற் பயிற்சி செய்ய வேண்டுமா என்ன? இரயில்வே அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான், இப்போது தம் வீட்டில் அதி காலையில், வித விதமான ஏரோபிக் எக்சர் சைஸ்கள் செய்கிறார். வீடியோ, மிதமான இசையுடன் பலவகை எக்சர்சைஸ்களைக் காண்பிக்க, கூடவே பாஸ்வானும் இணைந்து பயிற்சிகள் செய்கிறார். ஒரு நாள் லாலுவுடன் நேருக்கு நேர் மோத வேண்டி வந்தால் இருக் கட்டுமே என்று நினைத்திருப்பார் போல! இவர் லாலுவிடம் போனில் கொஞ்சுவதைப் பார்க்கிறவர்கள் இவர் லாலு பிரசாத் யாதவின் ஆதர வாளர் என்றே கணக்குப் பிய்த்துக் கொள்ளுகிறார்கள்.

● Zee டீவியில் சந்திராசுவாமி பேட்டி கொடுத்தாலும் கொடுத்தார். முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு ஏகமாக கிலி பிடித்துக் கொண்டு விட்டது. அந்த டீ.வி. பேட்டியைப் பார்க்காத நரசிம்மராவ், Zee டீவியைக் கூப்பிட்டு, "சந்திரா சுவாமி என்ன சொன்னார்? என்னைப் பற்றி ஏதேனும் சொன்னாரா?'' என்று குடைந்து எடுத்துவிட்டார்! பார்த்தார்கள் டீவிக்காரர் கள். "பயப்பட ஒன்று மில்லை.. உங்களைப் போலத்தான் நிறையப் பேசினார். ஆனால் விஷ யம் ஒன்றுமில்லை!" என்று சமாதானப்படுத்திவிட்டார்கள்.

● உத்யோக் பவனில் தான், சட்டத்துறை அமைச்சர் அலுவலகமும் இருக்கிறது. என்றாலும் சட்டம் ஒழுங்கு ஏனோ இங்கும் கூடத் தூங்கத் தான் செய்கிறது. இரண்டு அதி காரிகளின் மாருதி கார்கள் இங்கிருந்து திருட்டுப் போய்விட்டன. "இது ஒன்றும் பிரமாதமில்லை. கார் பாகங்கள் பார்ட் பார்ட்டாக இங்கே திருட் டுப் போவது சர்வ சகஜம்!" என்கிறார் உத்யோக் பவன் அதிகாரி ஒருவர்.

● ஜனதா தள தேசிய செயலாளர் வாஸிம் அக மது, லாலு ஆதரவாளரா, ஷரத் யாதவ் ஆதரவாளரா என்று பலரும் முடியைப் போட்டு விடுவார்கள். ஆனால் லாலு, வாஸிம் அகமதின் வார்த்தை கள் எல்லாவற்றையும் இந்தக் காதில் வாங்கி, அந்தக் காதில் விட்டுவிடு வாராம்!

• பாஸ்வான்



• நரசிம்ம ராவ்



• சந்திரா சுவாமி



● மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் கழகக் கட்டட மான ஏகேஜி பவனில் ஏர்கண்டி ஷனர் எதுவும் கிடையாது. மின் விசிறி களும் வேகமாக ஓடாமல் சண்டித் தனம் செய்யும் என்பதால், அட்டை கள், நியூஸ் பேப்பர்கள் கொண்டு விசிறிக் கொள்ள வேண்டியதுதான்!

● பொருளாதார விஷயங்களில், ஐக்கிய முன்னணி அமைச்சரவை யில், பிரதமர் குஜ்ராலும், நிதி யமைச்சர் சிதம்பரமும் ஒரு பக்கம். இடதுசாரிகளும் மற்ற கட்சிகளும் ஒரு பக்கம். ஆனால் முன்-அணி யினருக்கே அதிக வலு இருக்கிறதாம்.

— நியூஸ்வாலா

வி.ஐ.பி.



படித்த வேலையில்லாத ஓர் இளைஞன், கூடி வரும் சந்தர்ப்பங்களால் ஒரு ஃபிராடு வேலை செய்து ஒரு கம்பெனியின் எம்.டி.யாக உட்காரு கிறான். நடந்திருக்கிற ஆள் மாறாட்ட சமாசாரம் எதுவும் தெரியாமல் அப்பாவியாக அமெரிக்காவி லிருந்து வந்து சேரும் இன்னொரு இளைஞன். (ஒரிஜினல் எம்.டி.) எதிர்பாராவிதமாக ஃபோர்ஜரி எம்.டிக்கே ஃபிரெண்ட் ஆகிவிடுகிறான், விஷயம் தெரியாமல். இரண்டு பேருக்கும் ஆளுக்கொரு அழ கான காதலி. போதாதா? மூச்சு முட்ட முட்ட நகைச்சுவை வாணலியில் புரட்டியெடுத்த, பிரமாத மான ரவா உப்புமா.

விறுவிறுவென்று வைகை எக்ஸ்பிரஸ் வேகத்தில் அடுக்கடுக்கான சுவாரஸ்ய சம்பவங்களால் மாளிகை கட்டிக் கொண்டே போகிறார் இயக்குநர்.

கொஞ்சம் தொய்வு விழுமோ என்று தோன்று கிற போதெல்லாம் மணிவண்ணனை வைத்து, சமகால அரசியல் கலந்து வெடிச் சிரிப்பு விருந்து வைக்கிற சாமர்த்தியத்தில் தன்னை ஒரு முக்கிய மான ஆசாமியாக அடையாளம் காட்டிக் கொண் டிருக்கிறார். சினி உலகம் கவனிக்க.

அப்பாஸுக்கு இது இரண்டாவது படம். அமெரிக்காவிலிருந்து வந்து, லோக்கல் பிக்பாக்கெட் ரம்பாவின் மனதை பிக்பாக்கெட் அடித்து, அழகாக ஆடிப்பாடுகிறார். நடிப்பு? ஓகே, ஸ்டைல் இல்லாத ஸ்டைல் என் பார்களே, அதுமாதிரி ஒரு நூதனம் காட்ட முயன் றிருக்கிறார்.

'நான் ஃபிராடு ஆசாமி, இவன்தான் ஒரிஜினல்' என்று பிரபுதேவா அனுபம்கெரிடம் சொல்லப் போகிற சமயம், இவர் சட்டென்று பிளேட்டைத் திருப்பி, ஒரு ட்விஸ்ட் தருகிறாரே அங்கே ஓர் ஒரு பக்க சிறுகதை தெரிகிறது. (பாராட்டு டைரக்டருக்கு)

படத்தில் இது மாதிரி வேறு சில அழகான சிறு கதைகளும் இருக்கின்றன. உதாரணத்துக்கு மணி வண்ணனின் முக்காடிட்ட மனைவி. அவள் முக் காட்டை விலக்கிப் பார்க்கிறவர்களெல்லாம் மயங்கி விழுகிறார்கள். அப்படி என்ன ஒரு 'சுந்தர' ரூபம் என்று நமநமத்துக் கொண்டே இருக்க, கடைசி வரை ஆடியன்ஸுக்கு அதைக் காட்டாமல் தவிர்த்திருப் பது சாமர்த்தியம்.

டைரக்டர் தவிர மேலும் இரண்டு பேர் படத் தில் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கலை இயக்குநர் பிரபாகரனும் (அபாரமான செட்டுகளுக்காக) கேமரா வில்சனும். வில்சனின் கேமராவுக்குள் ஒரு புலி உட்கார்ந்திருக்கிறதோ என்னவோ, ஷாட்டுக்கு ஷாட் அப்படியொரு அபாரமான பாய்ச்சல். ஒளியை அதன் முழு சாத்தியங்களுடன் பயன்படுத்திக் கொண்டு இந்தப் படத்தில் அவர் காட்டியிருக்கிற ஜாலங்கள் அவருக்கே கூடப் புதுசாகத் தெரியும்.

கவனமாக பிளான் பண்ணி, வலிக்காமல் முழுக்க முழுக்க ஜாலியாக ஒரு படம் தர திட்ட மிட்டுச் செயல்பட்டிருக்கிறார்கள். விளைச்சலில் வஞ்சனை இருக்காது.

— ஆர்.பி.ஆர்.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/MS (S) M4392/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN/MS/(S) 161 * Registered as a Newspaper in Srilanka